இராஜயோகம்
7 நாள் பாடமுறை



பிரஜாபிதா பிரம்மா குமாரிகள் ஈஸ்வரிய விஷ்வ வித்யாலயம்
அகில உலக தலைமையகம்: மவுண்ட் அபு, இராஜஸ்தான்
தமிழக தலைமையகம்: "சாந்திதாம்" Q-96 3வது அவின்யு,
அண்ணாநகர், சென்னை 600 040. போன்: 6266765

பாடம் 1:-

நான் யார்?

1.1 முன்னுரை:

ஓம் சாந்தி. இந்த இரு வார்த்தைகளும் ராஜயோகத்தின் சாராம்சமாகும். ஓம் என்றால் நான் ஒரு ஆத்மா, சாந்தி என்றால் அமைதி என்று பொருள். ஆகவே நான் ஓர் அமைதியான ஆத்மா என்பதே இதன் உட்பொருள் ஆகும். இருப்பினும், நாம் நமது கடந்த 24 மணி நேரத்தில், நமக்கு இருந்த மனநிலையை நோக்கினால் நாம் முற்றிலும் அமைதியான ஆத்மாவாக இருந்தோமா என்பது புலப்படும்.

ஆனால் இன்றைய சூழ்நிலையே வேறுவிதமாக உள்ளது. இந்த வாழ்க்கையில் அமைதியை தேடி அலைந்ததில் இன்று அமைதியற்ற சூழ்நிலையில் பிடிபட்டு உள்ளோம். மேலும் நம்முடைய இயற்கையான அமைதியான உணர்வை விட்டு வெகுதூரத்தில் தள்ளப் பட்டுவிட்டோம்.

ராஜயோகத்தைப் பயிற்சி செய்வதால், ஆத்மா தன் இயற்கையான அமைதியை அடைய முடிகிறது. ராஜயோகம் பற்றி பல நூற்றாண்டுகளாக அறிந்தாலும், அதைப் பயிலும் முறை சமீபத்தில் தான் எடுத்துரைக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் நம் வாழ்க்கையின் மிக முக்கிய அடிப்படையான உண்மையான நான் யார்? எப்படிப்பட்டவன்? என்பவைகளை எளிமையாக புரிந்து கொள்ள முடிகிறது.

இராஜயோகம்: யோகம் என்றால், தொடர்பு : இராஜ என்றால் மிக உயர்ந்த என்று பொருள்; இன்னொன்று ஆளுமை அதிகாரம் என்பது எல்லா யோகங்களிலும் இது மேலானது. ஆகவே இது இராஜயோகம் என்று கூறப்படுகிறது. துன்பத்திற்கும் துக்கத்திற்கும் காரணம் என் மனது தான். ராஜயோகத்தின் மூலம் கிடைக்கும் சக்தியைக் கொண்டு என் மனதை வழி நடத்துவதனால், துன்பமும், துக்கமும் அகன்று, அமைதி கிடைக்கிறது.

என்னுடைய குறிக்கோள்: என்னுடைய மனதை - என்னுடைய குணங்களை ஆரோக்கியமாக மட்டுமல்லாது, ஆடையாகிய என்னுடைய உடலையும் ஆரோக்கியமாக வைப்பதாகும்

இந்த ஞானத்தின் முதல் பாடமான நான் ஓர் ஆத்மா என்பதே இந்த இராஜயோக இறுதி நிலையை அடைவதற்கும் ஆதாரமாக உள்ளது. இராஜயோகத்தின் இறுதி நிலையை அடைய அதாவது ஆத்மாவை அனைத்துவித தீய குணங்களிலிருந்து விடுவித்து முழுமையான உன்னத நிலையை அடைவதற்கு முதல் பாடம் நான் ஓர் ஆத்மா எனும் ஆத்மா அபிமானிநிலை தான் ஆதாரமாகும்.

1.2 உடலும் - உயிரும்:

1.2 நான் என்னை கண்ணாடியில் காணும்போது இந்த ஸ்தூலமான உடற்கூறுகள் இணைந்த என் உடலைக் காண்கிறேன். ஆனால் இதற்கும் அப்பாற்பட்டு ஏதாவது உள்ளதா என அறியும்போது உயிருள்ளவை, உயிரற்றவை என்றால் என்ன என்பதை அறிய வேண்டியுள்ளது. இதை வெறும் ஸ்தூல கண்ணாடியில் பார்க்காமல் ஆன்மீக அடிப்படையில் ஆழ்ந்து சிந்திக்க வேண்டியுள்ளது.

உயிர் வாழ்வது: தான் இருப்பதை உணர்கின்ற திறனும் மேலும் சுயமாக எண்ணங்களை உருவாக்கக் கூடிய சக்தியும் இருக்குமானால் அளவற்ற உயிரோட்டமுடைய சைதன்ய மானவை என கூற முடியும். இந்த எண்ணங்களே உணர்வுகளுக்கும் அடிப்படையாக உள்ளது. இவற்றை என்னால் மட்டுமே வெளிப்படுத்த முடியும் எனும் அறிவும் உள்ளது.

இந்த உயிரோட்ட சக்திகள் சரி எது தவறு எது, உண்மை எது பொய் எது நிஜம் எது கற்பனை எது என்பதை பகுத்தறிந்து தீர்மானிக்கக் கூடிய சக்தியாக உள்ளது. ஒவ்வொரு உயிரும் தன்னுடைய கடந்த கால அனுபவங்களை பதித்து வைத்துக் கொள்ளும் சக்தி உள்ளது. இதன் ஆதாரத்தில் தான் ஒவ்வொருவருக்கும் தனிப்பட்ட குணாதிசயங்கள் உருவாகிறது. இதனால் தான் ஒவ்வொரு மனிதனின் குணாதிசயங்கள் மற்றவரிடமிருந்து தனிப்பட்டு உள்ளது.

இந்த உயிருக்கு ஆசைப்படுதல் அதாவது விரும்புதல் எனும் குணமும் உண்டு. உடலும் உடலை சார்ந்த ஸ்தூல பொருட்களிலேயே இந்த ஆசைகள் ஏற்படுமானால் மனமானது படிப்படியாக கேடு அடைகிறது. ஆனால் உடலிலுள்ள ஆத்மாவாக தன்னை உணரக் கூடிய ஞானத்தை அடைய வேண்டும் எனும் உயர்ந்த ஆசைகள் இருக்குமானால் மனம் மீண்டும் தன்னுடைய உண்மையான சிரேஷ்டமான நிலையை அடைகிறது. இந்த இச்சைகளே நம்முடைய செயல்களுக்கு ஆதாரமாக உள்ளது.

உயிரற்றது (ஜடப் பொருள்) :

உயிருள்ள மற்றும் உயிரற்ற பொருட்களை பார்ப்போமானால் நான் உயிருடையவன் என்றும், என்னைச் சுற்றியுள்ள சிந்திக்கத் தகுதியற்ற ஜடப்பொருட்கள் அனைத்தும் உயிரற்றவை என கூறலாம். நான் என்பதற்கும் உயிரற்ற ஜடப் பொருள்களுக்கும் பல வித்தியாசங்கள் உள்ளன. உதாரணமாக நம் உடலையே எடுத்துக் கொள்வோம்.

உதாரணமாக நான் கத்தியைக் கொண்டு பழம் ஒன்றை நறுக்கும்போது அக்கத்தி எந்த முடிவையும் எடுப்பதில்லை. கை தவறி அக்கத்தியால் விரலில் காயம் ஏற்பட்டால்....கத்தியோ, கைவிரலோ உணர்ச்சிவசப்படுவதில்லை. அவை வெறும் கருவிகள் தான். கத்தியைக் கருவியாக ஏற்றுக் கொள்வது எளிது. ஆனால் விரலைக் கருவியாக ஏற்றுக் கொள்வது மிகக் கடினம். இவ்வளவு ஆழமாக உடலின் மேல் பற்று வைத்திருப்பதால், என்னுடைய உண்மையான அடையாளமே மறந்து விட்டது. ஆனால் இந்த கையும் ஒரு கருவி தான்.

ஒரு தவறு: எப்பொழுது இந்த உடலில் வந்தேனோ அன்று முதல் என் உடற் கூறுகளுக்குத் தக்கவாறு முத்திரையிடப்பட்டேன். நீ ஒரு சிறுவன், நீ ஒரு சிறுமி, என்னுடைய உணர்வால் புகுத்தப்பட்டது. அதே உணர்வால் வளர்ந்தும் விட்டேன். இன்று நாம் ஆண், பெண் என்று அடையாளப்படுத்துவது சரிதானா எனும் கேள்வியை எழுப்பினால் அதை ஒரு பெரிய அவமானமாகவே கருதுவார்கள். அப்படியானால் நான் என்பது இந்த உடலா, என்னை இளையவன், முதியவன், ஆண், பெண், கறுப்பு, சிவப்பு, என்பது சரியான அடையாளம் தானா இவற்றின் மூலம் உண்மையில் நான் யார் என்பதை உணர முடியுமா?

என்னை ஒரு சரீரம் என்று உணர்ந்து இருந்தால் இந்தத் தவறுக்கு மற்றவர்கள் மட்டு மல்லாமல் நானும் பொறுப்பாவேன். மற்றவர்கள் இந்த சரீரத்தின் அடையாளங்கள் என்ற கூண்டிற்குள் கட்டுபடுத்தியது மட்டுமல்லாமல் என்னை இன்று வரையும் இந்த உடல் என நம்பியதால் மற்ற அனைத்து சாத்திய கூறுகளுக்கான வாய்ப்பை மூடிவிட்டேன்.

1.3 நான் என்பதன் மறு கண்டுபிடிப்பு:

நான் தான் உயிர் வாழ்பவன்; நான் ஒரு பௌதீகப் பொருள் அல்ல. என்னால் இந்த பௌதீக எல்லைக்கு அப்பாற்பட்டதையும் உணர முடிவதால், நான் இந்த உடல் அல்ல. என் உடல் தன் இளமைப் பருவத்திற்கு மீண்டும் திரும்ப முடியாது. ஆனால் நான் என்னுடைய மனம் மூலம் ஒரு நொடியில் என்னுடைய குழந்தை பருவ காலத்திற்கு செல்ல முடியும். மேலும் என்னுடைய வருங்கால முதிய நிலையும் எப்படி என்பதையும் யூகிக்க முடியும். நான் முக்காலங்களிலும் எவ்விதத் தடையும் இன்றி பிரயாணம் செய்ய முடியும். ஒரு வினாடியில் எவ்வளவு தூரம் வேண்டுமானாலும் பயணம் செய்ய முடியும். என்னுடைய எண்ணங்கள் மூலம் வெகு தொலைவில் உள்ள அமெரிக்கா, ஆஸ்திரேலியா போன்ற இடங்களுக்கும் செல்ல முடியும். எங்கு இழுக்கப்படுகிறதோ அங்கு என் எண்ணங்கள் என்னைக் கொண்டு செல்லும். இத்தருணத்தில் என் உடல் இதே இடத்தில் தான் இருக்கிறது. என் உடல் பௌதீகக் கூறாகும்; ஆனால் நான் அவ்வாறு அல்ல. காலத்திற்கும், தூரத்திற்கும் அப்பாற்பட்டவன்.

இவ்வுடல் உயிர் வாழ எவ்வாறு உண்பது, சுவாசிப்பது போன்ற இயற்கையான தன்மைகளைப் பெற்றிருக்கிறதோ, அவ்வாறே நான் (ஆத்மா) தனிப்பட்ட குண நலன்களுடன் வளர்கின்றேன். என்னுடைய குணங்கள் என்னுடைய பெற்றோருடையதை விட முற்றிலும் மாறுபட்டிருப்பதால் இக்குணங்கள் நான் இவ்வுடலில் தோன்றுவதற்கு முன்பே அமைந்திருக்க வேண்டும்.

உருவம்

நான் யார்? உடலைவிட்டு நீங்கி, என்னுடைய உண்மையான உருவத்தைத் தேடும்போது, இவ்வுடலில் இருந்து பற்றற்று இருக்கிறேன். என்னைப் பற்றி உண்மையில் நான் யார் என்று தெரியாத நிலையில், எனக்குப் பழக்கமான சூழ்நிலையான இந்த உடலைவிட்டு நீங்குகின்றேன். இன்னும் ஒருபடி மேலே சென்று என்னை நான் பௌதீகத்திற்கு அப்பாற்பட்ட உருவத்தில் ஒரு சிறிய புள்ளி வடிவான ஒளியாக ஒரு புள்ளிவடிவான சக்தியாக எண்ணுகிறேன். இது உண்மையாக இருக்குமா? நான் ஒரு ஆண், அல்லது பெண் என்று எண்ணாமல் ஒரு சக்தி மிகுந்த புள்ளி வடிவான ஒளியாக இருக்கின்றேன் என்று எண்ணுவது புதுமையாக உள்ளது அல்லவா?

மேலும் நான் கண்ணுக்கு புலப்படாதவன், கண்ணாடியில் என்னுடைய சரீரத்தின் அவயவங்களை அதாவது என்னுடைய முகம், கண்களின் நிறம், ஆகியவை மட்டுமே காண முடிகிறது. ஆனால் இந்த வெளிப்படையான அடையாளங்களால் என்னுடைய உண்மையான அடையாளத்தை மிகக் குறைவாகவே தெரிவிக்கிறது. நான் இந்த ஸ்தூல சரீர கூண்டில் இருக்கும் ஆத்மா..... நான் கண்ணுக்கு புலப்படாதவன். நான் இப்பொழுது என்னை சூட்சுமமான அழியாத கண்ணுக்கு புலப்படாத சக்தி என்பதை உணர முடிகிறது.

அனுபவம்

இதை ஆராய்வோம். ஆமாம்; இது ஒரு சாசுவதமான, காலம், தூரம், நீளம், அகலம் போன்ற பரிமாணங்களுக்கு அப்பாற்பட்ட, தனித்தன்மையுள்ள ஒரு புள்ளி. கண்ணுக்குப் புலப்படாத, உணர மட்டுமே கூடிய புனித சக்தியுள்ள புள்ளி இது. இவ்வாறு என்னை எண்ணிக் கொள்வது

புதுமையாக உள்ளது. இவ்வாறு என்னுடைய புதிய அடையாளத்தை ஆழ்ந்து நோக்கும் போது, என் நெற்றியின் நடுவில் ஒரு ஒளிமயமான புள்ளியாக நான் இருப்பதை உணர்கிறேன்.

இருப்பிடம்:

நான் எங்கிருக்கிறேன்? உடலைக் கட்டுப்படுத்தும் உறுப்புகளுக்கு அருகில் உலகில் தொடர்பு கொள்ளத் தேவையான அங்கங்களுக்கு அருகில் என் நெற்றியின் மத்தியில் இருந்து என் உடலைக் கட்டுப்படுத்துகிறேன்.

இயங்குதல்:

மூளை மின் அதிர்வின் மூலம் செயலாற்றும் ஓர் உறுப்பு. ஆத்மாவான நான் முடிவெடுக்க அம் முடிவு உடனடியாக மூளையை அடைகிறது. அது உடல் முழுவதும் செயலாக உருமாறுகிறது. என் உடல் உணர்வுகளின் தூண்டுதல் மூளையை அடைந்து, மூளையில் முன் அதிர்வு ஏற்பட்டு, அது ஆத்மாவை அடைகிறது. இதனால் புத்தி முடிவெடுக்கிறது. செயல்கள் விளைகின்றன. ஆத்மாவாகிய நான் கட்டுப்படுத்துபவன். கட்டுபாட்டு அறையான மூளை மூலம் நான் செயல் படுகின்றேன்.

மூன்றாவது கண்

இந்த இடத்தில் தான் உடலில் உண்மையான முன்பு இருந்ததாகக் கூறப்படும் ஞானம் என்ற மூன்றாவது கண் இருக்கிறது. ஆனால் உடல் கூறு சம்பந்தப்பட்ட பௌதீகமானது அல்ல. மூன்றாம் கண்ணும் உடல் கூறு சம்பந்தப்பட்ட பகுதி அல்ல. ஆத்மா தான் ஞானத்தைத் தேடித் தன்னிடம் இருக்குமாறு செய்கிறது. ஆன்மீக மொழியில் மூன்றாம் கண் திறப்பது என்பது, தன்னைத்தான் அறிவது அல்லது ஆத்ம ஞானம் என்று கூறப்படுகிறது.


இரவின் இருட்டில் பலர் பார்க்க முடியாததால் தடுமாறுகின்றனர். அறிவு பூர்த்தியாக இல்லாவிட்டால், கண் மனதை ஏமாற்றுகிறது. புத்தி சரியான முடிவெடுக்கத் தவறுகிறது. ஞானம் என்பது ஒளி போன்றது. மூன்றாவது ஞானக் கண் திறந்தவுடன் மனதில் இருள் அகன்று ஒளி மிகுகின்றது. மூன்றாம் கண் மூலம் தான் நான் செய்ய வேண்டியவற்றை அறிகிறேன். இதுவரை உடல் சார்ந்த இரு கண்களையே உபயோகித்து உலகின் கனபரிமாணங்களையே அறிய முடிந்தது. மூன்றாவது கண் மூலம் பௌதீகத்திற்கு அப்பாற்பட்டவற்றைப் பார்க்க முடிவதால் நான் எனக்கு முழு அதிகாரி ஆகிறேன்.

1.4 ஓட்டுபவர் மற்றும் வாகனம்:

ஓட்டுபவர் முழு உணர்வோடு இருந்தால் தான் அவரது வாகனத்தைச் செலுத்தி செல்ல வேண்டிய இடத்தை அடைய முடியும். இந்த உதாரணம் மூலம் வாகனம் ஓட்டும்போது கட்டுப்பாடுடன் இருப்பதற்கும், உறங்கிவிடுவதற்கும் உள்ள பெரிய வித்தியாசத்தை அறியலாம்.

ஓட்டுபவர் தான் என்ன செய்கிறோம் என்ற உணர்வில் இருந்தால், அவர் எங்கு வேண்டுமானாலும் செல்லலாம். சாலையில் செல்லும்போது, ஒரு முகப்படுத்துவதில் சிறிது கவனம் குறைந்தாலும், ஒரு வினாடி மனதை அலையவிட்டாலும், அவரது வாகனம் சாலையை விட்டு அகன்று விபத்தில் சிக்கிக் கொள்கிறது. மக்கள் தாங்கள் என்ன செய்கிறோம் என்பதை மறந்து விடும்போது விபத்துக்கள் ஏற்படுகின்றன.

இவ்வாறே யாராவது சிறிது நேரமே சுயக்கட்டுப்பாட்டை இழந்தாலும், விபத்து (கோபம்) ஏற்பட்டு, தனக்கும், தன்னைச் சார்ந்த மற்றவர்களுக்கும் துன்பம் ஏற்படுகிறது. வாகனத்தில் இருந்தவர்களுக்கு ஏற்பட்ட சேதத்தைப் பார்த்த மக்களும் மனம் கலங்குகின்றனர். ஆகவே ஆத்மாவிற்கும் (ஓட்டுபவர்), அவரதுஉடலுக்கும் (வாகனம்) அறிவும், சீரான ஒத்துழைப்பும் அவசியம். எவ்வாறு ஓட்டுபவர் தன் வாகனத்தை உணர்ந்து ஓட்டுகிறாரோ, அவ்வாறே ஆத்மா, தன் உடலைக் கட்டுப்பாடுடன் செலுத்த வேண்டும். இதுவரை நான் உறங்கிவிட்ட தாலும், என்னைப் பற்றி உணராததாலும் பல விபத்துக்கள் ஏற்பட்டன. எனக்கும், என்னைச் சார்ந்த மற்றவர்களுக்கும், மிகுந்த வேதனை யைக் கொடுத்துவிட்டேன். ஆனால் இப்பொழுது என் உள் உணர்வின் விழிப்பி னால் ஓட்டுபவராகிய நான் விழித்தெழுந்து, மறுபடியும் கட்டுப்பாட்டைக்கைக் கொண்டு என் வாகனத்தைச் சரியான முறையில் செலுத்துகிறேன்.



கட்டுப்பாடுடன் செயல்படுவது:

நான் ஒரு ஆத்மா என்ற உள்ளுணர்வின் மூலம், என் புலன்களை சரியாகப் பயன்படுத்தி, தீயவற்றிலிருந்து நல்லவற்றை, பயனுள்ள செயல்களிலிருந்து பயனற்றவைகளைப் பிரித்தெடுத்து, அனைத்து செயல்களையும் நல்லதாக மாற்றிக் கொள்கிறேன். இது மற்றவர் களுக்கு உதவியாகவும், மேலும் என்னுடைய உள்ளுணர்வை உயர்த்துவதாகவும் இருக்கிறது. நான் என்னை அறிந்துள்ளதால், என்னுடைய புலன்களை நானே அடக்கி ஆள்பவனாகிறேன்.

இதுவரை என் கண், காது போன்ற புலன்கள் என்னைத் தங்கள் இஷ்டப்படி இயங்க வைத்து என்னைத் தங்களுக்கு அடிமையாக்கியிருந்தன என்பதை நினைக்கும்போது புதுமையாக உள்ளது. ஆத்மாவை மறந்து உடலை முன் வைப்பது, வண்டியை குதிரைக்கு முன் கட்டுவது போலாகும். ஞானம் தான் சக்தி, இந்த ஞானத்தின் மூலம் என் இந்த உடலின் மேல் மீண்டும் என் ஆட்சியை நிலை நிறுத்துகிறேன்.

1.5 ஆத்மா எவ்வாறு இயங்குகிறது:

நான் யார் என்பதை மறந்ததால் ஏற்பட்ட விளைவுகளைப் பார்த்தும், அனுபவித்தும் ஆன பிறகு, புள்ளிவடிவான ஒளியினுள், இந்த துல்லியமான நான் என்ற ஆத்மாவினுள் என்ன நடக்கிறது என்பதைப் பார்ப்போம். ஒவ்வொரு ஆத்மா விலும் 3 அங்கங்கள் உள்ளன. இவற்றை

விவரிக்கும்போது ஆத்மாவைப் பற்றிப் புரிந்து கொள்ளாததால் ஏற்பட்ட விபத்துகளும், ஆத்மா திரும்பவும் எவ்வாறு தன் புலன்களைக் கட்டுப்படுத்த இயலுகிறது என்பதும் தெளிவாகப் புரியும்.

ஒவ்வொரு அங்கத்திற்கும் வெவ்வேறு பெயர்கள் இருப்பினும் அதே சக்தி தான் மூன்று வெவ்வேறு நிலையில் இயங்குகிறது. அவைகளாவன, 1. மனம், 2.புத்தி 3. சம்ஸ்காரம் அல்லது பதிவுகள்.

மனம்:

மனதின் மூலம் ஆத்மா நினைக்கிறது, எண்ணிப் பார்க்கிறது, யோசனைகளை உருவாக்கு கிறது. நம் எண்ணங்கள் மனதில் தான் உருவாக்கப்படுகின்றன. நம் உணர்ச்சிகளுக்கு, விருப்பங்களுக்கு, உணரும் தன்மைகளுக்கு, நாம் எண்ணிப பார்க்கும் சக்தியே காரணம் ஆகும். மனதின் மூலம் நம் எண்ணங்களை எங்கு வேண்டுமானாலும் செலுத்தலாம். முன் அனுபவங்களை நினைக்கலாம். சந்தோஷம், துக்கம் ஆகியவற்றை உணரலாம். மனம் ஒரு சூட்சுமமான அங்கம் அல்லது உறுப்பு. இரத்த ஓட்டத்திற்குத் தேவையான உடல் உறுப்பான இருதயத்தோடு இதை ஒப்பிட்டுத் குழப்பலாகாது.

ராஜயோகத்தின் மூலம் மனதைக் கட்டுப்படுத்தலாம்.

புத்தி:

இவ்வங்கம் எண்ணங்களை எடைபோடுகிறது. புரிந்து கொள்ளும் சக்தியுள்ள உறுப்பு இது. புரிந்து கொள்ளும் சக்தியானது நம்மால் செய்யக் கூடியவற்றுள் மிகத் துல்லியமான ஒரு சக்தியாகும். புத்தி விசாலம் ஆகும்போது எதையும் புரிந்து கொள்ளும் சக்தி ஏற்படுகிறது.


புத்தியானது நாளடைவில் வளர்ந்து உயர்வடைகிறது. வளர்க்கப்பட்டு உயர்த்தப்படு கிறது. அது புரிந்து கொள்ளும் சக்தியுடன், காரணங்கள் அறிவது, நினைவுகள், பகுத்தறிந்து நோக்குதல், முடிவு செய்தல் போன்ற பல சக்திகளைக் கொண்டிருக்கிறது. ஆத்மாவின் அங்கமான புத்தியும் ஒரு சூட்சுமமான, பௌதீகத் தன்மைக்கு அப்பாற்பட்டது. இதை மூளை என்று நினைத்துக் குழப்பம் அடையக் கூடாது. நரம்பு மண்டலத்தின் தலையாய மூளை, ஆத்மாவின் கீழ் இயங்கும் கட்டுப்பாடு செய்யும் ஒரு கருவியே ஆகும். இந்த உடல் சார்ந்த கட்டுப்பாடு செய்யும் கருவியான மூளை மூலம் நான் என்ற ஆத்மா, என் உடலின் வெவ்வேறு அங்கங்களைக் கட்டுப்படுத்துகிறது. வெளியுலக வாழக்கையின் சூழ்நிலைகளில் ஆத்மா நான் எதிர்கொள்ளும் போது சுகம், அல்லது குழப்பம் ஏற்படுகிறது. அதனால் இதற்கேற்றபடி என் உடலின் நாடித் துடிப்பு மற்றும் சுவாசமும் மாறுகிறது. ஆகவே, புத்தியென்பது உடல் சார்ந்த மூளை அல்ல, சூட்சுமமான பகுத்தறியும் சக்தியுள்ள நான் என்ற ஆத்மாவாகும்.

எண்ணங்களின் சுழற்சி:

கர்ம பதிவுகள் ஒவ்வொரு செயலும் ஆத்மாவில் ஒரு அடையாளத்தை பதிக்கிறது. இத்தகைய பதிவுகளை சம்ஸ்காரம் என குறிப்பிடுகிறோம். நம்முடைய பழக்க வழக்கங்கள், சுவாசம், உணர்வுகள் மற்றும் மன நிலை தம் தனிப்பட்ட குணாதிசயம் ஆகிய சம்ஸ்காரங்கள் நம்முடைய ஒவ்வொரு செயலின் ஆதாரத்திலேயே உருவாகிறது.

என்னுடைய ஒவ்வொரு செயலும் புதிய அடையாளத்தை (பழக்கத்தை) உண்டாக்குகிறது அல்லது பழைய அடையாளத்தை அழுத்தமுறச் செய்கிறது. இது வரை நடந்த நம்முடைய

செயல்கள், எண்ணங்கள் ஆகியவை முழுவதும் சம்ஸ்காரங்களில் பதிவு செய்யப் பட்டிருக்கிறது. இந்த சம்ஸ்காரம் தான் என்னிடம் இப்பொழுது உதிக்கும் எண்ணங் களுக்குக்காரணம் ஆகிறது. ஆகவே நான் தான் என்னுடைய எண்ணம், வாக்கு, செயல்களுக்கு முழுப் பொறுப்பு ஏற்க வேண்டும். ஆனால் இதற்கு சந்தர்ப்ப சூழ்நிலைகள் தான் காரணம் என்று நம் பொறுப்பைத் தவிர்க்கப்பார்க்கிறோம்.



ஒரே செயலைத் திரும்பத் திரும்பச் செய்யும்போது, அது ஒரு ஆழமான அடையாளத்தை, பதிவை, பழக்கத்தை ஏற்படுத்துகிறது. ஆழமான பள்ளத்தை நிரப்புவதும் சிரமம், அதுபோல் பழைய பழக்கங்களை மாற்றுவதும் மிகச் சிரமம்.

சம்ஸ்காரத்தினால் மனம் புத்தியில் ஏற்படும் விளைவுகள்:

ஒரு வாகன விபத்தில் நீங்கள் ஒரு பார்வையாளராக இருப்பதாக நினைத்துக் கொள்ளுங்கள். விபத்து நடந்த இடத்திற்குப் பலர் விரைகின்றனர். காட்சி ஒன்றாக இருந்தாலும், தத்தம் சம்ஸ்கார பழக்கத்தின் ஆதாரத்தில் ஒவ்வொருவரும் ஒவ்வொரு விதமாகச் செயல்படுகின்றனர். உதாரணமாக, ஒருவர் அடிபட்டவரைப் பரிசோதிக்கிறார். ஆகவே அவர் ஒரு மருத்துவர் என்பதை அறியலாம். வேறு ஒருவர் அமைதியாகப் பார்வை யாளர்களைக் கேள்விகள் கேட்கிறார். அவர் ஒரு போலீஸ்காரர். மற்றும் ஒருவர் சிதைந்த வாகனத்தைக் கூர்ந்து கவனிக்கிறார் அமைதியாக. அவர் ஒரு பழுது பார்க்கும் நபர். மற்றொருவர் தொழில் நுட்ப சேதத்தைப் பார்த்து மனம் கலங்குகிறார் அவர் விபத்து பாதிக்கப்பட்ட ஒருவரின் நண்பர்.

நிகழ்ச்சி ஒன்றாக இருப்பினும் பலர் பலவிதமாக நடந்து கொள்கிறார்கள். வெவ்வேறு சம்ஸ்காரங்களே இந்த வேறுபாட்டிற்குக் காரணம். என் முன் அனுபவத்தில் இருந்து, என் மனநிலைதான் என்னுடைய எண்ணங்களைக் கட்டுப்படுத்துகிறது என்று புரிந்து கொண்டேன். உதாரணமாக ஒரு நாள் என்னுடைய அனைத்து விஷயங்களும் தவறான விளைவுகளை ஏற்படுத்துகின்றன. அன்று என்னுடைய உள் மனம் ஸ்திரமாக மற்றும் சக்தி வாய்ந்ததாக இருப்பதால் என்னால் அமைதியாகவும், பொறுமையாகவும் இருக்க முடிந்தது. ஆனால் மற்றொரு நாள் என்னுடைய மனம் ஸ்திரமாக இல்லாது இருக்குமானால் அன்று யாராவது சிறிது தவறாகப் பேசினாலும் என் மனது கோபமடையலாம். இந்த தவறுக்கு காரணம் பேசியவர் வார்த்தைகள் அல்ல ஆனால் அன்று என்னுடைய மனநிலையில் ஏற்பட்ட விளைவாகும்.

1.6 இன்று நம் நிலை என்ன?

தீய முன் வினைகள் உண்டாகி, மீண்டும் மீண்டும் அதைத் தொடர்ந்து செய்வதன் மூலம், நம் மனசாட்சி மறைந்து, நாம், நம் புலனின்பத்திற்கு அடிமையாகிறோம்.

புலன் உணர்வுகளால் தீவிரமாக ஈர்க்கப்பட்ட மனமானது, என் புத்தியின் நல்ல ஆலோசனைகளைப் புறக்கணிக்கிறது. அகவே, சிறிது காலத்தில் மனச் சாட்சி வலிமையிழந்து சுட்டிக் காட்டும் சக்தியையே இழந்துவிடுகிறது. இவ்வாறு மனச்சாட்சி புறக்கணிக்கப் படுவதால் அறியாமை தலை தூக்குகிறது.

ஆகவே, பல நேரங்களில் நற்செயல்களுக்கும், தீய செயல்களுக்கும் உள்ள வேறுபாட்டை நம் புத்தியால் நிச்சயிக்க முடியாததால், தீய செயல்கள் அதிகரித்து, அநீதி தான் உலகில் நிலவுகிறது.

செயல்கள் புனிதத் தன்மை இழப்பதால், சந்தோஷம், தன்னிறைவு குறைந்து, மன அமைதியும் கேடு அடைகிறது. நான் ஒரு ஆத்மா என்ற ஞானம் இல்லாததால், சம்ஸ்காரங்களில், உடல் உணர்வு ஆழமாகப் பதிந்துவிட்டால், ஆத்மா, ஜடப்பொருள்களில் அமைதியை, சந்தோஷத்தைத் தேடுகின்றது. தனக்குள்ளேயே திருப்தியை, அமைதியை காண இயலாததால் ஆத்மா ஸ்தூலமான பொருட்களின் மூலம் சந்தோஷத்தை அடைய முயலுகிறது. இதனால் முழு திருப்தி அளிக்காத அல்ப கால சந்தோஷத்தை மட்டுமே அனுபவம் செய்கிறது. இத்தகைய குழப்பமான சூழ்நிலையில் எதிலாவது சிறிதாவது சுகம் கிடைக்கும் எனத் தேடுகிறது. இவ்வாறு வாழ்க்கையில் மிகத் தாழ்ந்து புலனின்பத்தை லயிக்க விரும்புகிறது. இதனால் அல்ப கால சந்தோஷத்தையே அனுபவம் செய்கிறது. இதனால் ஆத்மா, மேலும் மேலும் திருப்தியற்ற நிலையில் சிக்கிக் கொள்கிறது.

இத்தகைய உள் மனக்குழப்பம், இன்று உலகில் நாம் காணும் சாதாரணமான ஒரு காட்சி யாகும். நாம் நம் மனதை எவ்வளவுக்கெவ்வளவு வெளியே செலுத்துகிறோமோ, அவ்வளவுக் கவ்வளவு துன்பத்திலும், விரக்தியிலும், சிக்கிக்கொள்கிறோம். நம் மனம் புலன்களுக்கு அடிமையாகிவிட்டதால், நம் மனதைக் கட்டுப்படுத்தும் சக்தியற்றிருக்கிறோம்.

1.7 ஆத்ம உணர்வில் முதல் படி:

இது வரை விவரிக்கப்பட்ட சூழ்நிலை துன்பம் தரக்கூடியதாக இருப்பினும், இதையே உண்மையெனப் பலர் நினைக்கின்றனர். இது இவ்வாறு அமைய வேண்டிய அவசியம் இல்லை. இதற்கு முதல்படி புத்தியை அதாவது முடிவெடுக்கும் சக்தியை விழிப்புறச் செய்வது தான். இது மிகச் சுலபம்.

கடிவாளம் இல்லாத குதிரை:

நான் ஒரு ஆத்மா என்பதை உணர்வதால், உலகில் என்னுடைய உண்மையான நிலையை அறிகிறேன். இந்த உணர்வில் என் எண்ணங்களைக் கட்டுப்படுத்தவும், சீரமைக்கவும் என்னால் தான் முடியும் என்பதைப் புரிந்து கொள்கிறேன். மனதை ஒரு அடக்கப்படாத குதிரையுடன் ஒப்பிடலாம். ஏன் என்றால் அக்குதிரை மிகுந்த சக்தியுடன், ஒரு இடத்தில் நிற்காமல் சுற்றிச் சுற்றி ஓடிவரும். மனம் இரவு பகல் எல்லா நேரங்களிலும் ஏன் உறக்கத்திலும் ஓடிக்கொண்டே இருப்பதால், அது சீக்கிரம் சோர்வடைந்துவிட்டதில் வியப்பொன்றுமில்லை. இருப்பினும் அது

தன்னைச் சாந்தப்படுத்தும் வழி அறியவில்லை. என் உடலைப் படுக்கையில் கிடத்துவதன் மூலம் ஓய்வு அளிக்கலாம். ஆனால் மனம் வேகத்தைக் குறைக்க மறுக்கிறது. மனமானது தான் போகும் திசை கூட அறியாமல் ஓடிக் கொண்டே இருக்கிறது.

உணர்தல்:

நான் என்பது இவ்வுடல் அல்ல, உடலில் உள்ள சக்தி என்பதைப் புத்தியானது பகுத்தறியும்போது, நான் இந்தச் சக்தியை உபயோகிக்க முடிகிறது. இவ்வுண்மையை உணரும் போது, என்னுடைய எண்ணமாகிய குதிரைக்குக் கடிவாளம் போட இயலுகிறது. இவ்வாறு நான் என் எண்ணங்களைக் கட்டுப்படுத்தி, சக்தியை வீணே விரயம் செய்யாமல், ஒரு நல்ல திசையில் செலுத்த முடிகிறது.

தேர்ந்தெடுப்பது

என்னுடைய கட்டுப்படுத்தும் சக்தியை நான் மீண்டும் அடைவதால், வெறும் சிற்றின்பம் கொடுக்கும் எண்ணங்களை விடுத்து, என்றும் சாசுவதமான பேரின்பம், திருப்தியைக் கொடுக்கும் எண்ணங்களையே நான் தேர்ந்தெடுக்கிறேன். பரிசுத்தமான எண்ணங்களைச் செயல்களாக மாற்றும்போது, பரிசுத்தமில்லாத மன அமைதியை அழித்து வந்த பழைய கர்ம கணக்குகள், பழக்கவழக்கங்கள் மறைந்து, நற்செயல்களே உருவாகின்றன. கவலை, சங்கடம் ஆகியவற்றிற்குப் பதிலாக அமைதி, நிதானம் ஆகிய எண்ணங்களே உள்ள ஒரு நிலையை அடைகிறேன்.

பலன்:

ஆரம்பத்தில் சிரத்தையுடன் மனதைக் கட்டுப்படுத்த வேண்டியிருந்தாலும், இது ஒரு உன்னதமான மாறுதலை குறுகிய காலத்தில் உண்டாக்குகிறது. இது ஒரு புறச்சக்தியோ, கட்டுப்பாடோ அல்ல. இது என்னுடைய இயற்கைக் குணம். என் செயல்களும் உயர்த்தப் படுகின்றன. இதனால் ஒரு கால கட்டத்தில் உயர்ந்த எண்ணங்கள் மட்டுமே என் மனதில் இருக்கிறது. அது எனக்கு மட்டும் சந்தோஷத்தைக் கொடுப்பது மட்டுமல்லாமல், என்னைச் சார்ந்த மற்றவர்களுக்கும் சந்தோஷத்தைக் கொடுக்கும் நிலையை அடைகிறேன்.

என்னுடைய புத்தியின் விழிப்புணர்ச்சியால் தவறு ஏற்படும் முன்பே, என்னுடைய எண்ணங்களைப்பரிசோதித்து, இது வரை நடைமுறைக்குக் கொண்டுவர முடியாத பல மாற்றங்களை என் வாழ்க்கையில் செய்ய முடிகிறது.

புதிய பழக்க வழக்கங்களை (வினைகளை) வளர்ப்பது

வெகுகாலமாக நான் உடல் உணர்விலேயே இருந்துவிட்டதால், நான் ஒரு ஒளிமயமான புள்ளிவடிவான ஆத்மா என்ற உணர்வு அடிக்கடி என்னை விட்டு நழுவி விடுகிறது. நான் இந்த உள் உணர்வை மிகச் சிரமத்துடன் நிலை நிறுத்த வேண்டி இருக்கிறது. ஆகவே நானே எனக்கு உபதேசித்துக் கொள்ளும் ஒரு புதிய பழக்கத்தைக் கடைப்பிடிக்கிறேன். என்னைச் சுற்றியுள்ளோர் என்னை ஒரு உடல் என்று எண்ணுகிறார்கள். ஆனால் நான் ஒரு அமைதியான, சாசுவதமான கண்ணுக்குப் புலனாகாத ஆத்மாவாக உணர்ந்து இந்த உடலை ஒரு கருவியாக உபயோகிக்கிறேன் என்று நான் எனக்குள் சொல்லிக் கொள்ள வேண்டும். நான் இந்த நிலையில் இருக்கும் வரையில் சுதந்திரமாக இருக்கிறேன். இந்த உன்னதமான மனநிலையில் நிலைத்து, நான் செய்யும் செயல்கள் நன்மை பயப்பதாகவும், சரியானதாகவும் இருக்கும்.

மற்றவர்களும் ஆத்மாக்கள் என்று நான் தெரிந்து கொள்வதால், அவர்களும் என் சகோதரர்களாகிறார்கள். இதனால், அகந்தையால் வரும் குழப்பங்கள் இல்லாமல், நான் மற்றவர்களுடன் சந்தோஷமான சீரான ஒரு நல் உறவை ஏற்படுத்த முடிகிறது. நான் மற்றவர்களை ஆண், பெண் என்ற உருவ வேறுபாட்டுடன் பார்க்காமல் எல்லோரும் சரீரத்திற்கு அப்பாற்பட்ட என்னைப் போன்ற ஆத்மாக்கள் என்ற உணர்வுடன் நோக்கினால் தான் இது நடைமுறையில் சாத்தியம் ஆகும்.

1.8 தியானம்: புத்தியைச் சீரமைப்பது:

நெற்றியின் நடுவில் உள்ள, நான் என்ற இந்த உண்மையான, ஒளிமயமான புள்ளியில், நமது எண்ணங்களை ஒரு முகப்படுத்தி, அமைதியாக சிறிது நேரத்தைச் செலவிடுவதன் மூலம், நெற்றியில் பிரகாசிக்கும் ஒளியுள்ள சக்தியை உணர முடியும். இதன் மூலம் அடுத்து காரியங்கள் செய்யும் வேளையில், நொடிப் பொழுதில், இவ்வுணர்வை அடைந்து, அதில் நிலைக்க முடியும்.

நீங்கள் தியானிக்கும் அறையில் மிதமான ஒளி பரவச் செய்யுங்கள். சில நிமிடங்கள் சௌகரியமாக அமர்ந்திருக்கவும், மனதில் தியானம் செய்ய சில எண்ணங்கள் கீழே தரப்பட்டுள்ளன. அமைதியாக இந்த எண்ணங்கள் மனதில் ஊடுருவிச் செல்லுமாறு செய்யுங்கள். அப்பொழுது நீங்கள் ஆத்ம உணர்வை அனுபவிப்பீர்கள்.

தியானத்திற்கான சில எண்ணங்கள்:

உண்மையான நான் என்ற ஒளிமயமான-புள்ளியான ஆத்மாவை நோக்கி, எண்ணங்களையும் மனதையும் செலுத்துங்கள்: நான் ஒரு ஆத்மா.....நான் ஒரு புள்ளிவடிவான.... ஜோதி வடிவம்...... .ஒரு சக்திமிக்கபுள்ளி.... .நான் என்னுடைய நெற்றியின்... இரு புருவங்களுக்கும் நடுவில்..... இருக்கிறேன்..... இது தான்.... உண்மையான..... நான்..... என்பது..... இந்த உடல்..... ஒரு.... .ஆடை தான்.... என்னுடைய சக்தியில்..... என்.... உடலை..... உபயோகிக்கிறேன்....என்னை..... வெளிப்படுத்த..... .என்னுடைய குண நலன்களை வெளிப்படுத்த..... இந்த..... உடல்..... எனக்கு..... பயன்படுகிறது.

என்னுடைய.... உண்மையான..... உருவத்தை..... நான்..... உணர்கிறேன்..... என்னுடைய சிறைக் கதவுகள் திறக்கப்படுகின்றன..... நான் சுதந்திரம் அடைகிறேன்...ஒரு பறவை போல நான் மீண்டும் பறக்க முடிகிறது..... என்னுடைய.... இயற்கையான..... உண்மையான... .குணமான.... அமைதியை வெளியில்.....கொண்டுவருகின்றேன்.....அந்த அமைதியை.....அனுபவிக்கிறேன். நானே அந்த.....அமைதியாக ஆகிறேன்.....நான் தான்....அமைதி.

என்னுடைய உண்மையான_உருவமான_ஒளியை அனுபவிக்கிறேன். நானே அந்த ஒளியாக அறிகிறேன்.....நான் தான்..... அந்த ஒளி.

நான்.....என்னுடைய உண்மையான.... குணமான.... அன்பை..... அனுபவிக்கிறேன்..... நானே அந்த அன்பாக... ஆகிறேன்.....நான் தான் அந்த அன்பு.இப்பொழுது.....ஆத்மா சக்தி........பெறுகிறது. நான்....ஒரு....எடையற்ற....லேசான.... நிலையை....உணர்கிறேன்.... இந்த உடலுக்கு....நான்... அடிமையல்ல.....இந்த உடலுக்கு.... நானே...அதிகாரி. நான்....இந்த உலகில்.... ஒளி....அமைதி.....பரிசுத்தத்தை.ப்.....பரப்புகிறேன்.

1.9 தினசரி நம் முன்னேற்றத்திற்கு உதவும் சில நடைமுறைகள்:

ஒளிமயம்: தன்னையும் பிறரையும் ஒளியாகப் பார்ப்பதால், ஆத்மா ஒளியால் நிரம்புகிறது. ஆத்மாவை நெற்றியின் நடுவில், ஒளிப்புள்ளியாகப் பார்ப்பதால், முழு நாளையும் ஒளிமயமாகச் செலவிட முடியும்.

1.10 படிப்பு

இப்பாடத்தை இரண்டு மூன்று முறையாவது படித்து பின் கீழ்க்கண்டகேள்விகளுக்கு பதிலளிப்பது மிகவும் நன்மை பயக்கத்தக்கதாக இருப்பதாக பல மாணவர்கள் உணர்ந்துள்ளனர். இக்கேள்விகளுக்கு பதில் எழுதுவதால் நீங்கள் ஆன்மீக ஆனந்தத்தை அனுபவம் செய்ய வேண்டும் என்பதே இதன் முக்கிய நோக்கமாகும்.

கேள்விகள்:


1. ஆத்மா என்பது என்ன?
2. உடலுக்கும், ஆத்மாவிற்கும் உள்ள வேறுபாடுகள் யாவை?
3. மனம், புத்தி, அல்லது சம்ஸ்காரங்கள் என்றால் என்ன?

பாடம்: 2

மேலான இறைவன்

2.1 மிக மேலான பரமாத்மா:

நான் ஒரு புள்ளி வடிவான ஒளி; அசரீரி; அமைதியான ஆத்மா. இந்த உள்ளுணர்வில் மற்றவர்களையும் ஆத்மாக்களாகப் பார்க்க இயலுகிறது. இவ்வாறு உடற் கூறின் எல்லையைத் தாண்டும்போது, நாம், தோற்றம், தொழில், உறவுகள் ஆகியவற்றை மறந்து மற்றவர்களைச் சகோதரர்களாகக் காண்கிறோம். எல்லா ஆத்மாக்களும் நம் சகோதரர்கள்; சக்தி மிகுந்த புள்ளிகள்; வெவ்வேறு உடலாகிய ஆடைகளில் வெவ்வேறு விதமாக இந்த உலக நாடகத்தில் இந்த உலக மேடையில் பங்கேற்கிறார்கள். இருப்பினும் பல கேள்விகள் எழுகின்றன. இந்த உலகம் பெரிய குடும்பம், நாம் எல்லோரும் பல வேடங்களில் நடிக் கிறோம் என்றால், இந்த பிரம்மாண்ட நாடகத் தை இயக்குபவர் யாராவது ஒருவர் உண்டா? ஒரு புள்ளிவடிவான சக்தி, ஞானம் நிறைந்த தலை சிறந்த மேலான சக்தி ஒன்று, தந்தையாக வும், இயக்குனராகவும் இருக்கலாம் அல்லவா?



2.2 யார் அந்த மிக மேலானவர்?

யோகம் என்றால் இணைப்பு, ராஜா என்றால் அரசன் என்று முதல் அத்தியாயத்தில். கூறப்பட்டது. குறிப்பாகக் கூறினால் ராஜா என்றால் கர்மேந்திரியங் களுக்கு ராஜா, யோகம் என்றால் தந்தை யாகவும், இயக்குனராகவும் உள்ள மேலான இறைவன் என்று கூறப்படும் ஒருவரை அன்பாக நினைப்பது என்பதே சரியாகும்.

இருப்பினும், இந்த மேலான கடவுளின் தனித்தன்மைகளைப் பிரித்தறியத் தலைப்பட்டால் குழப்பமே அதிகமாகின்றது. பல்வேறு புராண இதிகாசங்களால், பல திசைகளில் இருந்து வேறுபட்ட பதில்களும், பல உருவங்களுமே நம் முன் நிற்கின்றன. ஒரு நேரத்தில் கடவுள் இருக்கிறாரா? அல்லது மனிதர்களால் தோற்றுவிக்கப்பட்ட ஒன்றா என்ற சந்தேகம் கூட நம்முள் எழுகிறது. நிச்சயமாக மேலான கடவுள் என்பவர் இருந்தால், அவருடைய அறி முகமும், அவரைப் பற்றிய உண்மைகளும் தெரிந்திருக்க வேண்டும், கடவுளைப் பற்றிய மனிதர்கள் கருத்து ஒருவிதமாகவும் ஆனால் பரமாத்மா தன்னைப் பற்றி அளிக்கும் அறிமுகம் வேறு

விதமாகவும் உள்ளது. ராஜயோக கல்வியின் மூலம் வரும் பல கருத்துக்களை ஆராய்ந்து பார்க்கும்போது கடவுளை நன்கு உணர முடிகிறது. அவ்வாறு கடவுளை உணரத்தான் இந்த ஞானமே தோன்றியுள்ளது.

2.3 மேலானவரின் உருவம்:

ஓர் ஒளி மிக்க, சக்தி மிகுந்த புள்ளியான ஆத்மா என என்னை அறிந்ததால், மற்றவர் களையும் நான் என் சகோதரர்களாகவே கருதுகிறேன். ஒவ்வொரு ஆத்மாவும் தனித்தன்மை யுடன், தனிப் பட்ட அனுபவம், புத்தியுடன் வெவ்வேறு அலைவரிசையில் இயங்கும் மனதை கொண்டிருக்கிறது. ஆனால் ஒவ்வொரு ஆத்மாவும், ஒரே அளவான ஒளி மயமான புள்ளியாக உள்ளது. ஆகவே இந்த ஆத்மாக்களின் தந்தையும் அதே உருவம் தான் கொண்டிருக்க வேண்டும். அந்த மிகச் சிறந்த ஆத்மாவும் ஒரு ஒளி மயமான மிகச் சிறிய புள்ளியாக, மனம், புத்தி, சம்ஸ்காரங்களுடன் தனித் தன்மையுடையதாக திகழ்கிறது. அந்தச் சக்தி வாய்ந்த உருவமான கடவுளுக்குத் தனித்தன்மைகள் உண்டு. அவருடன் உறவு கொள்ள முடியும் என்று எண்ணும்போது புதுமையாக உள்ளது. கடவுளின் செயல்கள் யாவும் உலகிற்கு நன்மை தரக்கூடியதாக இருக்கின்றது. இறைவன் ஞானக்கடல், ஞானம் புத்தியில் இருக்கிறது. இறைவனின் புத்தி மிக சிரேஷ்டமானது; எல்லையற்றது. அறிவும் உணர்வும் மிகுந்தது. இறை வனுக்கு மனமும் உண்டு. அவர் அளவில்லா அன்பையும், அமைதியையும், கருணையையும் அளிக்கிறார்.

எல்லையற்றதா? அல்லது நுண்ணியதா?

பொதுவாக இறைவன் எல்லையற்ற உருவமாகக் கருதப்பட்டு வரும்போது, இப்பொழுது இறைவனை மிகமிகச் சிறிய ஒளி மிகுந்த புள்ளியாக எண்ணுவது புதியதாக உள்ளது. எல்லையற்றது என்று கூறும்போது, பரிமாணங்களில் மிகப் பெரியது என்று நினைக்கத் தோன்றும். இதற்கு மற்றொரு பொருள் மிக மிகச் சிறிய அளக்க முடியாத அளவு என்பதே. ஆகவே இறைவனின் உருவத்தை மிகப் பெரியதாக எண்ணாமல், மிகச் சிறியதாக எண்ணுவதே சரியாகும்.

இறைவனின் புனிதத்தன்மைகள் அளவற்றவை. ஆகவே உருவத்தையும் அவ்வாறே இதுவரை நினைத்திருந்தோம். உருவத்தின் பரிமாணத்தைப் பொறுத்து அதன் தன்மைகள் அமைவதில்லை. நாம் ஒரு மனிதனின் உடல் பரிமாணத்தை வைத்து அவருடைய குணங்களை நிர்ணயிப்பதில்லை. ஆத்மாவின் சக்தி உடலின் அளவைப் பொறுத்தது அல்ல. நான் ஆத்மாவையும் ஒரு புள்ளி, இறைவனையும் ஒரு புள்ளியாகப் புரிந்து கொள்கிறேன். இறைவனாகிய அப்புள்ளியில் அன்பு, அமைதி, புனிதம், சக்தி என்று கடல் போன்ற அளவிட முடியாத மிக உன்னத தன்மைகள் உள்ளன.

மெழுகுவர்த்தியின் ஒளி மையத்தில் இருந்து முட்டை வடிவில் ஒளி வருவது போல், இப்புள்ளியிலிருந்தும், ஒளியானது முட்டை வடிவில் வெளிப்படுகிறது. இந்த முட்டை வடிவான ஒளியாகத்தான் இறைவன் உலகம் முழுவதும் அறியப்படுகிறார். தங்கம், வெள்ளி, வைரம், பனிக்கட்டி ஆகியவற்றால் கண்ணுக்குப் புலனாகும் உருவங்களாக இறைவன் படைக்கப்பட்டு வழிப்பாடு செய்யப்படுகிறது. உருவ வழிபாடு இல்லாத சமயமான இஸ்லாம் மதத்தில் கூட அவர்களது புனித மெக்காவில் கரிய முட்டை வடிவான ஒளி தரும் கல்லும் இதே வடிவத்திலேயே உள்ளது. (இது சங்-ஏ-ஆஸ்வாத் - புனிதக்கல் என்று அழைக்கப்படுகிறது)

ஜப்பானில் பௌத்த மதத்தில் ஒரு சாரார், தியானம் செய்யும்போது முட்டைவடிவான உருவத்தின் மீது தங்கள் எண்ணங்களை ஒருமுகப்படுத்து கிறார்கள். பார்சீக்களின் தூதுவரான ஜோராஸ்டர் மிகச் சிறந்த ஒளியான இறைவனை வழிபட அக்னியை வழிபடுமாறு அறிவுறுத்தினார். ஏசுநாதர் இறைவனை ஒளியென்று அழைத்தார். மோசஸ் புதர்கள் எரிவது போலவும், ஒரு ஒளி வருவது போலவும் காட்சிகளை மனக் கண்ணில் கண்டார். சீக்கிய மதஸ்தாபகர் குருநானக் இறைவனை ஓங்காரமாகவும், மனித உருவம் இல்லாதவராகவும் வருணித்தார். நிச்சயமாக உலகில் எல்லாப் பகுதிகளிலும் உள்ள மக்கள் இறைவனை இவ்வுருவத்தில் தான் (ஒளியாக) வணங்குகின்றனர்.

2.4 கடவுளின் உன்னத தன்மைகள்:

உலகத்தைக் காகிதமாகவும், கடல் நீரை மையாகவும், மரங்களை எழுது கோலாகவும் உபயோகித்தால் கூட இறைவனின் திவ்ய குணங்களை எழுதி முடிக்க இயலாது. அவரை அறிந்து கொள்ள அவரது சில முக்கிய திவ்ய குணங்களான அன்பு, அமைதி, ஆனந்தம், சக்தி, தூய்மை ஆகியவற்றை மட்டும் கூர்ந்து கவனிப்போம். நமது தியானத்தில், நம் எண்ணங்களைக் கடவுளிடம் செலுத்தும்போது, ஆத்மா இறைவனின் புனித குணங்களில் மூழ்குகிறது. அந்தத் திவ்ய குணங்களைத் தன்னிடம் இழுத்துக் கொள்கிறது. இறுதியில் முழு மாற்றம் அடைவதில் வெற்றி அடைகிறது.

இதுவரை இறைவனை ஆத்மாக்களின் தந்தையெனக் கொண்டிருந்தோம், அந்த நுண்ணிய புள்ளியான பரமாத்மாவினுள் இத்தகைய உயர்ந்த குணங்கள் குடியிருக்கும்போது, அவரைத் தந்தையாக மட்டுமின்றி தாயாகவும் உணர இயலும். அவரைத் தந்தையாகக் கொண்டிருந்தாலும், ஒரு தாயின் குணங்களான அன்பும், கருணையும் அவரிடம் உண்டு. பரமாத்மா இத்தகைய சீரிய குணங்கள் உடையவராக இருப்பதால், நாம் வெவ்வேறு உறவுகளில் பரமாத்மாவை அனுபவம் செய்ய முடியும். இறைவனை ஒரு சிறிய புள்ளியாக உணர்ந்தாலே அவருடன் இணைய முடியும். ஒரு அகண்ட ரூபத்தை மனதில் வைக்க முடியாது, ரூபத்தை உணர்ந்தால் தான், மனம், கண், புத்தி ஆகியவை இயங்கி அழகிய காட்சியை உருவாக்க முடியும். ஆனால் நம் முழு கவனம் அந்தச் சிறிய புள்ளியில் தான் இருக்க வேண்டும். புள்ளியான ஆத்மா, புள்ளியான பரமாத்மாவுடன் இணையும்போது, முழுக் கவனம் செலுத்தினால் அந்த இணைப்பை அனுபவிக்கலாம். ஒரு உறவும் உண்டாகிறது.

2.5 பரமாத்மாவின் பெயர்

எந்த நெருங்கிய உறவிலும், மற்றவரின் பெயர் தெரிந்திருக்க வேண்டும். கடவுளுக்கு எண்ணிலடங்காத பல பெயர்கள் உண்டு. ஒவ்வொரு பெயரும் அவரது ஒவ்வொரு திவ்ய குணத்தைக் குறிப்பிடுகிறது. ஆனால் ஒரே ஒரு பெயருக்குப் பல அர்த்தங்கள் உண்டு. அந்தப் பெயர் வடமொழியில் "சிவா" என்று கூறப்படுகிறது. சிவா என்றால் மங்களம் செய்பவர், ஒரு சிறிய புள்ளி, ஒரு விதை என்று மூன்று அர்த்தங்கள் உண்டு.

சிவா என்ற வார்த்தையில் இருந்து, மங்களம் புரிபவர் என் அன்புத் தந்தை என்பதும், அவரது உருவம் ஒரு சிறிய புள்ளியாகும் என்பதும், அவரே சிருஷ்டி மரத்திற்கு, விதையும் ஆவார் என்பதும் புரிகிறது. மனித குல மரத்தின் முழுத் தத்துவமும் விதையில் உள்ளது. அந்த விதை தான் பிற்காலத்தில் ஒரு மரமாகிறது. சிவா என்ற வார்த்தையில் இருந்து, இறைவனின்

திவ்ய குணங்கள் அறியப்பட்டாலும், என்னுடைய தியானத்தில் "பாபா" என்ற வார்த்தையே உபயோகிக்கிறேன். பாபா என்றால் தந்தை என்று பொருள். இது என் பரம தந்தையான கடவுளுடன் என் நெருங்கிய உறவைக் குறிப்பிடுகிறது. ஆக இவரே மேலான இறைவன்; உடல் சார்பற்ற "சிவபாபா".

2.6 ஆத்மாவிற்கும், பரமாத்மாவிற்கும் உள்ள வேறுபாடுகள்

இதுவரை ஆத்மாவிற்கும், பரமாத்மாவிற்கும் உருவம், மனம், புத்தி, சம்ஸ்காரம் ஆகியவற்றுடன் இருக்கும் ஒற்றுமைபற்றி அறிந்தோம். இருப்பினும் சில வேறுபாடுகளும் உண்டு.

எல்லா ஆத்மாக்களும், ஆடையான மனித உருவெடுத்து, உலக நாடக மேடையில் தத்தம் கர்மங்களைப் பிறப்பு இறப்புக்கு இடையில் உள்ள காலத்தில் செய்கின்றன. ஆனால் பரமாத்மா பிறப்பு இறப்புக்கு அப்பாற்பட்டவர்; என்றுமே மனித உருவெடுக்காதவர். ஆத்மா மனித உருவெடுப்பதால், வினைகள், வினைப்பயன்கள் ஆகிய விதிப்படி நடக்க வேண்டியுள்ளது. அச்செயல்களுக்குத் தக்கவாறு முக்தி அல்லது பந்தனம் உண்டு. பரமாத்மா எப்பொழுதும் முழுமையாக இருப்பவர். அவருக்கு ஒரு பெயர் தான் உண்டு. (ஆத்மாக்களுக்கு ஒவ்வொரு பிறப்பிலும் அதன் சரீரத்திற்கு ஒரு பெயர் உண்டு) அவருக்கு எப்பொழுதும் இதே நற்குணங்கள் தான் உண்டு. எந்த ஒரு மனித ஆத்மாவிற்கும் இந்த நிரந்தர தன்மை இல்லை. ஆகவே தான் நாம் ஸ்திரத்தன்மை இழக்கும்போது இறைவன் பக்கம் திரும்புகிறோம். பரமாத்மாவின் இருப்பிடமும் நிரந்தரமானதே.

2.7 பரமாத்மாவின் இருப்பிடம் அல்லது உறைவிடம்

ஒருவருடன் உறவு கொள்ளுமுன் எப்படி அவரது பெயரை அறிவது முக்கியமோ, அப்படியே அவரது முகவரியையும் அறிவது அவசியம். இறைவனிடம் நான் உறவு கொள்வதற்கு இது எனக்கு அவசியம்..


மூன்று உலகங்கள்

1. நாம் வசிக்கும் இவ்வுலகம் சரீர உலகம்

2. இந்தப் பௌதீக உலகத்திற்கு அப்பால், இயற்கையின் சக்திகளுக்கு அப்பால் உள்ளது, ஒளி மிகுந்த சூட்சும உலகம்.

3. இந்தப் பௌதீக உலகத்திற்கு அப்பால் உள்ளது அசரீரி உலகம். இது நிரந்தரமான, மாற்றமில்லாத, ஒளி, ஸ்திரத்தன்மை, அமைதி நிறைந்த இடம். இந்த இடம் ஒலிக்கு அப்பாற்பட்டது. இதை முக்தி

மூன்று உலகங்கள்
THREE WORLDS



கடவுள் 'எங்கும் நிறைந்தவர்' என்பது ஓர் உணர்வே தவிர உண்மையல்ல
OMNIPRESENCE OF GOD IS A FEELING, NOT A FACT

உலகம் என்றும் அழைக்கலாம். இது தான் என் வீடு. இந்த உலகில் இருந்து தான் ஆத்மாக்கள் பூமிக்குச் சென்று, திரும்பு கிறார்கள். இது தான் இறைவனாகிய தந்தை சிவனின் வீடு.

இராஜயோகி இந்தச்சரீர உலகை முற்றிலும் மறந்து, இறைவனின் உறை விடமான அசரீரி உலகில் இறைவனிடம் மனதைச் செலுத்தும்போது, முழுமையான அமைதியை அனுபவிக்கிறார்.

எங்கும் பரவியிருப்பது

இறைவனை ஒரு ஒளி மிகுந்த, சக்தி நிறைந்த சிறிய புள்ளியாக, நிலைத்த உருவமாக, ஒரு நிரந்தர இடத்தில் இருப்பதாக நினைப்பது வியப்பளிக்கிறது. கிழக்கு மற்றும் மேற்கு நாடுகளில் இறைவன் உலகம் முழுவதும் வியாபித்திருப்பதாக எண்ணப்படுகிறது. இதுபற்றி சிறிது சிந்திப்போம்.

எல்லாம் வல்ல இறைவன் உலகெங்கிலும் பரவியிருந்தால், அவரது குணங்களும் கூட எல்லாவற்றிலும் அமைந்திருக்க வேண்டும் அல்லவா? உயிருள்ளவை, உயிரற்றவை எல்லாமே இறைவனின் நற்குணங்களைப் பெற்றிருக்க வேண்டும். துர்க்குணங்கள், அசுத்தம், அமைதியின்மை ஆகியவை இல்லாமல், இறைவனின் தன்மைகளான அன்பு, பரிசுத்தம், அமைதி, சந்தோஷம் ஆகியவையே காணப்பட வேண்டும்.

ஆத்மா அறியாமையில் மூழ்கியிருப்பதால் நற்குணங்கள் காணப்படவில்லை என்று கூறப்படுகிறது. என்னுள் இறைவன் இருந்தால் அறியாமை எவ்விதம் அங்கு இருக்க முடியும்? இறைவனிடமே அறியாமை இருக்கின்றது என்றல்லவா பொருளாகும்..

இறைவன் ஓர் எல்லையில்லாத சாகரம்; நாம் எல்லாம் அதிலிருந்து தோன்றிய துளிகள்; மீண்டும் அச்சாகரத்தில் நாம் ஒரு காலத்தில் சேர்வோம் என்றால் சாகரமும், துளிகளும் ஒரே குணங்கள் அல்லவா கொண்டிருக்க வேண்டும். இறைவன் ஒரு இடத்தில் குடி கொண்டிருக்கிறார். அந்த இடத்தில் இருந்து அவரது நற்குணங்கள் பரப்பப்படுகின்றன. நான் எங்கிருந்தாலும், இறைவனிடம் என் நினைவைத் திருப்பினால், அவரது நற்குணங்களை என்னுள் எடுத்துக் கொண்டு ஒரு நல்ல உறவை உணர இயலுகிறது. ஒரு வானொலி நிலையம் ஒரே இடத்தில் இருந்து கொண்டு உலகம் முழுவதும் ஒலி அலைகளை அனுப்புகிறது. ஒரு ரேடியோவை ஒரு குறிப்பிட்ட அலைவரிசையில் திருப்பும்போது அந்த ஒலியை நாம் துல்லியமாக எங்கிருந்து வேண்டுமானாலும் கேட்கலாம். இதனால் இதுவரை நாம் ஏன் இறைவனை உணரவில்லை என்பதன் காரணம் தெரிகிறது.

இறைவனால் அனுப்பப்பட்டாலும், மனிதன் தன் மனதை உடல் சார்ந்த பொருட்கள் பால் திருப்புவதால் அந்த அதிர்வுகளை அவனால் உணர முடிவதில்லை.

இதைவிட்டு, நான் ஆத்ம உணர்வில் இருந்தால், அதே அதிர்வுகளை என்னால் உணர முடிகிறது; என் எண்ணங்களால் என் தந்தை சிவபாபாவை அடைந்து அனுபவிக்க முடிகிறது.

2.9 தியானம் - பரமாத்மாவுடன் தொடர்பு:

தியானத்தில் இருக்கும்போது, கீழே தரப்பட்ட எண்ணங்களை மனதில் நினைத்து, சக்தி பெறுங்கள். தியானத்திற்குச் சில எண்ணங்கள்.

என்னை நெற்றியின் நடுவில் உள்ள.... ஒளி மிகுந்த புள்ளியாக....ஆத்மாவாக உணர்கிறேன். என் எண்ணங்கள் இந்த உடலை விட்டு.... இந்த உலகைக் கடந்து.... ஒளி மிகுந்த..... அமைதி நிறைந்த..... என் நிலையான வீட்டை அடைகின்றன.

நான் பரமாத்மாவின் முன் நிற்கிறேன். பாபா ஒளி மிகுந்த புள்ளியாக, ஒளி சாகரமாக, ஒளி வீசிக் கொண்டிருக்கிறார். அந்த ஒளி அலைகளை என் வசப்படுத்துகிறேன். தந்தை அமைதிக் கடல்.... அந்த அமைதி அலைகள் .... எனக்கு ....அமைதி அளித்து..... என்னுடைய சுயமான.... நிலையான அமைதியை..... அனுபவிக்கிறேன்.

இதற்குமுன்.... நான் இவ்வாறு தான் இருந்தேன்.... இப்படித்தான்.... நான் .... எப்பொழுதும்.... இருப்பேன்.

சர்வ சக்தியுள்ள.... இறைவன்....எனக்கு.... அவரது .....சக்தியை அளித்து.... நலிந்த.... என் ஆத்மாவை..... வல்லமையுள்ள சக்தியுள்ள ....அமைதி நிறைந்த ..... ஒளி மிகுந்த.... பரிசுத்தமான....பேரின்பம் உள்ள.... ஆத்மாவாக மாற்றுகிறார்.

2.10 தினசரி நம் முன்னேற்றத்திற்கு உதவும் சில நடைமுறைகள்:

அ. இரவின் கடைசி எண்ணம் காலையின் முதல் எண்ணமாக இருக்கும். உறங்குமுன் என் நினைவை இறைவனிடம் தியானத்தின் மூலம் செலுத்தினால், உறக்கத்திலும் அமைதி உண்டாகும்.

ஆ. எழுந்தவுடன் காலையில் முதல் எண்ணம் அந்த நாளுக்கு முழு அஸ்திவாரம் ஆகிறது. வழக்கமாக எழுந்திருக்கும் நேரத்தைவிடச் சிறிது முன் எழுந்து, தியானத்தின் மூலம் இறைவனின் சக்திகளைப் பெற்று, நாளைத் துவங்கினால், அந்த நாளைச் சுலபமாக, அமைதியாகச் செலுத்தலாம்.

இதை இன்று பரிசோதித்து, அனுபவத்தில் உணருங்கள்.

2.11 படிப்பு:

புத்தியில் "நான் யார்?" என்பதை நினைத்து, கீழே தரப்பட்டுள்ள கேள்விகளைப் படித்து, பதில் எழுதவும்?

கேள்விகள்:

1. இறைவனின் உருவம் எப்படி இருக்கும்? சிவா என்பதன் பொருள் என்ன?
2. ஆத்மாவிற்கும், பரமாத்மாவிற்கும் உள்ள வேறுபாடுகள் யாவை?
3. இறைவன் எங்கும்வியாபித்திருப்பவர் இல்லை என்பதற்குக் காரணங்கள் குறிப்பிடுக?
4. மூன்று உலகங்கள் யாவை?

பாடம்: 3

இராஜயோகம் என்றால் என்ன?

3.1 தோற்றம்:

ஓம் சாந்தி. என்னுடைய உண்மையான நிலையை உணர்வது தான் ஓம் சாந்தி. அதாவது ஆத்மாவாகிய நான் அமைதி சொரூபமானவன். இது தான் இராஜயோகப் போதனைகளின் சாராம்சம். இராஜயோகம் இப்பொழுது எல்லாம் வல்ல இறைவனால் பிரஜா பிதா பிரம்மா என்ற மனித கருவி மூலம் போதிக்கப்படுகிறது.

பல நூற்றாண்டுகளாக இராஜயோகம் என்ற சொல் இருந்து வந்தாலும், உண்மையான கீதையை உபதேசித்தவரான இறைவனின் உண்மையான கல்வி, மனித குலத்தில் இருந்து மறைந்து விட்டதால், இது வரை யாரும் இறைவனுடன் இயல்பான உறவை அனுபவிக்க இயலவில்லை.

கீதையில் இறைவன் எப்பொழுது அநீதி மிகுந்திருக்கிறதோ, அப்பொழுது நான் தோன்றி நீதியை நிலைநாட்டுவேன் (அநீதியை அழிப்பேன், நான் இராஜயோகத்தை கற்பிப்பேன்) என்று அளித்த வாக்குறுதியை நிறைவேற்ற இக்கல்வி நமக்கு அளிக்கப்படுகிறது.

3.2 குறிக்கோள்:

இராஜயோகத்தின் குறிக்கோள் மனிதனை மிகச் சிறந்த நிலையை அடையச் செய்வது தான்; ஒரு சிறிய மாற்றத்தை மட்டும் அடையச் செய்வது அல்ல. எனவே, இராஜயோகம் உலகிலேயே மிகச் சிறந்த போதனையாகும். ஆத்மா தெய்வீகத் தன்மை வாய்ந்தது. ஆனால் இப்பொழுது அத்தன்மையை இழந்து விட்டது. மீண்டும் அத்தெய்வீகத் தன்மையைப் பெற இயலும். ஆகவே, இராஜயோகம் ஆத்மாவில் வேலை செய்கிறது. இந்தயோகத்தின் மூலம் ஒரு ஆத்மாவின் தன்மை, பழக்கவழக்கங்கள், முழுவதும் மாறிவிடுகிறது. இதனால் பல ஆயிரக்கணக்கான ஆண்டுகளாக வளர்ந்து வந்த தீய குணங்களை மனதிலிருந்து அகற்றிவிட்டு தன்னுடைய பழைய சொந்தத் தெய்வீகக் குணங்களை மீண்டும் அடைந்து ஆத்மா பிரகாசிக்கிறது.

3.3 வழிமுறை:

இராஜயோகத்தின் குறிக்கோள் ஆத்மா மிக உன்னத நிலை அடைவது தான். இதற்கு வழி, எல்லாம் வல்ல இறைவனுடன் யோகத்தின் மூலம் தொடர்பு ஏற்படுத்துவதாகும். நான் மற்ற மனிதர்களுடனோ அல்லது தேவ தூதர்களுடனோ இணைப்பு ஏற்படுத்துவதன் மூலம் அந்தத் தலைசிறந்த நிலையை அடைய இயலாது. இந்த இறைவனுடன் இணைப்பு ஏற்படுத்துவதன் மூலமே, என் தீய குணங்கள், பழக்க வழக்கங்களில் இருந்து விடுபட எனக்குச் சக்தி கிடைக்கிறது. அதே சக்தி மூலம் நான் நற்குணங்களை அடைந்து, மிக உன்னத நிலை அடைகிறேன்.

3.4 பரிபூர்ண நிலை:

மிக உன்னத நிலை என்பது, எந்தத் தீய குணங்களும் இல்லாத, முற்றிலும் நல்ல குணங்களே நிறைந்த, தெய்வீகக் குணங்கள் நிறைந்த, சாத்வீக தன்மை மிகுந்த தூய நிலையாகும். இது ஆத்மா மிகச் சிறந்த வழியில் நடப்பதால் அடையும் நிலையாகும்.

இறைவனால் அளிக்கப்பட்ட ஞானத்தின் மூலம், அதே இறைவனால் கற்பிக்கப்பட்ட தியானத்தின் மூலம், இந்நிலை அடைய இயலும். யோகம், என்றால், இணைப்பு என்று பொருள். இந்த யோகத்தின் மூலம் ஆத்மா மீண்டும் தன் உன்னத நிலையை அடைகிறது. என்னை, என் மனதை, என் புலன்களை, என் தனித்தன்மையை அடக்கி ஆள்வதன் மூலம், அவற்றை நான் விரும்பும் வழியில் வளர்க்க இயலுகிறது. புறச் சூழ்நிலைகளால், மனிதர்களால் நான் அலைக்கழிக்கப்படாததால், ஆத்மா தன்னுடைய குறிக்கோளை அறிந்து, வழி தவறாமல், திடமான சங்கல்பங்களுடன் முன்னேறி, அந்தக் குறிக்கோளை அடைந்து, அந்த உன்னத நிலையை அனுபவிக்கிறது.

இராஜயோகம் மிக உயர்ந்தது மட்டுமல்லாமல் மிகக் கடினமானது என்று சில காலம் முன்பு எண்ணப்பட்டு வந்தது. அது எவ்வாறு சரியாகும்? நாம் நம்முடைய உண்மையான குறைபாடுகளை அறிவது கடினமான செயலாகுமா? அது மட்டுமல்ல, இராஜயோகம் என்பது இறைவனுடன் தொடர்பு கொண்டு, அந்த அன்புக் கடவுளுடன் உறவு கொள்வதாகும். ஆதலால் இது கடினமான காரியம் அல்ல.

நான் பரமாத்மாவின், குணங்களை நன்கு அறிந்திராவிட்டால், குழப்பம் மிகுந்து, இராஜ யோகம் கடினம் ஆகிறது. ஆனால் ஆத்மா பரமாத்மாவை சரியான முறையில் அறிந்திருந்தால், அன்பை பரிமாறிக் கொண்டால், ஆத்மாவிற்கு பரமாத்மாவிடம் உறவு ஏற்படுகிறது. உறவின் மூலம் ஏற்படும் நற்பயன்களில், இந்த உறவு முதிர்ந்து, நல்ல தலை சிறந்த பிணைப்பு ஏற்பட்டு ஆத்மா பரமாத்மாவின் எல்லாக் குணங்களையும் கொண்டு மிளிர்கிறது.

3.5 எந்த யோகத்தை தேர்ந்தெடுப்பது?

சிலர் இப்பொழுது உலகில் உள்ள பலவித யோகங்களில் ஒவ்வொருவரும் தனக்குத் தேவையான யோக முறையை எடுத்துக் கொள்ளலாம் என்று கூறுகின்றனர். அதன் உண்மையை இப்பொழுது சிறிது சிந்தித்துப் பார்ப்போம்.

பக்தியோகம்: இராஜயோகம் என்றால் ஆத்ம வளர்ச்சி, நான் பக்தி யோகத்தைப் பின்பற்ற வேண்டும் என்று கூறினால் இதன் முடிவு என்ன? பக்தியின் மூலம் நான் இறைவனிடம் அன்பு செலுத்துகிறேன். ஆத்ம வளர்ச்சிக்கு இது மட்டும் போதாது, மேலும் பல சக்திகளும் தேவை. ஆகவே பக்தியில் மட்டும் ஆழ்ந்திருக்கும் போது ஆத்மாவில் அன்பு மட்டுமே அதிகரிக்கிறது. ஆனால் கடவுளைப் பற்றிய ஞானமோ ஆத்மா பலமோ அதிகரிப்பதில்லை.

ஞான யோகம்: நான் ஞானத்தை அறிந்த பின் யோகம் செய்தாலே, நான் பிற கவர்ச்சிகளிலிருந்து என்னைக் காத்துக் கொள்ள முடியும்.

புத்தியோகம்: ஞானத்தின் ஆழத்தை அறிவது மிக அவசியம். கடவுள் மீது அன்பு மட்டும் இருந்தாலும், சில சலனங்கள் என்னுள் எழும்போது தியானத்தில் இருந்து என் கவனம் கலையலாம். ஆனால் நல்ல ஆழமான ஞானம் இருந்தால், ஆத்மா அச்சலனங்களின் விளைவுகளை அறிந்து, அதில் சிக்காமல், திடமான நிலையில் இருக்க முடியும். ஞான யோகமும் புத்தியோகத்திற்கு தொடர்புடையதாகும்..

யோகங்களின் சமநிலை: வெறும் ஞானம் அல்லது புத்தியோகம் மட்டும் இருக்குமானால் அங்கு அனைவருக்கும் முரட்டுத் தன்மை அதிகரிக்கலாம். இதனால் குண நலன்களில்

முழுமையான உன்னத நிலையை அடைய முடியாது. சரியான முன்னேற்றம் என்பது, சரியான அளவில் அன்பும், நடைமுறையும் கலந்து இருப்பது; ஆன்மீக அன்பு வழி செல்லுதல், ஆன்மீக அன்பால் பரிபாலிக்கப்படுதல்.

நான் இனிமையாக இருக்க பக்தி தேவை. ஞானமும் அவசியம். என்னுடைய யோகத்தில் இரண்டுமே இணைந்திருப்பது இன்றியமையாதது. ராஜயோகத்தில் பக்தியும், ஞானமும் சரியான விகிதத்தில் கலந்து இருக்கின்றன.

இராஜயோகத்தில் உள்ள யோகங்கள்:

முதலில் புத்தியைப் பயன்படுத்துகிற யோகம். ஆகவே, புத்தியோகம் என்றும் இதனை அழைக்கலாம். இந்தப் புத்தியானது ஞானத்தைக் கிரகிப்பதால், ஞான யோகம் என்றும் இதைக் கொள்ளலாம். புத்தி, ஞானத்தின் துணை கொண்டு இறைவனிடம் தொடர்பு கொள்கிறது. புத்தி இறைவனை தந்தை, தாய், நண்பன், குரு என்ற பல உறவுகளில் அறிந்து சம்மந்தம் கொள்ளும்போது, இறைவனிடம் மிகுந்த பக்தி ஏற்படுகிறது. ஆதலால் இதை பக்தியோகம் என்றும் இதை அறியலாம். இது இல்லாமல் ஆத்மா பரமாத்மாவுடன் சரியான உறவு கொள்ள இயலாது.

துறவு மூலம் யோகம்: இறைவனிடம் ஆத்மா கொண்டுள்ள அன்பினால், அது மற்ற பொருட்களை விடுத்து, விதை ரூபமான பரமாத்மாவின் பக்கம் திரும்புகிறது. ஆகவே, ராஜயோகம் சன்னியாச யோகம் ஆகும். இது உடல் சார்ந்த சன்னியாசம் அல்ல. உடல் பற்று இல்லாவிடினும், மனம் அதனிடம் சென்று கொண்டிருந்தால், அது துறவு ஆகாது. ஆத்மா இறைவனின் அன்பை உணர்ந்து, மற்ற பொருட்களை மனதாலும் நினைக்காமல் அவற்றிலிருந்து விலகி அந்த இறைவனின்பால் மனதைச் செலுத்தும் போது, இயற்கையான மிக உன்னத துறவு நிலை அடைகிறது.

நல்ல கட்டுப்பாடு மூலம் யோகம் (ஹடயோகம்:) "ஹட" என்றால் ஒரு வகைக் கட்டுப்பாடு என்று பொருள். இராஜயோகத்தில், ஒரு இயற்கையான கட்டுப்பாடு இருப்பதால், இதை ஹடயோகம் என்றும் அழைக்கலாம். ஆனால் இது உடல் சார்ந்த ஆசனக் கட்டுப்பாடு அல்ல. எந்த சூழ்நிலையிலும் மனம் கட்டுப்பாட்டுடன் ஒரே நிலையில் இருக்கிறது.

ஹட என்றால் தீர்மானம் என்பதும் ஒரு பொருள். ஆத்ம தீர்மானம் (சங்கல்பம்) இல்லா விடில் இராஜயோகம் செய்ய இயலாது. இந்தத் திடமான தீர்மானம் அகத்தில் இருப்பது மிக அவசியம். உடலைப் பத்மாசனத்தில் வைப்பதை விட, மனதைப் பத்மாசனத்தில் வைப்பது தான் இராஜயோகத்தின் குறிக்கோள் ஆகும். தீமைகள் மலிந்த இந்தக் கலியுலகில், எதிலும் மனம் ஈடுபடாமல், அசுத்தத்தால் களங்கப்படாமல் இருப்பது தான் பத்மாசனம்.

ஹடயோகத்தில் கூறப்படும் சவாசனம் இராஜயோகத்தில் வேறு வகையில் உபயோகப்படுத்தப்படுகிறது. ஆத்மா, தன் புலன்களினால் நுகரும் இன்பத்தைத் துறந்து நல்ல நிலையில் ஓய்வு கொள்வதால், இதையும் சவாசனம் என்றும் கூறலாம். ஆகவே, இராஜயோகத்தில் உள்ளுணர்வை வளர்த்து, ஒரு நிலைப்படுத்துவதே முக்கிய நோக்கம் ஆகும்.

சமத்துவ யோகம்: இராஜயோகம் ஒரு சமத்துவ யோகம் ஆகும். நான் இறைவனிடம் தொடர்பு கொண்டிருப்பதால் இந்தப் புற உலகில் நடைபெறும் செயல்களில் நான் ஈர்க்கப்படு

வதில்லை. இறைவனின் நற்குணங்கள் தான் என்னைக் கவர்வதாக இருக்கின்றன. இந்தக் கொடுமை நிறைந்த கலியுலகின் தீயசெய்கள் என்னை அணுகுவதில்லை. என் எண்ணங்கள், புத்தி, பழக்க வழக்கங்கள் இறைவனின் குணங்களால் கட்டுப்படுகின்றன. என் முன் முழு மனநிலை அந்தச் சமத்துவத்தை வெளிக்கொணருகிறது.

இன்னும் வேறு எத்தனையோ யோகங்கள் இருப்பினும், அவையாவும் இராஜயோகத்தில் பிரதிபலிப்பதால், இராஜயோகம் ஒரு தலை சிறந்த யோகம் ஆகும். என் ஆத்மாவின் முழு வளர்ச்சிக்கு இந்த யோகமே காரணம் ஆகிறது.

3.6 யோக வளர்ச்சிக்கான பல நிலைகள்:

வெறும் ஞானம் அல்லது புத்தியோகம் மட்டும் இருக்குமானால் அங்கு ஆணவமும் முரட்டுத்தனமும் அதிகரிக்கலாம். இதனால் குணநலன்களில் முழுமையான உன்னத நிலை அடைய முடியாது.

இராஜயோகத்தை கர்ம யோகமாகவும் கருதலாம். கர்ம யோகம் மூன்று வகைப்படும்.

முதலாவது. கர்மங்கள் செய்து கொண்டு இருக்கும்போது யோக நிலை அனுபவம் செய்தல்.

இராஜயோகம் என்றால் இறைவன்பால் தன்னுடைய அன்பான எண்ணங்களை திருப்புவதாகும். இதில் வேறு எந்தவிதமான ஆசனத்திற்கு அவசியம் இல்லை. இதனால் கை, கால்களால் கர்மங்கள் செய்தாலும் புத்தியை இறைவனிடம் இருக்க வைக்க முடியும். நடக்கும் போதும், அமர்ந்திருக்கும் போதும், உணவருந்தும்போதும், மற்ற காரியங்கள் செய்யும் போதும் அன்பான இறைவன் என்னுடைய எண்ணங்களால் முன் இருப்பதால் இது கர்மயோகமாகிறது.

இரண்டாவதாக கர்ம யோகம் என்றால் என்னுடைய செயல்களின் மூலம் வெளிப்படுத்துவதும் யோக நிலையாகும். நான் இறைவனுடைய தொடர்பில் இருப்பதால் அவரிடமிருந்து தூய்மை, அன்பு, அமைதி ஆகியவை என்னுள் நிரப்பப்படுகிறது. இவை என் செயல்களில் பிரதிபலிக்கப்படுகிறது. என்னுடைய கர்மங்கள் தூய்மையாகவும், அன்பா கவும், அமைதியாகவும் வெளிப்படுத்தக் கூடிய, மாற்றக்கூடிய யோகமாக இது இருப்பதால் கர்ம யோகமாகிறது.

மூன்றாவது கர்மத்தின் மூலமாக என்னுடைய யோகத்தை வலிமைப் படுத்துவது. அதாவது கடவுளின் அருகினில் செல்வது, அவருடைய தொடர்பினை ஆழமாக அனுபவம் செய்வதாகும். எப்படி மனிதர்கள் தம் காரியங்கள் செய்யும் போதும், கொடுக்கல் வாங்கல் இருக்கும் போதும் நமக்கும் அவர்களுக்கும் உள்ள உறவு அதிகரிப்பது போல் பரமாத்மா வுடனும் அவருடைய அன்பின் ஆதாரத்தில் நான் செய்யும் கர்மங்கள் அவருக்கு அருகாமையில் கொண்டு செல்கிறது. இதனால் என்னுடைய யோக உறவு வலிமைப்படுத்தப் படுகிறது.

இங்கு ஒரு செயல் மற்ற பல செயல்களுடன் இணைந்து இவற்றின் விளைவுகள் பல விஷயங்களில் பாதிக்கப்பட்டு மேலும் மற்றவர்களின் செயல்களால் பிணைக்கப்பட்ட வலையாக உள்ளது.

இரண்டாம் கட்டம்: சமத்துவ யோகம்: ஒரு முகப்படுத்துதல்

தியானம் செய்யும்போது, அலைபாயும் எண்ணங்கள் மறைந்து, மனம் ஒருமுகப்படுகிறது.

அதனால் பௌதீகப் பொருட்களில் மனதைச் செலுத்தாமல், இராஜயோகி பௌதீக குணங்களுக்கு அப்பாற்பட்ட அசரீரியான இறைவனிடம் உறவு கொள்ள முயற்சிக்கிறார்.

மூன்றாம் கட்டம்: உணர்தல் அல்லது அனுபவித்தல்

இந்த தியானத்தின் குறிக்கோள் இறைவனிடம் இணக்கமான உறவு கொள்வதாகும். இதைத்தான் உணர்தல் என்று கூறப்படுகிறது

3.7 மந்திரத்தையோ, பொருளையோ ஏன் உபயோகப்படுத்துவதில்லை:

என் தியானத்திற்கு, மந்திரத்தையோ, பொருள்களையோ உபயோகித்தால், என் மனம் அவற்றில் தான் ஒருமுகப்படும். அதனால் நான் இறைவனுடன் உறவு கொள்ள இயலாது. துன்பம், கொடுத்த என் உடல், உடல் சார்ந்த பொருட்கள் மற்றும் நிகழ்ச்சியில் இருந்து என் மனம் பிரிக்கப்பட்டு, மந்திரம் அல்லது ஏதாவது பொருள் மீது செலுத்தப்படுவதால் என் மனம் ஓர் அளவு அமைதி அடைகிறது.

ஆனால் தியானம் முடிந்தவுடன் மனம் முன்பு இருந்த குழப்ப நிலையையே அடைகிறது.

இராஜயோகத்தின் குறிக்கோள் இறைவனிடம் அன்புடன் கூடிய சம்மந்தம் ஏற்படுத்திக் கொள்வதாகுமே தவிர, வெறும் மனதை ஒருமுகப்படுத்தும் பயிற்சி அல்ல.

3.8 எவ்வாறு ஒருவர் இணைப்பு ஏற்படுத்துகிறார்?

எண்ணம்: இருவருக்கிடையில் சம்பந்தம் ஏற்படும்போது, பேச்சு, பார்வை போன்ற உடற்சக்திகள் துணையிருந்தாலும், எண்ணமே இணைப்புக்குக் காரணமாக இருக்கிறது. சீரான எண்ணங்களே இணைப்பு ஏற்படும்போது தோன்றுகின்றன. அவ்வாறே நான் இறைவனிடம் தொடர்பு கொள்ள என் எண்ணங்களையே உபயோகிக்க வேண்டும். ஆகவே கீதையில் மன்மனாபவ என்று அதாவது உன் மனதை என்னிடம் செலுத்து என்று கூறப்படுகிறது.

ஒரு புறம் பார்க்கும்போது என் உடலுக்கு எந்த சிரமம் இல்லாத சுலபமான காரியமாகத் தோன்றுகிறது. பூஜை முறைகளும் இல்லை. நான் இறைவனிடம் என் மனதை, எண்ணங்கள் மூலம் செலுத்த வேண்டும்; அவ்வளவு தான்; ஆனால் என் எண்ணங்களை எங்கு செலுத்த வேண்டும் என்று அறியாததால் இதுவே மிகச் சிரமமான காரியமாகத் தோன்றுகிறது. என் எண்ணங்களைக் கட்டுப்படுத்தவும் அறியவில்லை.

ஒரு நிலைப்படுத்துதல்:

ஆகவே கீழ்க்காணும் காரணங்களினால் ஞானம் அவசியம்

1. தன்னைப்பற்றிய ஞானம்: ஆத்மாவினால் எண்ணங்கள் எவ்வாறு உருவாக்கப்படுகின்றன என்று கற்பதால் அது என்னைப் பற்றிய ஞானம்

2. இறைவனைப் பற்றிய ஞானம்: இறைவன் பால் என் எண்ணங்களைச் செலுத்த வேண்டியிருப்பதால் இறைவனைப் பற்றிய ஞானம் தேவையாகும். முதலில் ஞானமும், அடுத்து அன்பும் இருப்பதால் என் எண்ணங்கள் இயற்கையாக மற்ற இடங்களை நாடாமல் இறைவனை நாடி ஒருமுகப்பபடுத்தப்படுகிறது.

இராஜயோகத்தின் முதல் கட்டத்தில் மனம் சுறுசுறுப்பாக இயங்குகிறது. இது மிக உயர்ந்த சுலபமான இயற்கையான முறையாகும். மாறாக மனதின் இயக்கத்தை நிறுத்துவது, கடினமான, செயற்கையான, அவசியம் இல்லாத ஒரு செயலாகும்.

என் மனம் எப்பொழுதும் தொடர்ந்து இயங்கும் தன்மையுள்ளது. வேகமாகச் சென்று கொண்டிருக்கும் ஒரு வாகனத்தை திடீரென்று நிறுத்தினால் பலத்த சேதம் ஏற்படும். அதுபோல் வேகமாகச் செயலாற்றப் பழக்கப்பட்ட என் மனதின் ஓட்டத்தை திடீரென்று தடைப்படுத்துதல் என்பதை மிகச் சிரமப்பட்டுமிகக் குறுகிய நேரத்திற்குத் தான் அவ்வாறு செய்ய இயலும். என் மனம் வேறு ஒரு பக்கம் செல்லலாம். அதனால் மனதின்மீதுள்ள கட்டுப்பாட்டை இழக்கவும் நேரிடும்.

3.9 அனுபவம்:

இறைவன் மிக அருமையான முறையை நமக்குக் கற்றுக் கொடுக்கிறார். மனம் வேகமாகச் செல்லலாம். ஆனால் அது செல்லுகின்ற வழியைக் கட்டுப்படுத்தி திருப்புதல் வேண்டும். புத்தி ஞானத்தால் நிரம்பி இருக்கும்போது என்னுடைய எண்ணங்கள் தேகம், உலகம் பற்றிய சாதாரண நிலைகளிலிருந்து தன்னைப் பற்றிய (ஆத்மா) உயர்ந்த நிலைகளைப் பற்றியவைகளாகின்றன. நான் யார்? நான் என்னவாக இருக்கிறேன்? என்னுடைய உண்மையான தன்மைகள் என்ன? எது என்னுடைய உண்மையான வீடு? அது எங்குள்ளது? என் தந்தை யார்? அவரோடு எனக்குள்ள உறவு என்ன? அவருடைய குணாதிசயங்கள் என்னென்ன? அவர் என்ன செய்கிறார்? என்ன செய்வதில்லை?.... போன்றவை. இராஜயோகத்தில், ஆத்மா சிந்தனையில் இருக்கும்போது மேற்கூறியவைகளுக்கு விடை கிடைக்கிறது. இவ்வாறு ஞான விளக்கங்களை கண்டறிந்து அதிலேயே சிந்தனையை செலுத்துகையில், ஆத்மா தன்னை இப்பூவுலகிலிருந்து விலக்கி சூட்சுமத்திற்கும் அப்பாற்பட்ட ஆத்ம உலகிலும் இருப்பதை அனுபவிக்கிறது. இந்நிலையில் தான் உண்மையான ரீதியில் இயற்கையாக "தியானம்" ஆரம்பமாகிறது.

அடுத்து எல்லையற்ற தந்தையின் மீது முழு உணர்வுகளும் திரும்பி நிலைப்படுகிறது. இன்னும் சற்று ஆழமாக அவருடைய குணங்கள் என்னும் கடலில் மூழ்கி அவரோடு எனக்குள்ள பல உறவுகளை அனுபவம் செய்கிறேன். இந்நிலையிலும் உள் உணர்வு என்பது செயல்பட்டுக் கொண்டு தான் இருக்கிறது; இருப்பினும் அனைத்து எண்ணங்களும் ஒரே ஒரு இறைவனுடனேயே (பாபாவுடன்) லயித்திருக்கின்றன, ஞானத்தின் பிற கருத்துக்களும் நிலைகளும் கூட இச்சமயத்தில் நினைவில் வருவதில்லை.

தியானத்தின் ஆரம்ப கட்டத்தில் ஞானத்தின் பல கருத்துக்கள், நிலைகள் சிந்தனைக்குக் கொண்டுவரப்படலாம்; எண்ணங்கள் பரம தந்தையுடன் ஒருமுகப்பட்டிருக்கையில் (தியானத்தின் இரண்டாம் நிலை) அவரோடு ஆன்மீக உரையாடலில் இருக்கும்போது என் எண்ணங்கள் அமைதியாகவும், சீராகவும், அலைபாயாமலும் இருக்கின்றன. மனம் இன்னும் ஒரு நிலைப்படுகையில் என் தந்தை என்னோடு உரையாடுவதை நான் கேட்கிறேன், மேலும் அவரின் உண்மையான நிலையில் அவரை உணர்ந்து அனுபவிக்கிறேன்.

இந்நிலையில் அவருடைய எல்லையற்ற குணங்களின் அனுபவத்தால் நான் நிரம்பி வழிகிறேன்; நான் அவைகளை என்னுள் கிரஹிக்கிறேன்; என்னுள் மிகுந்த மாற்றங்களைக் காண்கிறேன்; அவைகளை உலகத்திற்கு அலைகளாய் பரப்பவும் செய்கிறேன்.

இவ்வாறாக முன்னேறி என் உள்ளுணர்வுகளையும் நினைவுகளையும் கடந்த ஒரு நிலையை அடைகிறேன்; அப்போது அனுபவமே முழுமையாக என்னை ஆட்கொண்டு விடுகிறது. அனுபவத்தை தவிர வேறு எதுவுமே இப்போது என்னுள் ஏற்படுவதில்லை.

3.10 இயற்கையான வழி:

மிகவும் இயற்கையாகவும் இயல்பாகவும் மனம் சாதாரண எண்ணங்களை விடுத்து சூட்சும நினைவுகளுக்குச் சென்ற (முதல் நிலை) பின் ஒருமுகப்படுகிறது. (2-ம் நிலை) பின்னர் உள்ளுணர்வுகளுக்கும் அப்பாற்பட்ட நிலையை (மூன்றாம் நிலை) அடைகிறது. இது இயல்பாகவும், இயற்கையாகவும் இருப்பதால் செயல் முறைக்கு மிக எளிதாக உள்ளது. பொதுவாக உலகினர் தியானம் என்றால் அனைத்து எண்ணங்களையும் கட்டுப்படுத்தி ஒரு சூன்யத்தை அனுபவிப்பது என தவறாக இயற்கைக்கு முரணான முயற்சியில் இறங்கு வதாலேயே அது கடினமாகத் தென்படுகிறது. இராஜயோகப் பயிற்சி நன்கு உணர்ந்து பயிற்சி செய்யும்போது முயற்சி எளிதாகி விடுகிறது.

இவ்வாறு தியானத்தில் ஒரு நிலையைக் கடந்து அடுத்ததை அனுபவம் செய்ய பலமாதங்கள் ஆகும் என்பதில்லை. யோகி வாழ்க்கையின் சில நடைமுறை விதிகளைப் பின்பற்றியும், ஞானத்தையும் நன்கு ஆழமாய்ப் புரிந்துகொண்டு செல்லச் செல்ல ஆத்மா சாதாரண உள்ளுணர்வுகளைக் கடந்து ஆத்மீக உணர்வை அடைகிறது. அடுத்தபடியான இறையுணர்வையும் எளிதாக அடைந்து தொடர்பையும் முழுமையான ரீதியில் அனுபவம் செய்கிறது.

3.11 உலகில் ஏற்படும் மாறுதல்:

இராஜயோகம் மனிதனின் வாழ்க்கையில் ஒரு நல்ல திருப்பத்தைக் கொண்டு வருகிறது. மேலும் அதன் விளைவாக இரு வழிகளில் உலக சமுதாயத்திலும் மாற்றங்கள் ஏற்படுகின்றன. நான் மாறும்போது என் சிந்தனைகள் பரந்த நோக்கத்தில் வரும்போது, முதலில் என்னுடைய குடும்பத்தினர், உற்றார் உறவினர், நண்பர்கள், என்னைச் சுற்றியிருக்கும் சமுதாயத்தினர் ஆகியோர் மீது ஒரு நல்ல பிரபாவம் ஏற்படுகிறது. இரண்டாவது ஒருவர் யோகத்தில் உயர்ந்த நிலையில் இருக்கும்போது இறைவனின் குணங்களை எண்ண அலைகளின் மூலம் பரப்புவதற்கு அவர் கருவியாகிறார். மேலும் தூய்மையும், சாந்தியும் பரவும்போது நான் புனிதமாகி மாறும்போது இவ்வுலகும் கூடவே நல்ல மாற்றத்தைக் காண்கிறது.

இராஜயோகத்தின் நோக்கம் தான் மாறுவது மட்டுமன்று; முழுமை நிலையை தான் மட்டும் அடைவதன்று. முழுமை நிறைந்த புதிய உலக அமைப்பை உருவாக்குவதும் கூட. அதாவது தூய்மையும், அன்பும், ஆனந்தமும், உண்மையும் நிறைந்தபொன் உலகைப் படைப்பதே இராஜயோகத்தின் முக்கிய நோக்கமாகும்.

ஸ்ரீமத் பகவத்கீதையில் கூறியுள்ளபடி, (மன்மனாபவ) சிந்தையை அன்பொழுக இறைவன் பால் செலுத்துவதே இராஜயோக முறையாகும்.

3.12 தியானம் - முழுமையான உள்ளுணர்வு:

வசதியாக அமர்ந்த நிலையில் நெற்றிப் பொட்டில் ஆத்மாவின் இருப்பிடத்தில் சிந்தனையை ஒருமுகப்படுத்துவோமாக.

தியானத்திற்கு உகந்த எண்ணங்கள் சில....

என் உண்மையான நிலையை நான் அறிகிறேன்...நான் ஆத்மா... இப்பூவுலக நினைவுகளிலிருந்து அப்பாற்பட்டு செல்கிறேன்.

பரம தந்தையின் நினைவு மற்ற நினைவுகளை விட, வேகமாக என்னைக் கவர்கிறது. ....புள்ளி வடிவான ஒளியான என் தந்தையை தந்தையாகவும், நல்லாசிரியராகவும் மேலான குருவாகவும், காண்கிறேன்...... தூய்மையையும், தெய்வீகத்தையும் அனுபவம் செய்கிறேன்.

சாந்திக் கடலான என் தந்தையிடமிருந்து சாந்தியின் அனுபவத்தைப் பெறுகிறேன்...... அவரிடமிருந்து ஒளியும் சக்தியும் என்னுள் வந்து நிரம்புகின்றன.

இயற்கையாகவே என் மனம் முழு திருப்தியாலும், ஆனந்தத்தாலும் நிரம்பி வழிகிறது. ... ஏனெனில் இவற்றின் ஊற்றாக விளங்கும் என் மேலான தந்தையை நான் அடைந்து விட்டேன்.

என் தந்தையோடு சந்திக்கும் இப்புனித வேளையில் அவரிடமிருந்து பெற்ற ஒளியையும் சக்தியையும் உலகெங்கிலும் பரப்புகின்றேன்....

3.13 தினசரி நம் முன்னேற்றத்திற்கு உதவும் சில நடை முறைகள்:

நோக்கம்: நமது குறிக்கோள் தூய்மையாய் இருக்கும்போது வெற்றி உறுதி. இராஜயோகம், இறைவனுடனான தொடர்பே பரிசுத்த எண்ணங்களினால் ஏற்படும் அனுபவமாகும். சாந்தி, அன்பு, ஆனந்தம், சக்தி நிறைந்த அனுபவமாகும் அது. எனவே இராஜயோகத்தின் குறிக்கோள் மிகப் புனிதமான ஒன்றாகும். முழு நாளில், நீங்கள் உடலுழைப்பில் இருந்தாலும் சரி, சிந்தனை காரியங்களிலிருந்தாலும் சரி, பிறரோடு ஏதேனும் காரியத்திலிருந்தாலும் சரி, எந்நிலையிருப்பினும் இராஜயோக அனுபவத்திலிருக்க வேண்டும் என்ற குறிக்கோளை மறந்து விடலாகாது.

3.14 கல்வி

நாம் ஞானக் கல்வியைக் கற்றுக் கொண்டிருக்கும்போது நம்மை நாம்ஆன்மீக மாணாக்கர்களாக உணர வேண்டும்; ஏனெனில் நம்மை நாம் யார் என உண்மையான ரீதியில் உணர்வதே ஆன்மீகமாகும்.

கேள்விகள்:

1. இராஜயோகம் ஏன் அனைத்து யோகங்களிலும் மேலான யோகமாகக் கருதப்படுகிறது?
2. பரமாத்மாவுடன் தொடர்பை எந்தெந்த வழிகளில் நாம் ஏற்படுத்திக் கொள்ள முடிகிறது?
3. எவ்வாறு ஒருவர் பிறரின் மீதும், உலகத்திலும் தியானத்தின் மூலம் பிரபாவத்தை ஏற்படுத்தி மாற்றத்தைக் கொண்டுவர முடியும் என்பதை உங்கள் சொந்த வார்த்தைகளால் விவரிக்கவும்.

பாடம்:4

கர்மாவின் ரகசியங்கள்

ஓம் சாந்தி. ஓம் என்றால் நான் ஓர் ஆத்மா. சாந்தியையும் இணைத்தால் நான் ஓர்அமைதியான ஆத்மா என்று பொருள். நான் உண்மையான வடிவை உணர்ந்ததால், செயல்கள், செயல்களின் பயன்கள் ஆகியவற்றின் முக்கியத்துவத்தை அறிகிறேன்.

4.1 ஆசீர்வாதமா? சாபக்கேடா?

என்னுடைய செயல்களின் பலன்கள் என்னையே சேரும்.

என்னுடைய உண்மையான அடையாளத்தை அறியுமுன், நான் இந்த ஆடையாகிய உடலின் மேல் பற்று வைத்திருக்கும்போது, என்னுடைய ஒவ்வொரு செயலுக்கும் ஒரு முக்கியத்துவம் உண்டு என்பதை அறிந்திடவில்லை.

இப்பொழுது என்னை ஓர் ஆத்மா என்று உணர்ந்தவுடன், என்னுடைய ஒவ்வொரு செயலும் என்னுள் ஓர் அடையாளத்தை பதிவு செய்து கொண்டேயிருக்கிறது. அந்த அடையாளத்தை என்றும் சாசுவதமாக நான் கொண்டு செல்ல வேண்டும் என்று அறிகிறேன்.

கர்மத்தின் விதி, செயல் மற்றும் அதன் பிரதி பலனின் விதி ஆகியவற்றை என் இறைவனாகிய – அன்புத் தந்தை பரமாத்மாவினால் மிகவும் அழகாக விவரிக்கப்பட்டது. ஒரு நெருங்கிய அன்பான உறவினால் இறைவனை பாபா என்று அழைக்கிறேன். சாசுவதமான, அசரீரியான இறைவன், கர்ம பலன்களுக்கு அப்பாறபட்டவர். அன்புப் பிணைப்பால் தூய்மையாய் வாழ இறைவன் கீழ்க்கண்டவாறு கர்மாவைப் பற்றிக் கூறுகிறார்.

இதுவரை எச்செயலையும் சரியானது, தவறானது என்று பிரித்து உணர முடியாமல் குழம்பினோம். நம் மனித சரித்திரத்தில் சரியானது, தவறானது ஆகியவற்றின் பொருள் மாறிக் கொண்டே வருகிறது. உலக சரித்திரத்தில் குறிப்பிட்ட ஒரே காலத்தில், வெவ்வேறு கலாச் சாரங்கள், சமயங்கள் ஒரே செயலுக்குப் பல்வேறு பொருளை, அர்த்தத்தைக் குறிப்பிட்டன. அதே சமயத்தில் பல நூற்றாண்டுகளில் அதற்குப் பல வித்தியாசமான விளக்கங்கள் கொடுக்கப் பட்டன. என்னைப் பொருத்தவரையில் இதன் பொருள் வெகுவாக மாறுபடுகின்றது. சிறுவர் பருவத்தில் ஒன்று, இடையில் ஒன்று, முதிய பருவத்தில் ஒன்று எனப் பல வித்தியாசமான அர்த்தங்கள் இருக்கின்றன.

என்னுடைய வளர்ச்சி, என் அறிவின் முதிர்ச்சி ஆகியவற்றை நான் பெற்றிருந்தாலும், ஒரு நாள் இடைவெளியில் சில சமயங்களில் சில மணி நேர இடைவெளியில் நான் வெவ்வேறு முடிவுக்கு வருகின்றேன். காலையில் சரியாகத் தோன்றியது, பகலில் மாறுபட்டு புலப்படுகிறது. அதிகாலையில் புத்தி சுத்தமாக இருக்கும்போது வேறு ஒன்று தோன்றுகிறது. இப்பொழுது சூழ்நிலையால் மற்றவர்களால் என் புத்தி சரியான முடிவை எடுக்க முடிய வில்லை. இவ்வாறு ஒரு பொருளானது சரியா, தவறா என்று முடிவு எடுக்க முடியாத நிலையில் இருக்கிறேன். என் உடல், சமயம், பால், வயது, கலாச்சாரம் என்ற பல கட்டுக்கோப்புகள் என் முடிவுகளைப் பாதிக்கின்றன. மிகச் சிறந்த இறைவனிடம் இருந்து, ஞானத்தைப் பெற்று, என்னுடைய உண்மையான ஆத்ம உணர்வுடன் இருந்தால், எது சரி, எது தவறு என்பதைத் துல்லியமாக என்னால் அறிய இயலும்.

4.2 மூன்று வகைக் கர்மங்கள்:

பரமாத்மா கர்மாவை 3 வகையாகப் பிரிக்கிறார்

சுகர்மம் – சந்தோஷத்தைக் கொடுக்கும் செயல் (நற்செயல்) இவை பரிசுத்தமானதாக இருக்கும்.

விகர்மம் – விகாரத்தின் வசப்பட்டு செய்யும் தீச் செயல்கள், இவை துன்பம் தரவல்லது

அகர்மம் – இச்செயல் நன்மையோ, தீமையோ பயக்க வல்லதல்ல.

4.3 கர்மத்தின் விதி:

இப்பொழுது கர்மத்தின் விதி பற்றி ஆரோய்வோம். நியூட்டனின் பெயர்ச்சி விதிப்படி, ஒவ்வொரு செயலுக்கும், அதே அளவு நேர் எதிர் செயல் உண்டு. இந்த சாதாரண சொற்றொடர் ரகசியமாக இருந்த ஒரு விஞ்ஞான விந்தையை எளிதாக்கி விஞ்ஞானம் வளர மிக முக்கியமான அஸ்திவாரம் ஆகிறது. இம்மாதிரியே, ஆத்மாவின் விதியும் ஆத்ம உலகில் ஒரு ஸ்திரமான ஒன்றாகும். ஒவ்வொரு செயலுக்கும், அதே அளவு நேர் எதிர்ச் செயல் உண்டு என்பது உண்மை. ஆகவே நான் சந்தோஷத்தைக் கொடுத்தால் நான் அந்த சந்தோஷத்தையே மீண்டும் அடைகிறேன். நான் துக்கத்தைக் கொடுத்தால் நான் அந்தத் துக்கத்தையே திரும்பப் பெறுகின்றேன்.

“நீ தினை விதைத்தால் தினையை அறுப்பாய்” என்று ஒரு கூற்று உண்டு. இதை செயல்பயன் விதி என்று கூறலாம். சில பலன்களைப் பார்க்கும்போது, இப்பலன்களுக்குச் செயல்கள் தான் காரணம் ஆகின்றன என்பதை உணர்கிறோம். ஆகவே முன் நாம் செய்த கர்மங்களின் பலன்களை இப்பொழுது நாம் அனுபவிக்கிறோம். அதுபோல் இப்பொழுது நாம் செய்யும் செயல்களின் பலனைப் பிறகு அனுபவிப்போம் என்பது விதி. பொதுவாக செயலுக்கும் அதன் விளைவுக்கும் இடையே உள்ள காலம் அதிகமாக இருப்பதால், இன்றைய விளைவுக்கு முன் செய்த செயல் தான் காரணம் என்பதை மறந்து விடுகிறோம். நாம் இந்த விளைவுகளைப் பார்த்து, பெரும்பாலும் இதற்குக் காரணம் மற்றவர்கள் தான் என்று கூறுகிறோம். சில நேரங்களில் இறைவனை சுட்டிக் காட்டி அவர் தான் இத்துன்பங்களுக்குக் காரணம் என்று கூறுகிறோம். ஆனால் கருணை மிக்க நம் அன்புத் தந்தையான இறைவன் அவருடைய குழந்தையாகிய நமக்கு சிரமத்தைக் கொடுப்பாரா என்று ஆத்மா வியக்கிறது. என் முன் செயல்கள் தான் இன்றைய விளைவுக்குக் காரணம்.

கர்மாவின் விதியானது ஒவ்வொருவரையும் தன்னுடைய வாழ்க்கை சூழ்நிலைக்குத் தானே பொறுப்பாளி என்பதை உணரச் செய்கிறது. ஊழ்வினை, விதியென்பதைப் பொறுத்தவரை, கர்மத்தின் விதியின் ஓர் பகுதியையே புரிந்து கொள்ளப்படுகிறது. இப்பொழுது என்ன நடக்கிறதோ அது முன் வினையின் விளைவு. நான் அதற்கு இப்பொழுது ஒன்றும் செய்ய இயலாது என்று இயலாமையைப் பலர் எடுத்துரைக்கின்றனர். ஒருவர், அவர் தன் முன் வினையே இன்றைய நிலைக்குக் காரணம் என்று புரிந்து கொள்ளும்போது, இதுவரையில்லாத மிகுந்த சகிப்புத் தன்மையும், பொறுமையும் தானாகவே வந்தடைகிறது. கர்மாவின் விதிப்படி இன்று நான் செய்யும் நல்ல செயல்களுக்குப் பின் விளைவுகள் நிச்சயம். பிற்காலத்தில் நல்ல பலனைத் தரும் என்று அறிந்த என்னுடைய வருங்காலத்தை நானே நிர்ணயிக்க முடியும். இன்று நான் என்

ஊழ்வினைக்கு அடிமையாக இருப்பினும், என்னுடைய பிற்காலத்தை நான் என் விருப்பப் படிப் படைக்க இயலும். நான் என்னுடைய வருங்காலத்தைத் சரியாக தேர்ந்தெடுக்கும்போது, என்னைப் பார்த்து மற்றவர்களையும் அவ்வாறே தங்கள் வருங்காலத்தை நிர்ணயிக்கச் செய்ய இயலும்.

கர்மாவை ஒரு விதையென்றும் கூறலாம். ஒரு சிறிய விதையிலிருந்து பன்மடங்கு பழங்கள் கொடுக்கும் மரம் வருவதுபோல ஒரு சிறிய செயல் பல வருடங்களுக்கு விளைவுகளை ஏற்படுத்தலாம். இது ஒரு விதையில் இருந்து பழம் சொரியும் மரம் வருவதுபோல சுலபமானது அல்ல. இங்கு ஒரு செயல் மற்ற செயல்களால் மாற்றப்பட்டு, மற்ற பலகாரணங்களால் மேலும் பல மாறுதல்களை அனுபவித்து மற்ற செயல்களின் விளைவுகள் இடையில் இதன் விளைவும் ஏற்படுகிறது. ஆகவே இன்று நாம் பல விளைவுகளால் பின்னப்பட்ட வலையில் நம்மை காண்கிறோம். நம் கர்மாவின் விளைவான வலையில் சிக்கிக் கொண்டு, உள்ள நாம் இவற்றின் மூல காரணங்களை அறிந்திட முற்பட்டால் மேலும் குழப்பத்தையே அடைவோம்.

4.4 பந்தனம்:

இப்பொழுது எழும் கேள்வி, “கர்மாவின் விதிகளை அறிவது மட்டும் அல்ல, நாம் சுமக்கும் கர்மாவின் சுமைகளை எப்படி குறைக்க முடியும் என்பது தான்” அது எவ்வாறு முடியும்?

முதலாவதாக: என் வேண்டாத கர்மச் சுமையை அதிகரிக்கக் கூடிய எச் செயலையும் நான் செய்யக் கூடாது.

இரண்டாவது: ஏற்கனவே உள்ள கர்மச் சுமையை எவ்வாறு நான் சுலபமாகக் குறைக்க முடியும்? இன்னும் ஓர் எண்ணம் தோன்றுகிறது. நான் தற்காலம் செய்யும் கர்மாவினால் என் வருங்காலத்தில் பெரும் சொத்து, பொக்கிஷம் கிடைக்கும்படி செய்ய முடியுமா?

4.5 பற்றிலிருந்து விடுதலை:

இராஜயோகக் கல்வி மூலம் இந்த 3 நிலைகளிலும் செயலாற்ற முடியும்.

1. இனி இல்லை: கர்ம ஞானத்தின் மூலம், இறைவனுடன் கொண்டுள்ள இணைப்பு மூலம், இனி எவ்வித தீச்செயலும் செய்யாது, கர்மச் சுமையை அதிகரிக்காமல் பார்த்துக் கொள்ள வேண்டும்.

2. களைவது: யோக அக்னி மூலம், பல பிறவிகளில் நாம் சேகரித்து வைத்துள்ள கர்மச் சுமையைக் குறைக்கலாம்.

3. புதிய நற்கர்மாவை (சுகர்மா) அதிகரிக்கச் செய்வது.

ஆத்ம சக்தி, பற்றற்ற நிலை ஆகியற்றின் பலத்தினால், பரிசுத்தமான நற்செயல்களே செய்தால், இனிவரும் பிறவிகளுக்குப் பரிசுத்தம், தேக ஆரோக்கியம், சொத்து, சந்தோஷம் ஆகியவை கிடைக்கும்.

பாபா, கர்மாவின் ரகசியங்களை நமக்குப் புரியும்படி கூறுகிறார்: இதுவரை பலப் பல பிறவிகளில் (பலருக்கு சுமார் 63 அசுத்தப் பிறவிகள்) நாம் தீ வினைகளே செய்து, மிக மிக அதிக கர்மச் சுமையை ஒவ்வொரு பிறவியிலும் அதிகரித்து வந்திருக்கிறோம்.

எவ்வாறு ஒரு செயலை நற்செயலா, தீச்செயலா என்று அறிவது? இதற்குப் புத்தகங்களை

ஆராய்ந்து, விடை அறிய முயன்றால் காலம் மிக செலவாகும். இதனிடையில் நாம் சுத்த செயலைச் செய்ய வேண்டியிருக்கும் அல்லது, ஒரு நற்செயலைச் செய்ய வேண்டிய காலம் கடந்து விடலாம். ஆகவே, உடனடியாக ஒரு செயலைப்பற்றி அறிய பாபா ஓர் உறைகல் நமக்கு அளிக்கிறார். நம் தேக உணர்வு சம்பந்தப்பட்ட செயல்கள்யாவும் தீச் செயல்கள் தான் என்று பாபா கூறுவதால், ஒரு செயல் தேக உணர்வைச் சார்ந்ததானால், தீச்செயல் என்றும், சரீர உணர்வு இல்லாதிருந்தால் நற்செயல் என்றும் எளிதாக நாம் அறியலாம்.

சரீர உணர்வு:

தீய செயலுக்குக் காரணம் - நான் என்னை உடல் சார்ந்த கோட்பாடுகளுக்குள் உட்படுத்தினால், அதாவது ஆண், பெண், இளைஞன், முதியவன், இந்து, கிறிஸ்துவர், கருப்பர், வெள்ளையர் என்றால் என் செயல்கள்யாவும் இந்த அவசியம் இல்லாத கோட்பாடுகளால் கட்டுப்பட வேண்டியிருக்கும். இதனால் பெரிய அல்லது சிறிய தீய செயல்கள் தான் விளையும். காமம், குரோதம், ஆசை, பற்று, கர்வம் என்பவை பெரிய தீய செயல்கள் ஆகும். என் கடந்த அனுபவத்தைக் கூர்ந்து கவனிக்கும் போது, என் புத்தி, தன்னுடைய உண்மையான அடையாளத்தை அறியாததால் எல்லாச் செயல்களையும் சரீர உணர்வே செய்து வந்ததால் வேண்டாத சுமை கொடுக்கும் விளைவுகளே நம் செயலால் ஏற்பட்டு வந்தன.

இதுவரை நான் அறியாமையில் இருந்து வந்ததால் என் கர்மச் சுமையைக் குறைக்க இயலவில்லை. என் பழைய கர்மாவின் பயனாகத்தான் நான் இப்பிறவி எடுத்த போதிலும், என் கர்மச் சுமையைக் குறைக்காமல், நான் வளர, வளர என் சுமையை அதிகரித்து வந்தேன். இதற்குக் காரணம் என் கர்மச் சுமையை எவ்வாறு குறைப்பது என்பது பற்றிய (என் தீயச் செயல்களைப் பிரித்தறியக்கூடிய அறிவு) என் அறிவு இல்லாமை தான். என் சரீர உணர்வால் தீயச் செயல்கள் செய்து, துன்பத்தில் சிக்கினேன். நான் எனக்கும் மற்றவர்களுக்கும் துன்பத்தையே அளித்து வந்தேன். அதை அகற்றுவதற்கு ஒரு வழி உண்டு.

ஆன்ம உணர்வு:

நற்செயல்களுக்கு வழி

மிக உயர்ந்த ஆத்ம உணர்வில் இருந்து கொண்டு, செயலாற்றினால், அச்செயல் ஆத்மாவிற்கும், மற்றவர்களுக்கும் சந்தோஷத்தையே கொடுக்கும். இதைத்தான் நற்செயல், பரிசுத்தமான செயல், நல்விளைவுகளை ஏற்படுத்தும் செயல் என்று கூறுகின்றோம். இதை இன்னும் சிறிது ஆராய்வோம். நாம் ஒரு பரிசுத்தமான செயல், சந்தோஷத்தையே கொடுக்கவல்லது என்று கூறினால், இது சிறிது குழப்பத்தை ஏற்படுத்துகிறது. காரணம் என்னிடம் உள்ளவற்றைத்தான் நான் மற்றவர்களுக்குக் கொடுக்க இயலும். இத்தருணத்தில் என்னிடம் அளவில்லாத சந்தோஷம் இல்லை. ஏன் இன்னும் சொல்லப்போனால் மற்றவர்களிடம் பகிர்ந்து கொள்ளும் அளவு கூட சந்தோஷம் இல்லையே. என்னிடம் என்றும் சாசுவதமான சந்தோஷம் இல்லையே.

என்னிடம் உள்ள சந்தோஷமே ஒவ்வொரு கணமும் மாறி மாறி உள்ளது. அவ்வாறு இருக்கும்போது நான் மற்றவர்களுக்கு எவ்விதம் சந்தோஷத்தை அளிக்க இயலும்? அதற்கு ஒரு வழி உண்டு. அந்த சந்தோஷத்தை எங்கிருந்து நான் பெற முடியும்? நான் ஆனந்தக்

கடலான பரமாத்மாவுடன் இணைப்பு கொள்ளும்போது, எனக்கு வேண்டிய அந்த சந்தோஷத்தைப் பெற முடியும். நற்செயலின் முதல் கட்டமானது என் செயல்களினால் நான் இறைவனுக்கு மிக அருகில் சென்று இணைந்து அவரிடம் இருந்த அந்த சந்தோஷத்தைப் பெறுவது தான்.

நான் இறைவனிடம் இருந்து பெறும் இச்சந்தோஷத்தை மற்றவர்க்குக் கொடுக்கும்போது அவருக்குக் கிடைக்கும் சந்தோஷத்திற்கு எல்லை உண்டு. அதைவிட மிகச் சிறிய செயலானது அந்த மற்றவரை சந்தோஷகரமான இறைவனிடமே அழைத்துச் சென்று அவருக்கும், இறைவனுக்கும் இணைப்பு ஏற்படுத்துவது தான் மிகமிக சீரிய செயலாகும். இது நற்செயல் அல்லது சுகர்மா என்று கூறப்படுகிறது. இப்பொழுது, தீயச்செயல், தானம் ஆகியவைப் பற்றி என் கருத்துக்களே மாறுகின்றன.

தீயச் செயலும் தானமும்:

இதுவரை திருடுவது, கொலை செய்வது போன்றவையே தீயச் செயல்கள் என்று எண்ணி வந்தேன். இப்பொழுது ஆத்ம உணர்வு வந்தவுடன் நான் இதுவரை செய்து வந்த செயல்கள் யாவையுமே தீயச் செயல்கள் என்று உணர்கிறேன். எந்த விளைவுகளுமே இல்லாத செயல்கள் கூட உதாரணமாக உறங்குவது, உண்பது, உயிர் வாழ்வது போன்றவை கூட பரிசுத்தமாக இல்லாததால் அவைகளும் தீயச் செயல்கள் தான். தானம் பற்றிய என் கருத்தும் மாற்றம் அடைகிறது. நான் உடல் அளவில் பணி செய்தால், அது ஓர் அளவுக்குள்தான் அடங்கியிருக்க முடியும். நான் நர்ஸ் ஆக இருந்து மருந்து கொடுத்தால், இது தானம் தான்; ஆனால் அது எல்லைக்குட்பட்ட சேவையே. சுகவீனம் வருவதற்கு அவர்கள் முன்பு செய்த தீய கர்மா தான் காரணம். நான் கொடுக்கும் மருந்து தற்காலிகமாகத்தான் பயன்படும். என் மருந்து நோயாளியைப் பூரண குணம் அடையச் செய்ய முடியவில்லை. நான் அவர்களுக்குச் சரியாக உதவ வேண்டுமென்றால், அவர்களுடைய தீய கர்மச் சுமையைக் குறைக்கும் வழியைக் காண்பிப்பதே சரியானதாகும். இதன் மூலம் சுமை குறைந்து அவர்களுக்கு எப்பொழுதும் ஆரோக்கியம் மேலோங்கியிருக்கும்.

இன்று நான் தரும் மருந்து அவருக்குத் தற்காலிக நிவாரணமே அளிக்கிறது. அதே சமயம் நான் என்னுடைய ஆத்மீக ஞானத்தையும், அவர்களுடன் பகிர்ந்து கொண்டு, அவர்களை எல்லாம் வல்ல இறைவனிடம் அழைத்துச் செல்லும்போது, அது சீரிய நற்செயல் ஆகிறது. அவரும் தன் தீய கர்மச் சுமையைக் குறைக்கும் வழியைக் கற்கிறார்.

பசித்திருக்கும் ஒருவருக்கு நான் எத்தனைக் காலம் ஆகாரம் அளிக்க முடியும்? அவர் ஆயுள் முழுவதும் உணவு அளிக்கும் பொறுப்பை நான் ஏற்க இயலாது. என்னைப் பற்றியே நான் அறியவில்லை. ஒருவேளை, ஒரு நாள் உணவு மட்டும் அளித்து அவருடைய பசிக்குத் தற்காலிக நிவாரணம் அளிப்பதைவிட அவருக்கு ஆத்மீக ஞானத்தைக் கொடுத்து அவருடைய வறுமையின் காரணம் முன்வினைத் தீயச் செயல்தான் என்பதையும் அவைகளைத் குறைப்பது ஞானத்தின் மூலம் தான் என்பதையும் உணர்த்த வேண்டும். இந்த யோகத்தின் மூலம் அவருக்குத் தேவையான சக்தி வந்து, அவரது உணவை அவரையே சம்பாதிக்க வைப்பது மிக உன்னத காரியமாகும். இதன் மூலம் அவர், தனக்கு மட்டுமல்லாமல், மற்றவர்களுக்கும் அவரே உணவு தேடிக் கொடுக்கும் ஆற்றலை அடைகிறார்.

தானம் என்பதற்கு மேலே கூறிய இரு உதாரணங்களே போதும். உடல் சார்ந்த தானம், ஓர்

அளவு தான் செய்ய இயலும். ஆத்மா கர்மாவை அறிவதால், அச்சேவை அளவில்லாத ஒன்றாகும். கொடுப்பது, பணிபுரிவது ஆகியவற்றின் பலன் மற்றவர்களை இறைவனிடம் கொண்டு செல்வது மட்டுமல்லாமல் என்னையும் இறைவனிடம் மிக அருகில் சேர்த்து உடனடி பலனையும் அளிக்கிறது.

இதனால் கர்மாவைப் பற்றி அறிவதால், தீய செயல்கள், தானம் என்பவற்றைப் பற்றி நான் இதுவரை கொண்டிருந்த அபிப்பிராயம் மாறுகிறது.

4.6 என் வாழ்வின் செயல்கள்:

இப்பொழுது நாம் நம் தினசரிச் செயல்களைக் கூர்ந்து கவனித்து, அவை எவ்வளவு தூரம் தீயச் செயல்களாக அல்லது நற்செயல்களாக ஆகின்றன என்பது பற்றிச் சிறிது சிந்திப்போம்.

உயிர்வாழ்தல்: நான் உயிர் வாழ சில காரியங்கள் செய்ய வேண்டியிருக்கிறது. மற்றவர் மீது பாரமாக இருக்க விரும்பாததால் நாம் வாழ, பொருள் சம்பாதிக்க, வேலை செய்ய வேண்டியுள்ளது. என் உடலுக்கு உணவூட்ட வேண்டியுள்ளது. என் உடல் வளத்தையும் கவனிக்க வேண்டியுள்ளது. ஒரு நாளின் பெரும்பாலான நேரத்தை நான் உறங்குவதற்கும், வேலை செய்வதற்கும், உண்பதற்கும் செலவிட வேண்டியுள்ளது.

பொறுப்பு:- இரண்டாவதாக மற்றவர்களைப் பராமரிக்கும் பொறுப்பும் என்னிடம் இருப்பதால் அதற்கென சில காரியங்களை நான் செய்ய வேண்டியுள்ளது. ஒருவர் தனக்காக மட்டுமல்லாமல், தன் குடும்பத்தைப் பேணவும் பொருள் சம்பாதிக்க வேண்டியுள்ளது. அவ்வாறே வீட்டைக் கவனிக்கும் தாய், தன்னை மட்டுமல்லாமல் வெளியில் சென்று பொருள் ஈட்டிவரும் ஆண் மகனுக்காகவும் பெரும் நேரத்தைச் செலவிடுகிறார்.

பொழுது போக்கு: வேலை செய்த களைப்பு நீங்க பொழுது போக்கிற்காகச் சிலசெயல்கள் - உதாரணமாக விளையாட்டுகள் போன்றவை விளையாடப்படுகின்றன. இது மூன்றாவது வகையாகும்.

தொண்டு: இது நான்காம் வகை. மற்றவர்களின் நன்மைக்கே செய்யப்படும் செயல்களின் தொண்டு இப்பிரிவில் வரும்.

ஆராய்ச்சி: இப்பொழுது இன்றைய நாள் ஏட்டைப் பார்த்து, நம் செயல்கள் தீயச் செயலா, அல்லது நற்செயலா என்று சிந்திப்போம். இந்த இரு பிரிவுகளில் வராத செயல்களும் உண்டு. நான் உயிர் வாழ செய்யப்படும் செயல்கள், கர்வம், பேராசை, காமம், குரோதம் காரணமாகச் செய்யப்பட்டால் அவை நடுத்தரச் செயல்களாக இல்லாமல் சுமையை அதிகரிக்கும் தீயச் செயல்கள் ஆகின்றன.

என் உடலைப் பேணுதல்: இது மமதை அல்லது கர்வமாகச் செயல்பட்டால் இதுவும் ஒரு தீயச் செயலே. இதையே பற்றில்லாமல், உடலைப் பாதுகாத்தல் எனில், இது தீயச் செயலும், நற்செயலும் இல்லாத ஒரு நடுத்தரச் செயலாகும்.

இந்த கர்மங்கள் சூழ்ந்திருக்கும், உடல் சார்ந்த உலகில் நாம் உயிர் வாழத் தேவையான சில அடிப்படைச் செயல்களை இந்த உடலில் உள்ள ஆத்மாவாகிய நான் செய்ய வேண்டியிருக்கிறது. அச்செயல்களை எவ்வாறு நற்செயல், தீய செயல் அல்லாத நடுத்தர செயல்

என்ற வகையில் செய்ய முடியும்? ஆத்ம உணர்வில், இறை உணர்வில், இந்த உடல் நமக்கு இறைவனால் கொடுக்கப்பட்ட கருவி, ஆகவே இது கொண்டு இறைவனுக்கே பணிபுரிய வேண்டும் என்று உணர வேண்டும். என் விழிகளின் மூலம் புனித பார்வையை உலகில் செலுத்துகிறேன். உதடுகளால் இறைவனின் செய்திகளைப் பரப்புகின்றேன். இந்த உடலுக்கு நாம் தர்மகர்த்தா அல்லது டிரஸ்டி என்று எண்ணிச் செயலாற்ற வேண்டும்.

இறைவனால் அவரது சேவையின் பொருட்டு கடனாக இந்த உடல் நமக்கு அளிக்கப்பட்டுள்ளது. இதை உணர்ந்தால், மிக உன்னத நிலையில் இருந்து நாம் இவ்வுடலைப் பற்றில்லாமல் மிகவும் சிரத்தையுடன் பாதுகாப்போம். அப்பொழுது ஒவ்வொரு செயலும்சீரிய செயலாகிறது.

இரண்டாவது வகையான செயல்களில் மற்றவர்களுக்காக என் பொறுப்பில் வரும் செயல்களில், பேராசை, பற்று, குரோதம் காரணமாக அச்செய்லகளைப் புரிய வேண்டிய அவசியம் இருக்கலாம். தினசரி இதுதான் நடைபெறுகிறது. நான் யோகியாக இருப்பின் நான் வேலை செய்யும் இடத்திலும் இறைவனின் தொடர்பில் வரும் பிரபாவத்தைக் கொண்டு, பொருட் சுகத்திற்காக நான் செயலாற்றவில்லை. என் உழைப்புக்குத் தகுந்த ஊதியத்தையே நான் பெறுவதால் கர்மக்கடன்களும் ஏற்படுவதில்லை. நான் பணிபுரியும் இடம் இறைவனுக்கு நான் தொண்டு செய்யும் இடமாக நினைப்பதால் வரும் சந்தோஷம், அமைதி தரும் பிரபாவம், மற்றவர்களையும் அமைதி அடையும்படித் தூண்டுகிறது. என்னுடைய எடுத்துக்காட்டு மற்றவர்களை மாற்றி இறைவனிடம் அழைத்துச் செல்கிறது.

நான் சமையல் செய்யும்போது கூட எந்தவிதத் தீய எண்ணங்களும் இல்லாமல், இறைவனின் நினைவில் இறைவனால் என் குடும்பத்திற்கு அளிக்கப்பட்ட பிரசாதமாக எண்ணிப் பணிபுரிகிறேன். முதலில் அவ்வுணவை அன்புடனும், பக்தியுடனும் சமைக்கிறேன். அவ்வுணவு அன்பும், பரிசுத்தமும் நிறைந்திருப்பதால், உடலுக்கு மட்டுமன்றி ஆத்மாவிற்கும் ஊட்டம் கொடுக்கிறது.

ஆகவே என் பொறுப்புகளை இவ்வாறு நான் நிறைவேற்றும்போது நற்செயல்களேயன்றி தீயவை நிகழ வாய்ப்பில்லை.

மூன்றாம் வகை: என் பொழுதுபோக்கும் புலன் சார்ந்தே உள்ளது. இன்று உலகம் உடல் உணர்வில் இருப்பதால் செயற்கை இன்பத்தையே விரும்புகிறது. நமக்குள்ளே இருக்கும் சந்தோஷத்தை ஆத்மா அறியவில்லை. ஆகவே, என் செயல்கள் என்னை உடல் உணர்விற்கே இழுத்துச் செல்கின்றன. சில நேரங்களில் என் பொழுது போக்கு மற்றவர்களுக்குத் துன்பத்தையே கொடுக்கிறது. என்னுடைய சந்தோஷமே எனக்கு முக்கியமாக இருப்பதால், இதை நான் கவனிப்பதில்லை.

நான் யோகியானவுடன், இறைவனின் அருகில் நானும் மற்றவர்களும் செல்வது தான் என் ஆத்மாவிற்கு திருப்தியையும், இன்பத்தையும், அளிக்கவல்லது என்று அறிகிறேன். ஆகவே என் பொழுதுபோக்கிலும் புலன்களுக்கு அப்பாற்பட்ட இன்பத்தையே நான் அனுபவிக்கிறேன்.

நாம் இப்பொழுது இருக்கும் சங்கமயுகத்தில் நாம் செய்யும் செயல்கள் மிகச் சீரியதாகவே இருத்தல் அவசியம்.

4.7 யோக அக்னி

ஆத்மாவானது இறைவனுடன் இணைந்து பெறும் அனுபவத்தை மற்ற ஆத்மாக்களுடன் பகிர்ந்து கொள்ள விரும்புகிறது. இப்பொழுது கர்மாவின் திசை மாறுகிறது. யோக அக்னி நம் பழைய பாவங்களை அழித்து நம் பழக்க வழக்கங்களை மிக உன்னதமானவையாக மாற்றுகிறது. இறைவனிடம் இருந்து நாம் அடையும் சக்தி பரிசுத்தமான செயல்களையே நம்மைச் செய்ய வைத்து, நம் வருங்காலத்திற்கான பாக்கியத்தை உருவாக்கி அமைக்கிறது.

இறைவனின் சக்தியுடன் இன்று விதைக்கப்படும் விதையும், ஆயிரம் மடங்கு பலனுடன் வருங்காலத்தில் நமக்கும், நம்மைச் சேர்ந்தவர்களுக்கும் வந்து சேர்கிறது. ஒரு ஆத்மா மற்ற ஆத்மாவிற்கு செய்யும் கர்மத்திற்கு பலனும் ஒரு மடங்கே கிடைக்கிறது. ஆனால் அந்த கர்மத்தின் விதையானது, இறைவனின் சக்தியால் அன்பால் நிரப்பப்படும்பொழுது அவ்விதையின் சக்தி அதிகரித்துப் பன்மடங்கு பலன் அளிக்கிறது.

இறைவனின் நினைவில் செய்யப்படும் ஒவ்வொரு செயலும் எனக்கும், மற்றவர்களுக்கும் நல்ல பலனையே தருகிறது.

4:8 சிரேஷ்டமான செயலுக்குக்கான தியானம்:

தியானத்தில் சில நிமிடங்கள் அமருங்கள்; கீழ்க்காணும் எண்ணங்களை மனதில் கொள்ளுங்கள்.

தியானத்திற்குச் சில எண்ணங்கள்:

நான்...ஒரு.... ஆத்மா....ஒரு ஒளிமிக்க புள்ளிவடிவான ஆத்மா.... நான்... ஆடையாகிய... .இந்த....உடலில் இருக்கிறேன். என் எண்ணங்கள்...என் உணர்வுகள்....அந்தப் புள்ளியில்.... செல்கின்றன....இந்த உடல்....என் சந்தோஷத்திற்குத் தேவையான....ஆடை..... என் செயலுக்குத் தேவையான.... ஆடை.என்னை விட்டு....உலக சம்பந்தமான.... பொருட்கள்.... நினைவுகள்... .விலகுகின்றன....நான்....அந்த....ஒளி உலகிற்கு.....என்...உலகிற்குப்....பறந்து..... செல்கின்றேன்.

என் ஆத்மாவினுள்... என் பழக்கவழக்கங்கள்.... ஊழ்வினைகள் ஆகியவை....பதிந்து கிடக்கின்றன. நல்வினைகள், தீவினைகள் ஆகியவற்றின் பதிவுகளை நான் சுமந்து கொண்டிருக்கிறேன்....என்பதை.... அறிகிறேன்.....

என் தந்தையான பாபாவை.... சமுத்திரத்தை... ஒளிவீசும் நட்சத்திரத்தை... அன்பு நண்பனை... சந்திக்கிறேன். அவருடைய ஒளியால்.....தெய்வீகக் குணங்களால்....உயர்ந்த அன்பினால்.....உயர்ந்த அமைதியால்.....சந்தோஷத்தினால்..... நான் மூழ்கடிக்கப்படுகிறேன். என்னுடைய.....பழைய.....தீய... ஊழ்வினைகள்....மறைகின்றன. அன்புத் தந்தையின்... கரங்கள்.....அமைதியற்றுக்...கலங்கியிருக்கும் ஆத்மாவைத்தழுவி ....சமாதானப் படுத்துகின்றன.... .மெதுவாக.... என்...இயற்கையான.....உண்மையான... .குணங்களான.... அன்பு..... அமைதி... ..சந்தோஷம்....திருப்தி ஆகியவை வெளிப்படுகின்றன. இப்பொழுது நான் .... என் செயல் செய்யும் ஸ்தூல உலகிற்குத்.... திரும்புகின்றேன். உண்மையின் சக்தியால்.... நான் நிரம்பியிருக்கின்றேன். ஆகவே .... நான் செய்யும்.....செயல்கள்.....உண்மையானவை..... பரிசுத்தமானவை..... அவை என்... சகோதரர்களுக்கும் பரிசுத்தமான.... உணர்வுகளைத் தருகின்றன.

4.9 தினசரி நம் முன்னேற்றத்திற்கு உதவும் சில நடைமுறைகள்:

எண்ணத்தின் சக்தி - எண்ணத்தைப் பொருத்து தான் அதன் பயன் விளையும்: என் எண்ணங்களே செயல்களை உருவாக்குகின்றன. அதிர்வுகளைப் பரப்புகின்றன. கர்மாவின் விதிகள் அவற்றை உங்களுக்குப் பிரதிபலிக்கின்றன. பரிசுத்தமான எண்ணங்கள் ஒருவருடைய வாழ்வின் விலையுர்ந்த பொக்கிஷமாகும்.

4.10 படிப்பு

கர்மாவின் அறிவு மாணவருக்கு மிக்க சந்தோஷத்தையும் நிம்மதியையும் அளிக்கிறது. அதுமட்டுமல்லாமல், நம் வருங்காலத்திற்கும் நல்ல பலன் தர அடிகோலுகிறது.

கேள்விகள்:

1) கர்மாவின் விதி என்ன?

2) நம் துன்பத்திற்கும், இன்பத்திற்கும் யார் காரணம்?

3) துன்பம் தரும் ஊழ்வினைகளை எவ்வாறு அழிக்க இயலும்?

4) வருங்காலத்திற்குத் தேவையான சந்தோஷத்தை எவ்வாறு சேமிக்க முடியும்?

பாடம்: 5

பிரபஞ்ச வட்டம்

5.1 இறைவனின் கருவியான மனித உடலுக்கு பிரஜாபிதா பிரம்மா என்று பெயர் சூட்டப்பட்டுள்ளது. இவர் மூலமாக இறைவன் சிருஷ்டி சக்கரத்தைப் பற்றி விளக்குகிறார். நமது தியானத்தின் நிலைக்கும், தினசரி செயல்களுக்கும் இக்கல்விக்கும் முக்கியத்துவம் உண்டு. இந்த ஆத்மீக ஞானத்தினால் நாம் இறைவனுக்கு மிக அருகில் சென்று அவரிடம் இருந்து சக்தியைப் பெற முடியும். என்னுடைய அன்றாட செயல்களை எவ்வாறு செலாற்ற வேண்டும் என்பதை உணர்ந்து மாற்றத்தை கொண்டு வர முடிகிறது. இந்த மாற்றமானது ஒவ்வொரு நாளும், ஒவ்வொரு நொடியும் என்னுடைய குறிக்கோளை நோக்கி முன்னேற வைப்பதாக இருக்க வேண்டும். இந்த எண்ணத்தை ஒரு ஆன்மீக கருத்தாக மட்டும் ஏற்றுக் கொண்டால் இது நம்முடைய பரிபூர்ண உன்னத நிலையை அடைய உதவிடாது, ஆனால் உண்மையில் இந்த ஆன்மீக ஞானம் மூலம் இறைவனுக்கு அருகாமையில் என்னை கொண்டு செல்லும் போது எனது தினசரி செயல்களை சரியாகச் செய்யவும் உதவுகிறது ஆனால் இறைவனின் நினைவே என்னை உயர்த்துகிறது.


5.2 இந்த வட்டத்தின் ரகசியமானது, காலத்தின் மூன்று பகுதிகளான கடந்த காலம், நிகழ்காலம், வருங்காலம் என்பவை ஆகும். கடந்த காலம் ஒரு நேரத்தில் நிகழ்காலமாக இருந்தது; இப்பொழுது உள்ள நிகழ்காலம் ஒரு சமயம் வருங்காலமாக இருந்தது. அன்று வருங்காலமாக இருந்தது இப்பொழுது நிகழ்காலமாக உள்ளது. எனவே, கடந்தகாலம், நிகழ்காலம், வருங்காலம் என்பவை சுழன்று கொண்டிருக்கும் காலச் சக்கரத்தில் ஒரு நேரத்தில் இருந்த ஒரு நிலையைத் தான் குறிப்பிடுகிறது. காலத்தில் பௌதீக பரிமாணங்களைத் தாண்டிச் சென்று நோக்கினால் அந்த பலவித காலங்களுக்கு இடையில் வித்தியாசம் ஒன்றுமில்லை என்பது தெளிவாகப் புரியும். இந்தச் சுழலும் சக்கரம் சாசுவதமான ஒன்று என்பதை உணர்த்து கிறது.

5.3 மனித மனம் ஆரம்பம், முடிவு என்பதைப் பற்றி இதுவரை சிந்தித்ததில்லை. ஆகவே சாசுவதம் என்பதை மனித மனம் நினைத்துப் பார்ப்பதற்குக் கடினமாக இருப்பதுமன்றி, அதே உணர்வில் தினசரி செயலாற்றுவதும் மிகக் கடினம். இதுவரை என் கடந்த காலம் என்பது எல்லையில்லாத காலம்; என் அறிவுக்கு அப்பாற்பட்ட காலம். ஓர் ஆரம்பம் முடிவில்லாத - சதா சுழலும் சாசுவதமான ஒன்று என்று நினைக்கும்போது அச்சமாக இருக் கிறது.

5.4 உடலுணர்வினால் நான் வளர்த்துக் கொண்ட இந்த 4 சுவர்களுக்கு நடுவில் வாழ்வதே எனக்கு திருப்தி அளிக்கிறது. வெகு தொலைவில் உள்ள வருங்காலத்தையோ, கடந்த காலத்தை யோ நான் அறிய விரும்பவில்லை. 10, 20, 30 வருடங்களுக்குள் உள்ள கடந்த காலத்தை அறிவதே எனக்குப் போதுமானதாக உள்ளது. மேலும் 10 அல்லது 20 வருடங்களுக்கு மேல் உள்ள வருங்காலத்தையும் சில நேரங்களில் நான் அறிய ஆசைப்படுவதில்லை. வேறு சில நேரங்களில் இனிவரும் 10 வருட வருங்காலத்தைக் கூட நான் அறிய எத்தனிப்பதில்லை. அடுத்த ஆண்டு எவ்வாறு இருக்கும் என்பதை அறிய ஆவலுடன் இருப்பதால், கைரேகை, ஜாதகத்தில் எனக்கு மிகுந்த சிரத்தை உண்டு. என்னைப் பொறுத்த வரையில் பல ஆண்டுகள் கடந்த பின் நான் முதுமையில் எவ்வாறு இருப்பேன், நான் விரும்பும் ஒருவருடன் வாழ்ந்து கொண்டிருப்பேனா என்று என் வருங்காலத்தைப் பற்றிய கேள்விகளும், அச்சங்களும் என்

மனதில் எழுகின்றன. இதற்கு மேலும், அந்நேரத்தில் உலகின் நிலை எவ்வாறு இருக்கும் என்று பலவாறு நான் குழப்பம் அடைவதால், வருங்காலத்தின் அறிவு இல்லாத அறியாமையிலேயே சந்தோஷமாக இருக்க விரும்புகின்றேன். பிற்காலத்தைப் பற்றிக் கவலைப்படாமல் தினசரி வேலைகளைச் செய்துகொண்டு அடுத்த நாளைப் பற்றி மட்டும் நினைத்து இருக்க விரும்புகிறேன். ஆகவே, வெகு தூரத்தில் உள்ள என் எதிர்காலத்தைப் பற்றி அறிய எனக்கு எந்த ஆர்வமும் இல்லை.

5.5 ஆனால் காலம், தூரம் என்ற பௌதீகக் கட்டுப்பாடுகளுக்குள் இருக்க ஆத்மாவிற்குத் திருப்தி இல்லை. ஆத்மாவினுள் ஏதோ ஒன்று இந்த உடலில் நான் வருமுன்பு நான் எங்கிருந்தேன்? என்று வினா எழுப்புகிறது. இதைத் தாண்டி ஏதாவது ஒன்று இருக்கிறதா? இந்த ஆர்வத்தினால் ஆத்மா தன் அடையாளத்தைத் தேட ஆரம்பித்து, தான் ஓர் ஒளிமிக்க உயர்ந்த புள்ளி வடிவானது என்பதையும், இந்த உடலைவிட்டுத் தனித்துள்ள ஒன்று என்பதையும் உணர்கிறது. இந்த உணர்வில், ஆத்மாவானது காலம், தூரம் என்னும் பரிமாணங்களைக் கடந்து, நான் முன்பு இருந்தேன். இப்பொழுது இருக்கிறேன். இனி மேலும் இருப்பேன் என்ற சாசுவத தத்துவத்தை அனுபவிக்கிறது. நான் துவக்கம், முடிவு இல்லாத என் நிலையை அறிகிறேன்.



5.6 இவ்வுணர்வில் வட்டமாகச் சுழலும் உலக சரித்திர நிகழ்ச்சிகளைக் காண்கிறேன். ஆத்மாவாகிய நான் சாசுவதமான என் குணங்களுடன், பழக்க வழக்கங்களுடன் சாசுவதமான வட்டத்தில் சுழன்று வருகின்றேன். நான் என்னை மட்டும் ஆத்மாவாக உணராமல் மற்ற எல்லோரையும் ஆத்மாவாக உணர்ந்து, அவர்களும் தங்கள் பங்கினை எவ்வாறு நிறை வேற்றுகிறார்கள் என்பதைப் பார்க்கிறேன். அவர்களின் செயல்கள் செயலின் பலன்கள் ஒன்றோடு ஒன்று பின்னப்பட்டு, ஒருவரின் வாழ்க்கைச் சரித்திரமானது மற்றவரின் சரித்திரத்திலிருந்து பிரிக்க முடியாதிருப்பதையும் நான் காண்கிறேன். ஒவ்வொரு வினாடியும் இதில் மாற்றங்கள் உண்டு. எந்த ஒரு நேரத்திலும் இச்சக்கரத்தின் நிலை ஒரே மாதிரியாக இருப்பதில்லை. ஒவ்வொரு கணத்திலும் மாற்றங்கள் இருந்தாலும், இது முறையாகச் சுற்றுவதன் காரணமாக குழப்பம் வருவதில்லை. இந்த காலச் சக்கரம் தாறுமாறாக சுற்றாமல் மிக மிகச் சரியாக தன்னுடைய நிலையிலே சுற்றி வருகிறது.

5.7 இந்த வட்டத்தில் பல ஆத்மாக்கள் தங்கள் பங்குகளை உலகம் என்ற மேடையில் செய்வதால், இதை ஒரு நாடகம் என்றும் கூறலாம். ஒவ்வொருவரும் தங்கள் பங்கைச் செய்யும்

போது கர்மா பல அழகான காட்சிகளை நிர்ணயிக்கிறது. இது எல்லையில்லாத நாடகமாகும்.

ஒரே மேடையில் ஆயிரம் பேர் தோன்றி அழகாகத் தங்கள் பங்கைக் குழப்பமில்லாமல் நடித்துக் கொண்டிருப்பதை மனக் கண்ணால் பாருங்கள். நான் நடித்துக் கொண்டிருக்கும் இதே நாடக மேடையைப் பலகோடி முறை பெருக்கிப் பார்த்தால் இந்தநாடகத்தின் எல்லை யற்ற தன்மையை உணரலாம்.

ஆனால், இந்த நாடகத்திற்கும் ஒரு காலக்கெடு உண்டு. அக்காலம் 5000 ஆண்டுகள் தான். இக்காலத்தில் இந்நாடகத்தில் பலப்பல காட்சிகள் உண்டு. மற்ற நாடகங்களைக் காட்டிலும் இந்நாடகத்தில் சிறப்பு என்ன? இந்நாடகம் காண்பவர்க்கு மட்டுமல்லாமல் நடித்துக் கொண்டிருப்பவர்களுக்குப் பல அனுபவங்களைக் கொடுக்கிறது; ஆனந்தம் அளிக்கிறது. ஆகவே, முதலில் நாம் பார்வையாளராக இருந்து இந்தப் பிரம்மாண்ட நாடக மேடையில் நடைபெறும் காட்சிகளைக் காண்போமாக.

எல்லையற்ற நாடகம் - காட்சி 1

5.8 சூரியனும், சந்திரனும் நாடக மேடைக்கு ஒளியூட்ட, நாடகம் ஆரம்பம் ஆவதைக் காண்கிறோம். இந்நாடகம், சாசுவதமாக, எல்லையற்றதாக, ஆரம்பம் முடிவு இல்லா திருந்தாலும், காட்சிகள் ஒரு குறிப்பிட்ட வரிசையில் வருவதால், அதன் ஆரம்பக் கட்டத்தை நோக்குவோம். ஒரு சில நடிகர்களுடனே தோன்றும் காட்சி தான் ஆரம்ப காலமாகும். பூமி புதியதாகவும், இளமையாகவும் இருக்கிறது. இயற்கையும், மற்ற பொருட்களும் அழகில் மிளிர்கின்றன. இயற்கை மிகச் சீரிய முறையில் இயங்குகிறது. பூமி, காற்று, நீர், நெருப்பு, வானம் ஆகியவை சீராக இணைந்து நடிகர்கள் தோன்றுவதற்காக அழகிய பின்னணியை அமைக்கின்றன. இந்தச் சிறந்த அழகுமிக்க இடத்தைச் சொர்க்கம் என்றும் அழைக்கலாம். இதை கடவுளின் நந்தவனம் என்றும் கூறலாம். மலர்களில், நீரில் கூட அழகு மிளிர்கிறது. காற்றில் நறுமணம் கமழ்கிறது. காற்று மெதுவாக அசைந்து, கன்னங்களை வருடுகின்றது. இங்கு இருப்பவர்கள் சாதாரண மனித உருவில் இருந்தாலும் தேவதைகளாகப் பிரகாசிக்கிறார்கள். இங்குள்ள மனிதர்கள், விழிகளிலும், அழகிய முகத்திலும் புன்முறு வலுடன் காணப்படுகிறார்கள். அவர்களின் சொற்களிலும் சிரிப்பு மலர்கிறது. ஒவ்வொருவரும் அன்பைப் பொழிவதைக் காண்கிறேன். என் கனவுலக சுவர்க்கம் இப்பூமியில் இருப்பதைப் பார்க்கிறேன். இது ஒரு பொற்காலம், சத்தியத்தின் காலம். சத்யுகம்.

இக்காலத்தில் மனிதர்கள் மிகச் சரியாக உள்ளனர். சீரான, ஒருங்கிணைந்த அன்பு அமைந்துள்ளது. இங்கு ராஜ்ய பரிபாலனை நடப்பதால், ஆள்பவர்களையும் இங்கு காண்கிறேன். அரசர்கள் அன்புடனும், கட்டுப்பாட்டுடனும் அரசாட்சி செய்கின்றனர். அவர்களின் பேச்சு விவேகத்துடன், பேரறிவுடன் இருப்பதால் பிரஜைகள் அரசர்கள் சொற்படி நடக்கின்றனர். அரசரின் ஆணை தான் பிரஜைகள் நீதியாகிறது. ஆகவே, அங்கு நீதி நூல்கள் எழுதப்படுவதில்லை. அரசரின் ஆணைகள் உடனடியாக நிறைவேற்றப் படுகின்றன. அரசரின் பொன்மொழிகள், நீதியாக இருப்பதால், நீதியின் மேல் வாழ்க்கை அமைவதால் அமைதி நிலவுகிறது. இது தான் பொற்காலத்தின் அரசாட்சி. இப்புதிய காலம் தான் நமக்காகக் காத்துக் கொண்டிருக்கிறது. இது தான் தேவதைகளின் ராஜ்ஜியம். இதைத்தான் சத்யுகம் என்று கூறுகின்றனர். இந்தச் சத்யுகத்தில் இருப்பவர்கள் தேவதைகளாக உள்ள மனிதர்கள் தாம். இந்த ராஜ்ஜியத்தை ஆள்பவர்கள். கடவுளால் அளிக்கப்பட்ட விவேகம், தர்மம் மூலம் ஆட்சி புரிவதால் இங்கு மந்திரிகள், ஆலோசகர்கள் கிடையாது. ராஜ்ஜிய பரிபாலனையும் இறை அன்பு, பண்புடன்

நடை பெறுகிறது. அரசர்கள் அவர்களைச் சூழ்ந்திருக்கும் ஒளியாலாகிய பவித்திர கிரீடத்தையும் மிக்க விலைமதிப்புயர்ந்த ரத்தினங்களால் ஆன கிரீடத்தையும் அணிந்திருக்கின்றனர். இந்தக் கிரீடம் அவரது அரசாட்சி புரியும் வலிமையையும் சக்தியையும் காட்டுகிறது. இந்த உலகில் முழு ஒற்றுமை தான் எங்கும் உள்ளது. அவ்வாறே உலக அரசாட்சியும் ஒன்று தான்; உலக சமயமும் ஒன்று தான். இங்குள்ளஒரே மொழியில், இனிமையும் அமைதியும் உள்ளன.

நான் எங்கு பார்த்தாலும் சந்தோஷத்தைப் பிரதிபலிக்கும் முகமே எனக்குத் தெரிகிறது. இளையவரானாலும், முதியவரானாலும் அழகுடன் திகழ்கின்றனர். தேக சுகவீனம், மரணம் ஆகியவற்றின் சுவடே எங்கும் தென்படவில்லை. ஒருவர் முதுமை எய்தியவுடன் ஆத்மா அந்த முதிய உடலைவிட்டுப் பறந்து சென்று இன்னும் ஒரு சிறிய புதிய உடலில் புகுந்து புதிய வாழ்வில் ஈடுபடுகிறது. ஆத்மா உடலைவிட்டுப்பிரிந்தவுடன், காத்துக் கொண்டிருக்கும் இன்னும் ஒரு அழகிய உடலில் புகுவதால் அங்கு மரணத்தினால் கண்ணீர் சிந்த வேண்டிய அவசியம் இல்லை. ஒரு படகு ஒரு கரையை விட்டு, நண்பர்கள் சூழ்ந்திருக்கும் அடுத்த கரையை அடைவதுபோல், ஒரு உடலில் இருந்து அடுத்த உடலுக்கு ஆத்மா செல்கிறது. கஷ்டமோ துக்கமோ அங்கு இல்லை. இவ்வுலகில் ஆத்மீக அழகு இயற்கை அழகு மட்டுமின்றி உடலும் மிக அழகாக இருக்கிறது. இறைவனால் ஆத்ம அழகிற்கேற்ப உடலும் படைக்கப்படுகிறது. அழகிய கண்கள், பிரகாசமான முகம் கூடிய எல்லாவிதத்திலும் சரியாக உள்ள தெய்வீக மனிதர்கள் தான் அங்கு உள்ளனர். அங்கு மனிதர்கள் கூடி வாழ்கின்றனர்; ஒற்றுமையுடன் பணிபுரிகின்றனர். இப்பொழுது நாம் பார்க்கும் சிரமமான வேலைகள் அங்கு இல்லை. அவர்கள் செய்யும் வேலைகளைப் பார்க்கும்போது, அவர்கள் ஆனந்த நடனம் செய்வதுபோல் உள்ளது. பூமி மிக்க இளமையுடன், புத்துணர்ச்சியுடன் இருப்பதால், அப்பூமியை ஆழமாக உழுது பயிரிட வேண்டியதில்லை. பூமியே அவர்கள் விதைக்கும் விதைக்குக் காத்திருப்பதுபோல் அவர்கள் சாதாரணமாக விதைகளைத் தூவினால் போதும்; மிக அழகிய பயிர், பழவகைகள் சரியான காலத்தில் தோன்றுகின்றன. ஆத்மாவைச் சூழ்ந்திருக்கும் இயற்கையும் அந்த ஆத்மாவிற்குப் பணிபுரியக் காத்திருப்பதால், மிகப் பரிசுத்தமான சக்திவாய்ந்த ஆத்மா, ஒரு பரிசுத்தமான உலகைத் தான் படைக்கிறது. இது தான் உலக வட்டத்தில் தோன்றும் முதல் கட்ட மனிதர்களின் வாழ்க்கை. இதைச் சொர்க்கத்தின் நந்தவனம் என்றும் கூறலாம்.

காட்சி 2

5.9 சக்கரம் மேலும் சுழலுவதால், புதிய காட்சிகளும் தோன்றுகின்றன. இந்த நாடகத்தில் இப்பொழுது காட்சிகளும் சத்யுகத்தில் (சூர்ய வம்சம் – தங்க யுகம்) இருந்து, திரேதாயுகத்திற்கு (சந்திர வம்சம் – வெள்ளியுகம்) மாறுகின்றன. இப்பொழுது நாம் காண்பதும் சொர்க்கம் தான். இப்பொழுதும் ஒரு ராஜ்ஜியம், ஒரு நாடு, ஒரு விதிமுறை, ஒரே பாஷை தான் உண்டு. ஆனால் முன்பிருந்த பிரகாசம் சிறிது மங்கியுள்ளது. முன்பு இருந்த பரிசுத்தம் சிறிது குறைந்து விட்டது. 100 சதவீதம் பரிசுத்தம் இப்பொழுது 80% ஆகக் குறைந்து விட்டது. ஆத்மா பல பிறவிகள் எடுக்கவே, சத்யுகம், திரேதாயுகத்தில் ஒளியும், உணர்வும் இருப்பதாலும், ஆத்மீகமும், ஆத்ம உணர்வும் இன்னும் இருப்பதாலும் இவ்விரண்டு காலத்தையும் தெய்வீகத்தின் பகற்காலம் என்று கூறலாம். ஆத்மா வெள்ளியுகத்தை அடையும்போது சிறிது சக்தி இழப்பதால், சிறிது மாசுபட்டுக் காணப்படுகிறது. இவ்வாறு ஆத்மா சிறிது சிறிதாகத் தன் சொந்த சக்தியை இழந்து, இந்த சுழலும் நாடகத்தின் மூன்றாம் காட்சியை வந்தடைகிறது.

காட்சி 3

5.10 இங்கு உணர்வில் பெரும் மாறுதல் காணப்படுகிறது. பல பிறவிகளால் சக்தி இழந்த ஆத்மா, சுற்றுப்புறங்களால் மாசுபட்ட ஆத்மா, உடல் உணர்வு மேலோங்கியுள்ள நிலையை அடைகிறது. தெய்வீகப் பீடத்தில் இருந்து மனிதன் வீழ்ச்சி அடைந்து ஆத்மா, பொருட்களின் ஆகர்ஷணத்தில் ஈடுபாடு கொள்கிறது. பொருட்களை அடக்கி ஆண்ட மனிதன், அப்பொருட் களுக்கே அடிமை ஆகிறான். ஆத்மா முதல் இரு காட்சிகளில் கொண்டிருந்த ஆத்ம சக்தியை யும், முழுமையான ஒற்றுமையையும் பல பிறவி எடுப்பதன் காரணமாக இழந்து விடுகிறது; ஆத்ம ஞானமும் மறைந்து விடுகிறது. இப்பொழுது உடல் உணர்விலேயே செயல்படத் தொடங்குகிறது. இந்த உணர்வில் ஏற்படும் விரிசல் ஆத்மாவை இரு பகுதிகளாகப் பிரிக்கிறது. ஒன்றில் தெய்வீகக் குணங்களும் ஆத்ம ஞானமும் காணப்பட்டாலும் அவை மற்ற பகுதியில் உள்ள ராட்க்ஷச குணங்களாலும், உடல் உணர்வாலும் அடக்கப்படுகின்றன. ஆகவே குழப்பம் மிகுந்து ஆத்மாவானது ஒரு பக்கம் தெய்வீகக் குணங்கள், ஆத்ம உணர்வினால் இழுக்கப் பட்டாலும், மறுபுறம் சக்திவாய்ந்த உடல் உணர்வும், துர்க்குணங்களும் தன் பக்கம் இழுத்து, ஆத்மாவை உயர்ந்த ஸ்தானத்தில் இருந்து தாழ்ந்த நிலைக்குக் கொண்டு வந்து விடுகின்றன.

இவ்வாறு, உணர்வில் ஏற்படும் மாற்றம் காரணமாக, ஆத்மாவுக்குப் பற்று ஏற்படுகிறது. தன் பரிசுத்தத் தன்மையைப் பின்பற்றும் சக்தியை இழந்து, ஆத்மா பல துர்க்குணங்களால் பீடிக்கப்படுகின்றது. பற்று அதிகமானவுடன், காமம், குரோதம், பேராசை, கர்வம், தான் என்ற மமதை ஆகிய துர்க்குணங்கள் மேலோங்கி நிற்கின்றன. முன்பு இருந்த அன்புப் பார்வை மறைந்து, ஆத்மா உடலின் மேல் அதிகப்பற்று வைப்பதால் காமக்கண் மிகுந்து காணப்படுகிறது. பொது நலம் மறைந்து சுய நலம் அதிகரிப்பதால், கோபம் மேலெழுந்து, சண்டை சச்சரவுகள் தோன்றுகின்றன. இதுவரை எல்லோருக்கும் எல்லாப் பொருட்களும் கிடைத்து வந்தன. இப்பொழுது என் பேராசை அதிகரித்து மற்றவரின் பொருட்கள் மீது ஆசைப்படுகின்றேன். எனது தேவைக்குமேல் பொருட்களை என்னிடமே வைத்துக் கொள்ள விரும்புகின்றேன். இதுவரை இருந்த அன்பினால், இருந்த பூரண ஆத்ம சுதந்திரம் அழிந்து, இப்பொழுது பற்று மிகுந்துள்ளது. இப்பொழுது என்னை மட்டும் உடல்உணர்வில் பார்ப்பது போதாமல், மற்ற உடல்களையும் விரும்புகின்றேன். என் உறவினரிடமும், நண்பர்களிடமும் அது வேண்டும், இது வேண்டும் என்று கேட்டுக் கொண்டேயிருப்பதால் எனது பற்று என்ற கயிறு அழுத்தமாகத் திரிக்கப்பட்டு வளர்ந்து கொண்டே செல்லுகிறது. என் உடல் உணர்வி னால் என் பார்வையும் மாசு படுவதால் கர்வமும் தற்பெருமையும் அதிகரிக்கின்றன. ஆத்மா சுயசக்தி இழந்து பித்தளை (துவாபர்) யுகத்தை அடையும்போது வெளிச்சக்திகளால் மேலும் மாசு அடைகின்றது. பித்தளையைப்போல்.

காட்சி 4

5.11 இது கலியுகம் அல்லது இரும்பு யுகம் என்று அழைக்கப்படுகிறது. இக்காலத்தில் ஆத்மா (இரும்பு போல்) புறச்சூழ்நிலைகளால் பாதிக்கப்பட்டு, சக்தி இழந்து, விஷமாகவே மாறிவிடுகிறது. எவ்வாறு இரும்பு காற்று, நீரினால் தரம் குறைந்து அழிந்து விடுகிறதோ, ஆத்மாவும் அவ்வாறு உடல் உணர்வில் இருப்பதால், காமம், கோபம், பேராசை, பற்று, அகங்காரம் காரணமாக மிகவும் சீர்கெட்ட நிலையை அடைகிறது. உலக நிலையும் மிகவும் தாழ்ந்து, எங்கும் சண்டை சச்சரவுகள், துக்கம், கஷ்டங்கள் மிகுந்து காணப்படுகிறது. பித்தளை யுகத்தில் மாறத் துவங்கிய

இயற்கையும் நிலைகுலைந்து மனிதனை பல சிரமங்களுக்கு உட்படுத்துகின்றன. மனிதன் இயற்கையின் பிடியில் சிக்கி உயிர் வாழ்வதே பெரிய காரியமாக இப்பொழுது உள்ளது. முன்பு சந்தோஷத்தில் திளைத்த மனிதன் சொல்ல வொண்ணாத கஷ்டங்களுக்கு உள்ளாகிறான். இது தான் வாழ்க்கையா? இந்த மாசுபட்ட வாழ்க்கையின் குறிக்கோள் என்ன என்று மனிதன் பலவாறு எண்ணத் தலைப்படுகின்றான். சுதந்திரமாக இருந்த மனிதன் இப்பொழுது பல சங்கிலிகளால் பிணைக்கப்பட்டு அடிமையாக வாழ்கிறான். சத்யுகத்தில் இருந்த அன்பு, மிகுந்த உறவுகள், கலி யுகத்தில் துன்பம் தரும் பந்தனமாக மாறியுள்ளன. தாய்-சேய், கணவன்-மனைவி, சகோதர-சகோதரி ஆகியோர்களிடையே கூட உள்ள உறவு துன்பம் தரும் பந்தனமாக இப்பொழுது மாறிவிட்டது.

காட்சி 5

5.12 இந்த கலிகாலத்தின் இறுதியில், ஞான சூரியனான இறைவன் தோன்றுகிறார். இந்த சூரியன் தோன்றியவுடன் இரவின் இருட்டு மறைந்து, பகல் மீண்டும் தோன்ற ஆரம்பிக்கிறது. இந்த உதய காலத்தில் நாம் இருப்பது பெரும்பாக்கியமேயாகும். நாம் இப்பொழுது இருப்பது கலியுகம் அல்ல. நம்மைச் சுற்றியும் கலியுகம் இருந்தாலும் நாம் இறைவனை உணர்ந்து உறவு கொள்வதால், நமக்கு மட்டும் ஒளி தெரிகிறது. இப்படிப்பட்ட ஆத்மாக்கள் மட்டும் இருள் உலகை விட்டு ஒளியுலகத்தை அடைகின்றனர். இந்த ஆத்மாக்கள் புதிய ஒளி மிகுந்த நாளை எதிர்கொண்டு வரவேற்கத் தங்களை தயார் செய்து கொண்டு மற்றவர்களையும் இந்தப் புதிய நாளுக்கு அழைத்துச் செல்ல உதவுகின்றனர். இவ்வாறு பழைய சக்கரமும், புதிய சக்கரமும் இணையும் காலத்தைச் சங்கமயுகம் என்று அழைக்கலாம்.

இந்தச் சங்கமயுகத்தை வைரயுகம் என்றும் கூறலாம். காரணம் மிகச் சிறிய காலத்தில் பல அனுபவங்களை ஆத்மா அடைந்து, சீர்கெட்ட நிலையில் இருந்து மிக உன்னதமான நிலைக்கு உயர்த்திக் கொள்வது தான். இது முடிவுக்கும் துவக்கத்திற்கும் இடையில் பாலம் அமைத்து, இருட்டில் இருந்து ஒளியுலகை அடைகிறது. இந்த யுகத்தில் தான் ஆத்மா, உலக நாடகத்தைப் புரிந்து கொள்கிறது; உலக மேடை முழுவதையும் பார்க்கிறது. அவை மட்டுமல்லாமல், அதில் தன் பங்கையும் அறிந்து கொண்டு பூரண பரிசுத்தம் அடைந்து, சத்யுகம் அடைகிறது. நாம் இப்பொழுது சத்யுகத்திற்கு மிகமிக அருகில் இருக்கிறோம்.

5.13 தியானம் - அறிவது

அமைதியான இடத்தில் இருந்து யோசியுங்கள்

தியானத்திற்கான சில எண்ணங்கள்:

ஒளியாக உள்ள என்னை நான் நன்கு உணர்கின்றேன்... நான்இவ்வுடலை விட்டுத் தனியாகப் ....பிரிகின்றேன்....இவ்வுலகைத் தாண்டிச் செல்கின்றேன்.....ஆத்மாவின் பிரயாணத்தை நான் காண முடிகிறது.

இந்நாடகத்தில்.... நான் ஒரு நடிகன். பல காட்சிகளில் நான் நடித்துள்ளேன். சத்யுகத்தில்.... .பொற்காலத்தில்.....அழகிய சூழ்நிலையிலும் நடித்துள்ளேன்....திரேதாயுகத்திலும் நடித்து, துவாபர், கலியுகம் வழியாக இப்பொழுது உள்ள நிலைக்கு வந்துள்ளேன்....எல்லா ஆத்மாக் களும் இப்பொழுது... அமைதியை... ஒளியை... சத்யத்தைத் தேடி அலைகின்றன.இந்த குழம்பிய நிலையில், என் தந்தை இறைவன் என்னைத் தடுத்தாட் கொண்டார். நான்.... என் தந்தை முன்

இருக்கிறேன்....அவர் ஒளிமயமாக.....இருக்கிறார். நான் இப்பொழுது இருப்பது கலி காலத்திற்கும்—பொற்காலத்திற்கும்— இடையில் உள்ள சங்கமயுகம்— நான் இறைவனின்—ஒளியில்—திளைக்கிறேன்.....

நான் நல்ல மாற்றத்தை என்னிடம்.....உணர்கிறேன்......என்னுடைய உண்மையான குணங்களான....சத்தியம்....அமைதி.... அன்பை..... என்னிடத்தில் காண்கிறேன். நான் பரிசுத்தம்.....அடைகிறேன்.... நான் அன்பு சொரூபமாக.... இருந்தேன்..... நான் என்னை மறந்து.....வெறுப்பு சொரூபமாகக் கலியுகத்தில் மாறியிருந்தேன். இப்பொழுது நான் என்னை உணர்வதால்.....அந்த அன்பு சொரூபமாக மீண்டும்.... மாற்றப்படுகின்றேன். நான் தெய்வீகக் குணங்களை மீண்டும் அடைந்து....என் உண்மையான நிலையான .....அமைதியை...... அனுபவிக்கிறேன். நான் உலகில் உள்ள எல்லா மக்களையும் மீண்டும் .....நேசிக்கிறேன்.... அந்த அன்பை.... உலகம் முழுவதும் பரப்புகிறேன்..... இந்த உள்ளுணர்வில் ....புதிய யுகத்தை அடைய— தயார் ஆகின்றேன்.

தினசரி நம்முன்னேற்றத்திற்கு உதவும் சில நடைமுறைகள்:

ஒற்றுமை, சகோதரத்துவம், பொறுமை:

5.14 இந்த நாடகத்தில் ஒவ்வொரு ஆத்மாவும் ஒரு தனித்தன்மை வாய்ந்தது, தனித்தன்மையுடன் கூடிய ஒரு பங்கை அது நிறைவேற்றுகின்றது. மற்றவர்கள் ஒரு தவறு செய்யும்போது, தர்க்கம்புரியும்போது, நான் அமைதி இழந்து கோபம் அடைகிறேன். இதனால் நானும், மற்றவர்களும் தங்கள் சுய குணமான சந்தோஷத்தை இழக்கிறோம். இப்பொழுது நான் அந்த அமைதியற்ற தன்மையை விட்டு, உலகம் முழுவதும்அமைதி, திருப்தி, அன்பைப் பரப்புகின்றேன். இது மற்றவர்களை அடைந்து, அவர்களும் அமைதி அடையும்படிச் செய்து, ஒற்றுமையை நிலை நாட்டுகிறது.

படிப்பு:

5.15 இந்த நாடகம் ஆத்ம ஞானத்தை உணரும் சக்கரம் என்றும் கூறலாம். அதாவது ஆத்மா தன் சரித்திரத்தைப் பார்த்து தான் இதுவரை கடந்து வந்த பாதையைச் சற்று நோக்குகிறது. நீங்கள் கடந்து வந்த பாதையையும் நீங்களே இப்பொழுது பார்க்கலாம்.

கேள்விகள்:

1. ஏன் இந்த உலகச் சக்கரம் நாடகம் என்று அழைக்கப்படுகிறது?
2. இந்நாடகத்தின் முதல், இரு காட்சியில் காணப்படும்,வாழ்க்கை முறையைப்பற்றி விவரிக்கவும்?
3. மூன்றாம் நான்காம் காட்சியில் உணர்வு மாற்றத்திற்கான காரணங்கள் யாவை?
4. இறுதிக் காட்சியான சங்கமயுகத்தில் நடப்பதென்ன?

பாடம்:6

படைத்தலின் ரகசியங்கள்

6.1 படைத்தல்

உலகெங்கிலும் உள்ள எல்லா ஜீவாத்மாக்களுக்கும் பொதுவாக பல கேள்விகள் உண்டு; அவற்றில் படைத்தல் என்பது பற்றி அடிக்கடி கேள்வி எழுகிறது. காலத்தின் ஒரு கட்டத்தில் எந்த ஒரு ஜீவ ஆத்மாவும் இல்லாத வெறுமை அல்லது சூன்யம் இருந்திருக்க முடியுமா? அந்த ஒன்று எப்பொழுது திடீரென்று தோன்றியது? தான் ஒரு சாசுவதமான ஆத்மா என்ற அறிவும், அதேபோல் கடவுளும் ஒரு மிகச் சிறந்த, சாசுவதமான, என்றும் அழியாத ஒன்று என்ற அறிவும் இருக்கும்பொழுது, படைத்தல் ஏதோ ஒரு குறித்த நேரத்தில் துவங்குகிறது என்று குறிப்பிட்டுக் கூறுவதை மிகச் சிரமத்துடன் தான் ஏற்றுக் கொள்ள முடியும். படைப் பவர் என்றும் சாசுவதம், அவரது படைப்பான ஆத்மாவும் சாசுவதம், இருப்பினும் படைத்தல் என்ற சொல்லுக்கு ஒரு முக்கியத்துவம் உண்டு.

என்றும் அழியாத காலச்சக்கரத்தில் ஆத்மாவின் பங்கு என்ன என்பதைப் பரிசோதித்து, படைப்பின் ரகசியத்தின் முக்கியத்துவத்தைக் காண்போம். ஆத்மாவானது சத்யுகம், திரேதாயுகம், துவாபர்யுகம், கலியுகம் வழியாகச் சங்கமயுகம் அடைந்து, சங்கமயுகத்தில் இருந்து மீண்டும் சத்யுகம் அடைகிறது. ஜீவாத்மாவின் செயல்கள் இந்தக் காலச்சக்கரம் முழுவதும் நடை பெறும் செயல்களுக்குக் காரணமான கர்மாவை நிர்ணயிக்கிறது. ஆத்மாவானது சத்யுகத் திற்குச் சற்று முன்பு சங்கமயுகத்தில் செய்த நற்செயல்களின் பலன்களை சத்யுகம், திரேதா யுகத்தில் நடுநிலையாக இருந்து அனுபவிக்கிறது. அதனால் சத்யுகம், திரேதாயுகத்தின் செயல் களுக்கு எந்த விதப் பிரதிபலன்களும் கிடையாது. துவாபர்யுகம் வரும்பொழுது ஆத்மாவின் தன் முன் பிறப்பில் (சத்யுகத்திற்கு முன்) நற்செயல்களின் பலம் முழுவதும் தீர்ந்து விடுகின்றது. அந்த நேரத்தில் ஆத்மாவிற்குத் தன் உடல் உணர்வே தெரிகிறது. நற்செயல்களையும் மறந்து விடுகின்றது. அது முதல் தீச்செயல்கள் தொடங்குகின்றன. அதன் விளைவாகத் துக்கமும், துன்பமும் துவங்குகின்றன. இந்த பாவ காரியங்கள், துவாபாரயுகத்தில் தொடங்கி, கலியுகத்தில் உச்சக்கட்டத்தை அடைகின்றது. கலியுகத்தில் பாவத்தைத் தவிர வேறு ஒன்றும் இல்லை. புகழுக்காகவோ, அல்லது வேறு ஏதேனும் சுய நல காரணத்தைக் கருதியோ தானமும் செய்யப்படுகின்றது. அகம்பாவம், பற்று, பேராசை ஆகிய துர்க்குணங்களினால் தாய் சேய் போன்ற புனிதமான பந்தங்களும் மாசுபடுகின்றன. இவ்வாறு ஆத்மா தன்னுடைய கெட்ட நடத்தையினால் அமைதியிழந்து, அவதியுறுகின்றது. இந்த நேரத்தில் தான் இறைவனின் ஆக்க சக்தி துவங்குகிறது.

ஆத்மா இந்த சமயத்தில் தளர்ந்து, மாசுபட்டு இருப்பதால் படைப்பு என்று கூறுவதைவிட, ஆத்மாவின் மறுபடைப்பு என்று கூறுவதே பொருந்தும். ஒரு காலத்தில் மேன்மையாக இருந்த தேவதைகள் தாழ்ந்த நிலையை அடைந்து விட்டனர். இப்பொழுது இறைவன் குறுக்கிட்டு தாழ்ந்த நிலையில் உள்ள ஜீவாத்மாக்களை உயர்ந்த தேவதைகளாக மாற்றுகின்றார். ஆத்மாவானது என்றும் அழிக்க முடியாத சாசுவதமானது, ஆகவே இது ஒரு மறு படைப்பு என்பதை நன்கு உணரலாம். எந்த ஒரு நேரத்தில் உலகம் உண்டாக்கப் பட்டது? எந்த நேரத்தில் ஆத்மா உருவாக்கப்பட்டது? என்று கூற இயலாது. ஆனால் இவ்வாறு உருவாக்கத் தேவையான மூலப் பொருட்கள் இருக்கின்றன. அவற்றை எடுத்து, சீராக சீரமைத்து மறு உருவம் கொடுத்து, புதிய

அழகான தேவாத்மாக்களின் சத்யுகம், உருவாக்கப்படுகின்றது. மிக மேலான இறைவன் கலி யுகத்தின் சாம்பலையும், புழுதியையும் தூய்மையாக்கி சத்யுகத்தின் அழகான அரண்மனைகளை உருவாக்குகிறார். மாசுபட்ட, இழிந்த நிலையிலுள்ள கலியுக ஆத்மாக்களை இறைவன் மிகுந்த உன்னதமான, பரிசுத்தமான ஆத்மாக்களாக மாற்றுகிறார். கட்டிடக்கலை நிபுணர் வெறும் செங்கற்களை உருவாக்குவதில் காலத்தை வீணாகச் செலவிடாமல், இருக்கும் செங்கற்களைக் கொண்டு அழகிய அரண்மனைகளை உருவாக்குகிறார். ஒரு பொற்கொல்லர் தங்கத்தை உருவாக்குவதில்லை. தங்கத்தை உருமாற்றி அழகிய கலைப்பொருளாக மாற்றுகிறார். அவர் படைப்பவர் ஆகிறார். அவ்வாறே இழி நிலையில் உள்ள ஆத்மாக்கள் பரிசுத்தமும், தெய்வீகத் தன்மையும் உள்ள ஆத்மாக்களாக இறைவன் அருளால் மாற்றப்படுகின்றன. இவ்வாறு தான் படைப்பு துவங்குகிறது.

உண்மையான படைத்தல் என்பது, நாம் இதுவரை கற்பனை செய்து வந்ததற்கு முற்றிலும் மாறுபட்டது என்பதை இப்பொழுது நன்கு அறிகின்றோம். படைக்கும் கடவுள் இறைவன் என்று கூறப்படும் பொழுது, இறைவன் இயற்கையைப் படைத்தார், ஆன்மாவைப் படைத்தார், இப்பொழுது நாம் இருக்கிற உலகத்தைப் படைத்தார் என்று பலர் எண்ணுகிறார்கள். இறைவன் எவ்வாறு பல துன்பங்கள் நிறைந்த இவ்வுலகைப் படைக்க முடியும்? எனவே தான் இறைவன் இருக்கிறாரா? இல்லையா? என்ற கேள்வி எழ வாய்ப்பு ஏற்பட்டு விட்டது. பேரன்பும், இரக்கமும் கொண்ட இறைவன் எவ்வாறு இத்தீய உலகைப் படைத்திருக்க முடியும்? இப்பொழுது உள்ள இந்த இழி நிலைக்கு எல்லாம் வல்ல இறைவனைப் பழிப்பது சரியாகாது என்று நாம் இந்த ஞானத்தின் மூலம் அறிகின்றோம். ஆத்மாவின் முன்வினைகளே இப்பொழுது உள்ள நிலைக்குக் காரணம், நாமே இதை உண்டாக்கியிருக்கிறோம். இயற்கை, ஜீவாத்மா இரண்டும், தன்னிச்சையாக, தன் சுய சக்தியால் செயல்படுகின்றன. பரமாத்மாவும் நமக்கு புலனாகாத விதம், மிகச் சிறப்பாகச் செயலாற்றுகிறார்.

இறைவனின் ஆணைப்படி, இயற்கை செயல்படுகிறது என்று இதுவரை நாம் எண்ணி யிருந்தோம். நாம் விதை விதைக்க, படைக்கும் கடவுள் அதை மலராகவும், பழமாகவும் செய்கிறார். அதைக் கட்டிக் காக்கிறார் என்று பலர் நினைக்கின்றனர். கனிந்த பழங்களைக் கொடுத்த மரம், முதிர்ந்து, பட்டுப்போகும்பொழுது இறைவன் அழிக்கும் கடவுளாகச் செயல் படுகிறார் என்று எண்ணப்படுகிறது. இறைவனின் உன்னதமான படைக்கும், காக்கும், அழிக்கும் சக்திகள் இவ்வளவு சாதாரண நிலையில் கருதப்பட்டன. ஆனால் இயற்கையின் சக்தி தன்னிச்சையான நிலையில் செயல்படுகின்றது. மனிதன் இயற்கையின் செய்கைகளில் குறுக்கிட வேண்டிய அவசியமில்லை. படைப்பது, காப்பது, அழிப்பது, அழிக்கும் முன்பு புதியவற்றைப் படைப்பது என்பவை தன்னிச்சையாக இயற்கையில் நடைபெறுகிறது. மனிதனின் குறுக்கீடு இல்லாவிட்டால் இயற்கை மேலும் சிறப்பாகச் செயல்படுகிறது. இயற்கைக்குப் பரமாத்மாவின் ஒத்துழைப்பு அவசியம் இல்லாத ஒன்று.

எல்லா ஜீவாத்மாக்களும், சுய சக்தியினால் ஒரு நிலையில் செயல்படுகின்றன. ஆத்மாவைப் படைக்க முடியாது என்பது தெரியும். உடலைப் படைக்க முடியும். அது பிறப்பது படைக்கும் கடவுளால், அது வளர்வது காக்கும் கடவுளால், அது இறக்கும்போது, அந்நிகழ்ச்சி அழிக்கும் கடவுளின் செயலால் நிகழ்கிறது என்று சிலர் எண்ணுகிறார்கள். இது பல கேள்விகளை எழுப்புகின்றது. இறைவன் இவ்வாறு படைப்பதாக இருந்தால் எல்லாக் குழந்தைகளும் சந்தோஷமும் அன்பும் உள்ள சூழ்நிலையில் அல்லவா பிறக்க வேண்டும். ஆனால் அவ்வாறு

நடைபெறுவதில்லையே. ஆத்மாவின் முன் வினைகளினால் ஒவ்வொரு ஆத்மாவும், முற்றிலும் வேறுபட்ட சூழ்நிலைகளில் பிறக்கின்றன. காக்கும் தொழில் கடவுளின் கடமையானால், ஏன் உலகில் 70 சதவிகிதத்திற்கு மேலான மக்கள் உண்ண உணவு, உடுக்க உடை போன்ற அத்தியா வசியப் பொருட்கள் கூட இல்லாமல் வருந்துகின்றனர்? வளர்ப்பது கடவுளின் செயலானால் இந்த நிலை, இருக்கக் கூடாத ஒரு நிலையாகும். கடவுளின் அழிக்கும் செயலையும் நாம் கூர்ந்து பார்க்க வேண்டியுள்ளது. இன்று இறப்பு, இறக்கும் மனிதனுக்கு மட்டுமின்றி சுற்றி உள்ளோருக்கும் மிகுந்த வேதனையையும், துக்கத்தையும் கொடுக்கின்றது. துன்பத்தைப் போக்குபவர் கடவுள். ஆகவே அக்கடவுள் இத்துன்பத்திற்குரிய இறப்புக்குக் காரணமாக இருக்க முடியாது. ஆத்மாவின் முன்வினைகளே இந்த இறப்புக்குக் காரணமாகின்றன.

6.2 கடவுள் படைப்பவர், காப்பவர், அழிப்பவர் என்பதின் உட்பொருள் என்ன?

படைப்பு என்பது மறு படைப்பே என்பதைப் படைக்கும் கடவுளே தெளிவாக்குகிறார். ஆத்மாவின் அழுக்கை நீக்கி, பரிசுத்தப்படுத்துதல் அல்லது புதுப்பித்தல் என்பது.

மீண்டும் காலச்சக்கரத்தைப் பார்ப்போம். கலியுகம் முடிந்து, சத்யுகம் தோன்றும் சங்கம நேரமாகும் இது. இப்பொழுது கடவுள் இரண்டு விதமாகச் செயல்படுகிறார். ஆக்கல், அழித்தல் இரண்டும் ஒரே நேரத்தில் நடைபெறுகின்றன.

கடவுள் புதிய யுகத்தைப் படைக்கிறார் எப்படி? கலியுகத்தின் சிறிய குடிசைகளில் இருந்து, வானளாவிய கட்டிடம் வரை எல்லாப் பொருட்களையும் அழித்து விட்டு நம்மை அழகிய பூக்கள் நிறைந்த பூங்காவிற்கு அழைத்துச் செல்கிறார்? இதுவா புதிய உலகின் படைப்பு? அவ்வாறு செய்தால் இன்றைய மனித இனம் அந்தப் புதிய உலகத்தையும் கூறுபோட்டு அழித்து, இன்றைய நிலைக்குக் கொண்டு வந்துவிடும். ஒரு அழகிய நந்தவனத்தில், பொறுப்பற்ற சிறுவர்களை விளையாடவிட்டால் சிறிது நேரத்தில் அந்த நந்தவனம் முழுவதும் சிதைந்து விடும். ஆகவே இதே நிலையில் புதிய யுகத்தை உண்டாக்க முடியாது. கடவுள் மனித ஆத்மாக்களின் தன்மைகளை மாற்றினால் தான் முடியும்.

ஆத்மாவில் முதலில் மறுபடைப்பு நடைபெறுகிறது. ஆத்மா ஒரு புதிய அனுபவத்தை அடைந்து உணர்கிறது. ஆத்மாவிற்குப் புதிய அறிவு தருவதன் மூலம் புதிய ஆத்மாவாக உருவாக்கப்படுகிறது. ஒரு சமுதாயத்தில் மக்களுக்கு நல்ல கல்வி போதனை மூலம் தான் நல்ல மாற்றங்களை ஏற்படுத்த முடியும். அவ்விதமே, ஆன்மீகக் கல்வி மூலம் தான் ஆன்மீக மாற்றங்கள் ஏற்படுத்த முடியும். இந்த ஆன்மீக போதனை இறைவனிடமே உள்ளது. இறைவன் இந்த ஆன்மீக ஞானத்தைக் கற்பித்தருளும் போது, மனித புத்தி தெய்வீகமாகிறது. இவ்வாறு பௌதீகப் பொருட்களைத் தாண்டி காணமுடியும் புத்தி இறைவனால் அருளப்படுகிறது.

ஆத்மா ஜடப்பொருட்களைத் தாண்டிச் சென்று, புதிய விழிப்புணர்ச்சியினால், பழைய தீய பழக்கங்களை விட்டுவிட்டு, புதிய தெய்வீக, மாசில்லாத தன்மைகள், பழக்க வழக்கங்களைப் பெறுகின்றது. இவ்வாறு படைக்கும் கடவுள், குருவாகவும், ஆசிரியராகவும் ஆகிறார். இந்த ஆசிரியர் தான் புதிய உலகைப் படைக்கிறார். அவர் ஞானத்தை அளிக்க, ஆத்மாவானது அதை உணர்ந்தறிய, புத்தி தெய்வீகமாகிறது. இந்தத் தெய்வீக அறிவின் மூலம் ஆத்மா தன் பழைய கெட்ட மனப்பாங்குகளை வெல்வதன் மூலம், கலியுகத்தில் வாழ்ந் தாலும், வைரம்போல் ஜொலிக்கிறது. ஆத்மா இதுவரை சுமந்து வந்த முன்வினைக் கர்மத்தின் கணக்குகளை, கடனை சரி செய்கிறது. சத்யுகத்திற்குப் புதிய குணங்களுடன் செல்ல ஆத்மா தயார் ஆகிறது.

ஆத்மாவை தயார் செய்வது மட்டும் போதாது, தீமை மிகுந்த அசுத்த உலகம் ஆத்மாவைச் சூழ்ந்துள்ளது. ஆகவே இதையும் தூய்மைப்படுத்த வேண்டும். இவ்வாறு மனித குலத்தையோ, பௌதீகப் பொருட்களையோ, கடவுள் அழிக்காமல், தீய குணங்களை மட்டும் அழிக்கிறார். இந்த ஞானத்தின் வலிமையால் சுலபமாக, இயற்கையாகப் படைப்பு ஏற்படுகிறது. இந்த படைப்பு பூர்த்தியாகும் போது ஆத்மா மீண்டும் நன்னெறியில் வந்தடைகிறது. அதாவது மாசில்லாத தன்மையின் சக்தியினால் தீமைகள் அழிக்கப்படுகின்றன. இவ்வாறு தீமைகளை அகற்றுவது ஆன்மாவில் மட்டுமல்ல, புறத்திலும் பிரதிபலிக்கிறது. இது நாள் வரை இயற்கையின் சீற்றம் அதிகமாகிக் கொண்டே வந்து, பெரு வெள்ளம், தீ, எரிமலைக் குமுறல்கள், நில நடுக்கம் போன்றவற்றால் பெரிய பொருட்தேசம் ஏற்படுகிறது. ஆத்மாவின் வன்முறைச் செயல்களும் உச்சகட்டத்திற்கு வந்ததால் சகோதரர்களுக்கிடையே கருத்து வேறுபாடுகள், மனக்கசப்புக்கள் ஏற்படுகின்றன. இந்த இரண்டாவது காரணத்தால், எல்லா நாடுகளிலும், உள்நாட்டுக் கலகங்கள், அடக்குமுறைகள் ஏற்பட்டு, மிகப் பெரிய பொருட்தேசம், மக்கள் சேதம் ஏற்படுகிறது. இன்று இதற்கான அறிகுறிகள் தெளிவாகத் தெரிகின்றன. மனிதனால் அணு ஆயுதங்கள் குவித்து வைக்கப்படுவது அழிவிற்கேயன்றி, காட்சி பொருளாக வைக்க அல்ல; இந்த அணு ஆயுதப் போரினால் அழிவு ஏற்படுவதன் மூலம் பரிசுத்தம் ஏற்படுகின்றது. எல்லா ஆத்மாக்களும் முக்தி அடைந்து, நிரந்தர சொந்த இருப்பிடமான பரந்தாமம் அடைகின்றன. எனினும் இவ்வுலகில் கலியுகம் நீடித்தால் கற்பனை செய்யவொண்ணாத் துன்பங்கள் ஏற்படும். தீமைகள் அழிவதன் மூலமும், இவ்வுலகை சதோபிரதானமாக மாற்றுவதன் மூலமும் பற்றிலிருந்து இதுவரை ஆத்மா தேடி அலைகின்ற விடுதலை கிடைக்கும். இவ்வாறான உலக அழிவு கடவுளின் நேரிடை செயல் அல்ல. இந்தச் சூழ்நிலையை நன்கு நோக்கினால் இது ஒரு கருணைச் செயலே என்பது புரியும். புதுப்பித்தலே கடவுளின் செயல். மனிதனின் தேக அபிமானத்தால் அழிவு தானாகவே ஏற்படுகிறது.

6.3 அறிவிப்பு

மனிதனின் புத்தியை தெய்வீகமாக்குவதே படைப்பின் வழி. பரமாத்மா இருப்பதோ விண்ணுலகம். துன்பத்தின் பிடியில் சிக்கித் தவிக்கும் ஜீவாத்மாக்கள் இருப்பதோ மண்ணுலகம். இந்நிலையில் பரமாத்மா ஜீவாத்மாக்களுக்கு எவ்வழியில் ஞானத்தை அளிக்க முடியும்? ஜீவாத்மா தன் புலன்களின் சக்திக்கு அப்பாற்பட்டுள்ள இறைவனைச் சந்தித்து, இந்த ஞானத்தை அவரிடம் இருந்து பெறுவது இயலாது. இறைவன் தான் ஜீவாத்மாக்களைத் தேடி வரவேண்டும். அகக்கண்ணால் இறைவனை அறியலாம் என்று சிலர் நினைக்கலாம். மனித புத்தி பேதலித்து, சீர்குலைந்திருப்பதால், வார்த்தையின் அர்த்தங்களும், அனர்த்தம் ஆகலாம். இருவர் பேசும்பொழுது முக்கியமான விஷயமே மறந்து போகலாம். புத்தியானது மற்ற மனிதர்களுடனேயே சரியாக அளவிட முடியாத போது, இறைவனின் ஞானத்தைச் சரியாகப் புரிந்து கொள்ளும் நிலையில் புத்தி இல்லை என்பது நன்கு புலப்படும். இப்பொழுதுதான் மிக வினோதமான ஒன்று நடைபெறுகிறது. எல்லாம் வல்ல இறைவன், மனிதர்களின் முன்வினைக் கணக்குகளை அறிந்து அவர்களின் துன்பங்களுக்காக மிகுந்த கருணை கொண்டு, ஒவ்வொரு காலச்சக்கரத்தில் ஒரு முறை, விண்ணுலகை விட்டு வந்து மண்ணுலகில், ஒரு மனித உருவை ஆட்கொண்டு, இந்த ஞானத்தைப் போதிக்கிறார். இறைவனின் ஞானத்தை ஆத்மா வேறு எந்த வழியிலும் அறிய இயலாது. புறத் தோற்றத்திற்கு, ஒரு மனிதன் பேசுவது போல இருப்பினும், அவரது வாய்மொழிகளின் உட்கருத்தை நோக்கினால், இது மனிதனுடையதல்ல, இந்த

உண்மைகளைப் போதிப்பது இறைவனாகத்தான் இருக்க முடியும் என்பது புலப்படும். ஓவியத்தைக் கொண்டு அதைப் படைத்த ஓவியனை அறியலாம். அதுபோல இந்த போதனைகளைக் கேட்கும் பொழுது, இதைப் போதிக்கும் குரு யார் என்பதையும் தெளிவாக அறிய முடியும்.

இறைவன் எழுந்தருளியிருக்கும் இந்தச் சங்கமயுகத்தில் நாமும் பங்கு பெறுவது நம்முடைய அதிர்ஷ்டமே. நாம் இப்பொழுது பகிர்ந்து கொள்ளும் ஞானத்தைப் போதித்தவர் இறைவன் தான். இதற்குக் கருவியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டவருக்குக் கொடுக்கப்பட்ட பெயர் "பிரஜா பிதா (பிரஜைகளின் தந்தை) பிரம்மா என்பதாகும். இந்த ஆத்மாவும் நம்மைப் போலக் கலி யுகத்தில் உள்ள ஒன்று தான். இந்த ஆத்மா மனக் கண்ணினால் சில அரிய காட்சிகளைக் கண்டது. இறைவன் ஒளியாக மிளிர்வது. தெய்வங்களின் திவ்ய தோற்றம், சத்யுகம் ஆரம்பம் இவ்வுலகின் அழிவு போன்றவை; இவற்றைப் பார்த்தவுடன் இவர் தன்னை இறைவனிடம் முழுமையாய் அர்ப்பணித்துக் கொண்டார். அவரது திருவாய் மூலம் தான் நாம் இப்பொழுது உணர்கின்ற ஞானம் வெளியாயிற்று. இந்த ஞானத்தைக் கேட்டவர்கள், மறுபிறவி எடுத்தது போன்று உணர்கின்றனர். கலியுகத்தில் இறந்து, சங்கம காலத்தில் பிறக்கின்றனர். சத்யுகத்திற்குச் செல்லத் தயாராகின்றனர். கடவுள் இவ்வாறு பரிசுத்தமான ஆத்மாக்களைப் படைக்கின்றார். இந்த ஞானத்தைக் கொடுத்து, இறைவன் பரிசுத்தத்தின் சக்தியை ஆத்மாவில் நிரப்புகிறார். அதே பரிசுத்தத்தின் சக்தியால் தீமைகள் அழிந்து புதிய உலகம் தோன்றுகிறது. இவை தான் படைத்தல், காத்தல், அழித்தல் ஆகியவற்றின் இரகசியம்.

6.4 தியானத்திற்கு சில எண்ணங்கள்

ஓம் சாந்தி. இந்த எல்லையில்லாத உலகில் நான் ஒரு நடிகன் என்பதை உணர்கின்றேன்.... இந்த உலகில் நான் என் பங்கை நடித்துக் கொண்டிருக்கிறேன்..... இப்பொழுது நான் இருக்கும் இந்த உடல் என்ற உடையில் இருந்து விடுபடுவதை நான் உணர்கிறேன். நான் பிந்துவாக.... ஒரு சிறிய புள்ளியாக....என் நெற்றியின்.... மத்தியில்.... இருப்பதை ..... அனுபவிக்கிறேன்..... இந்த உடல் என்ற ஆடையானது முன் நான் உடுத்து, விடுத்த பல ஆடைகளில் ஒன்று என்பதை.... அறிகின்றேன், வருங்காலத்தில்...இன்னும் பல அழகான ஆடைகள் எனக்காகக்....காத்திருக்கின்றன என்பதை அறிந்துள்ளேன். இந்த மனோபாவத்தினால் சுலபமாக என்னுடைய எண்ணங்களை உடல் என்ற ஆடையில் இருந்து அகற்ற முடிகிறது. அவ்வாறு செய்யும்பொழுது....இந்த உலகம் என்கிற மேடையைக் காணச் செல்கிறேன்.... கடந்த காலத்தில் நடந்தவை இனி இல்லை. நான் பற்றில் இருந்து கவலைகளில் இருந்து விடுபடு கின்றேன்... எல்லாம்வல்ல...எல்லையில்லாத...இந்த நாடக உலகத்தைப் படைத்த.....இறைவனின் சந்நிதியை அடைகிறேன் தலைசிறந்த சிவனே மிகச் சிறிய பிந்துவடிவில்....பிரகாசமான ஜோதியாய் உள்ள சிவனே.... என்றும் சாசுவதமான ஒருவர் ஆவார்.... நான் மாறிக் கொண்டேயிருக்கிறேன். நாடகக் காட்சிகளும் சதா மாறிக் கொண்டேயிருக்கின்றன. ஆனால் சிவன் ஒருவரே பரிசுத்தமான... அமைதியான.... அன்புள்ள.... சாந்தமான..... அழிக்க முடியாத.... சக்தியாக விளங்குகிறார். சிவனின் அறிவுரைகள் என் ஆத்மாவைத் தன் அருகே இழுக்கின்றன. படைக்கும் இறைவன்....என் தந்தை....அவரது பரிசுத்தத்தாலும்....அன்பாலும்....என்னைப்.....பரிசுத்தம் செய்கிறார்..... எனக்கு சக்தி அளிக்கிறார். அவரைப்பற்றியும், முதலில் இருந்து இறுதிவரையான படைத்தலைப் பற்றியும் உள்ள ஞானத்தை எனக்கு அளிக்கிறார். நான் ஞானக் கடலானவரை...எல்லாம் வல்ல இறைவனின் திருக்கரங்களைப் பிடித்திருக்கிறேன். அதனால் நான்....இனி....தடுமாற மாட்டேன்....இருட்டிலும்....விழமாட்டேன்.

பரமாத்மாவிடமிருந்து நான் பரிசுத்தம்...அமைதி...சக்தி அடைகின்றேன்.....அவை என்னிடம் ....எப்பொழுதும் இருக்கும் அளவிற்கு.... அடைகிறேன்.

முதன் முதலில் நான் இப்படித்தான் இருந்தேன். இப்படித்தான் பரமாத்மா என்னை மறுபடியும், மறுபடியும் படைக்கிறார். இந்த நாடகத்தில் உள்ள.... என் பழைய பங்குகள்..... இந்த நாடகத்தில் முழுவதும் மறைந்தன. பரமாத்மாவின் சிறந்த தன்மைகள்.... என் ஆத்மாவை.... என்னுடைய சரியான நிலைக்கு–மிகவும் உயர்ந்த நிலைக்கு– உயர்த்துகின்றன. மீண்டும் இந்த உலக நாடகத்தில்– என் முதலாவதான....சிறந்த என் பங்கைச் செய்ய....பரமாத்மா என்னைத் தயார் செய்கிறார். என் ஆத்மா தெய்வீகமாகிறது. இந்தப் பௌதீக உலகத்திற்குத் திரும்பும் போது என் ஒவ்வொரு அடியும் சக்தி, அன்பு, உண்மையான ஆன்மீக கட்டளைகளால் நிறைந்துள்ளது.

6.5 தினசரி நம் முன்னேற்றத்திற்கு உதவும் சில நடைமுறைகள்:

மகிழ்ச்சியில் தெய்வீகத் தன்மை:

கடந்த காலம் கடந்ததாக இருக்கட்டும், இனி வரும் காலத்தைத் தாங்கள் தான் படைக்கிறீர்கள். ஆகவே இனி வருங்காலம், புதிய புத்துணர்ச்சி உடையதாக இருக்கட்டும். ஒரு வினாடி அல்லது பல வருடங்களுக்கு முன் நடந்தவை எதுவாக இருப்பினும், அவை இடுகாட்டில் புதைத்த மாதிரி இருக்கட்டும். திரும்ப இடுகாட்டிற்குச் செல்வது விரும்பத் தக்கதல்ல. வருங்காலம் இன்னும் படைக்கப்படவில்லை. இந்நேரம் என் மனம், வாக்கு, செயல்கள் என் வருங்காலத்தை உண்டாக்குகின்றன. ஆகவே, இச்சமயம், நாம் இப்பொழுது தான் பிறந்த சிறு குழந்தைகளாக இருக்க வேண்டும். நடந்து முடிந்தது மறந்து விட்டது. இப்பொழுது நான் ஒளியுடனும், சக்தியுடனும் நிறைந்திருக்கிறேன். இதை நான் நாள் முழுவதும் நினைவு கொண்டிருந்தால் என்னைச் சுற்றி எல்லாவிதத்திலும் மகிழ்ச்சி நிறைந்திருக்கும்.

6.6 படிப்பு

காலச்சக்கரம் முதிர்ந்து தளரும்போது, படைப்பின் இரகசியத்தை வெளியிட எல்லாம் வல்ல இறைவன் எல்லா ஆத்மாக்களையும் புதிய பசுமையான ஆத்மாக்களாக மாற்ற வருகின்றார்.

கேள்விகள்:

1) இறைவன் படைப்பவராவார் என்பதின் கருத்தை விவரி?

2) இறைவன் அழிப்பவர் ஆவார் என்பதின் கருத்தை விவரி?

3) இயற்கையும், மனிதனும், இந்தப் பௌதீக உலகில் நடைபெறும் செயல்களில் தனித்தனியாக எவ்விதம் பங்கெடுக்கின்றன என்பதை விவரி?

தியானத்திலும், இதுவரை படித்ததிலும் தங்களுடைய அனுபவங்களைப் பற்றிச் சொல்ல விரும்புகிறீர்களா?

தாங்கள் தாவர உணவு உண்பவரா? தாவர உணவு பற்றி ஏதாவது தாங்கள் கேட்க விரும்புகிறீர்களா?

பாடம்: 7

சாசுவதமான உலக விருட்சம்

7.1 முன்னுரை

ஓம் சாந்தி. ஓம் என்றால் "நான் ஒரு ஆத்மா" என்று பொருள், சாந்தி என்றால் அமைதி என்பதை விட "அளவில்லாத அமைதி" என்பதே பொருந்தும். ஒரு விதை எவ்விதம் ஒரு மரத்தின் சாராம்சத்தைக் கொண்டுள்ளதோ அது போல ஆத்மாவானது அமைதியின் சாரத்தைக் கொண்டுள்ளது. நான் முதல் முதலாக இருந்த விதை உருவிற்குத் திரும்பி வருகின்றேன், "நான் ஒரு விதை" என்ற எண்ணம் மனதில் இருந்தால், மனிதனின் படைப்பு மற்றும் மனித உலக கற்பக விருட்சம் ஆகியவற்றின் முக்கியத்துவம் புரியும். என் வருங்காலம் என்கிற விருட்க்ஷத்தினை, விதை ஆகிய நான் நிர்ணயிக்கிறேன். மிக உயர்ந்த இறைவன் இதைவிடப் பெரிய, சாசுவதமான, பிரம்மாண்ட, எல்லையில்லாத விருட்க்ஷத்தின் விதை என்பதை அறிகின்றேன். இந்த விருட்க்ஷத்தின் விதையை அறிவதின் மூலம் இதனுடைய ரகசியங்களையும் அறிய முடியும். அந்த விதையைக் கையில் வைத்திருப்பது அந்த விருட்சத்தின் ரகசியத்தைக் கையில் வைத்திருப்பது போலாகும்.

இந்த உலக விருட்சம் கற்பக விருட்சம் என்று குறிப்பிடப்படுகிறது. கற்பக விருட்சத்தின் அடியில் அமர்ந்தால் உங்கள் எல்லா விருப்பங்களும் பூர்த்தியாகும் என்று சொல்லப்படுகிறது. இறைவன் என்ற விதை அசரீரியாக மேல் உலகான ஆத்ம உலகில் இருப்பதால், இதைத் தலைகீழான விருட்சம் என்று கூறுவது பொருத்தமாகும். முதலில் இந்த விருட்சம் நம்முடைய தேவைகளை எவ்வாறு பூர்த்தி செய்கிறது என்பதைப் பார்ப்போம். சாதாரணமாக மரங்களில் முதலில் வேர்கள் தோன்றி, அதில் இருந்து அடிமரம் வெளிப்படுகிறது. பின்னர் கிளைகள் வளர்கின்றன. இறுதியில் இந்த விருட்சம் இனிமேலும் வளரமுடியாத அளவு பெரிதாகிறது. இந்த நேரத்தில் இது பட்டுப்போக ஆரம்பிக்கிறது. இம்மாதிரியே கற்பக விருட்சத்திற்கும், பிறப்பு, வளர்ப்பு, முதிர்ச்சி ஏற்படுகிறது. முதிர்ச்சி அடைந்து அழிவு வரும் போது அதுவே முடிவானதில்லை. அம்மரம் இறப்பதற்கு சற்று முன்பு ஒரு சில விதைகள் இங்கேயே தங்கிவிடுவதன் மூலம் அந்த சந்ததி தொடர்ந்து ஒரு புதிய விருட்சத்தை உண்டாக்குகிறது. இவ்வாறு மனித உலக விருட்சம், சாசுவதமாக, எப்பொழுதும் மாறிக் கொண்டேயிருக்கிறது. வளர்ந்து கொண்டேயிருக்கிறது. ஆனால் காலத்தில் எக்கட்டத்திலும் ஒரு மரமும் இல்லை, ஒரு மனிதனும் இல்லை என்ற சூன்ய நிலை கிடையாது. உலகத்தை இவ்வாறு கற்பக விருட்சத்தோடு ஒப்பிடும்போது இந்த மாற்றங்களை நன்கு உணர்கிறோம்.


7.2 மரத்தின் வேர்கள்:

வேரின் மூலம் விருட்சம் வாழ, வளரத் தேவையான தண்ணீர் உறிஞ்சப்படுவதால், அது விருட்சத்தின் மிக முக்கிய அங்கமாகக் கருதப்படுகிறது. அவ்வாறே கற்பக விருட்சத்திலும், அது பயிரிடப்படும் நேரம், வேர்கள் வளருகின்ற நேரம் மிக முக்கியமானது. வேர்கள் அழகாகச் சென்றால் அஸ்திவாரம் பலமாகி, மிக அழகிய விருட்சமாக அது வளர்கிறது. இந்தச் சங்கமயுகத்தில், நாம் விதையாக இருக்கும் இறைவனுடன், தொடர்பு கொண்டு. கர்மாவின் விதிகளை அறிகின்றோம். ஆகவே இந்த நல்லநேரத்தில் நமது பிற்காலத்திற்கும் கற்பக விருட்சத்தின் ஆயுட் காலத்திற்கும், அதாவது 5000 வருடங்களுக்குத் தேவையான பலமான

அஸ்திவாரம் அமைக்க இயலுகிறது. ஒவ்வொரு செயலுக்கும் ஒரு பயன் வருவதால், செயலையும் ஒரு விதையென்றே கூறலாம். நான் இன்று விதைக்கும் விதைக்கு, பின்னர் ஒரு சமயம் பலன் கிட்டும். கற்பக விருட்சத்தின் விதையான இறைவன் மற்றும் விதைகளான என்னுடைய இப்போதைய செயல்கள் ஆகியவற்றை அறிவதன் மூலம், என்னுடைய வருங்காலம் எனும் மரத்தை என் விருப்பம் போல் உருவாக்க முடியும். சரியானநேரத்தில் விதை விதைத்தாலே நல்ல பலன் கொடுக்கும், காலம் கடந்து விட்டால் அது எவ்வித பலனும் கொடுக்காது. பழைய உலகிற்கும், புதிய உலகிற்கும் இடையில், பழைய விருட்சத்திற்கும், புதிய விருட்சத்திற்கும் இடையில் உள்ள இந்த சங்கம நேரத்தைப் பயன்படுத்திக் கொண்டு, என்னுடைய நல்ல வருங்காலத்திற்கான விதை விதைக்க வேண்டும். இதே உதாரணம் கல்விக்கும் பொருந்தும், ஏனெனில் சரியான சமயத்தில் சரியான முறையில் படிப்பில் ஈடுபடாவிட்டால், வருங்காலத்தில் அஸ்திவாரம் சரியாக அமையாது. நாம் நம்மைப் பற்றியும், இறைவனைப் பற்றியும், உணர வேண்டி, ஆன்மீக விஷயங்களைக் கற்க வேண்டிய நேரம் இது. கல்வியும் மரம் பயிரிடுவதற்கு ஒப்பாகும். விதைக்கும் நேரம் மிகச் சிறியதே, ஆனால் வரும் பலனை அனுபவிக்கும் காலமோ மிக அதிகம். ஆகவே நான் ராஜயோகத்தைச் சிறிது காலமே கற்றாலும், இதன் பலன் பல ஆயிரக்கணக்கான வருடங்களுக்குத் தொடர்ந்து இருந்து வரும். நான் இப்பொழுது விதைக்கும் சிறந்த செயல்களான விதை வருங்காலத்தில் பல வருடங்களுக்குப் பலன் தரும்.

கல்ப விருக்ஷம்

WORLD GENEAOLOGICAL TREE



ஒருவர் ஒரு விதையை விதைக்க, மிக ஆழமாகத் தோண்டத் தோண்ட அருகில் செல்பவர்கள், இந்தக் கடுமையான உழைப்பைப் பார்த்துவிட்டு, இவ்வளவு சிரமப்பட வேண்டாம், இது இன்புற்றிருக்க வேண்டிய நேரம் என்று கூறி, அவரது கவனத்தைத் திருப்பு வார்கள். கவனம் குறைந்தால், காலம் கடந்து விடுகிறது. சந்தர்ப்பமும் மறைந்து விடுகிறது. அவ்வாறு நான் ராஜ யோகத்தைக் கற்கும்போது எனது வருங்காலத்திற்கு நல்ல அஸ்திவாரம் இடும்போது, பலவிதமான இடையூறுகள் வரும். இந்த நேரத்தில் நான் அவசியம் செய்ய வேண்டியது என்ன என்பதை என் ஆன்மீக உணர்வு கொண்டு தான் அறிய முடியும். இக்காலத்தில் சீரிய தன்மையையும், என்னுடைய பொறுப்பையும் உணர்ந்தாலே நான் என் வருங்காலத்திற்கு வேண்டியவற்றை தொடர்ந்து செய்ய இயலும். இந்த சங்கம காலத்தில், ஞானம், தியாகம்,

இறைவனின் தொடர்பு ஆகியவற்றால், ஆத்மா அடையும் சக்தியாலும் அறிவினாலும் ஆத்மா நற்செயல்களைச் செய்கிறது. இதன் மூலம் வெகுசீக்கிரத்தில் வருகின்ற சத்யுகத்திற்கான நல்ல அஸ்திவாரத்தை ஆத்மாவாகிய நான் அமைத்துக் கொள்கிறேன்.

7.3 அடிமரம்

மனித உணர்வுகள் மாறுவதன் மூலம், வேர்கள் நன்கு வளர்ந்து, சங்கமயுகத்திற்கு நல்ல அஸ்திவாரம் இடுவதன் மூலம், இந்த பூமியில், சத்யுகம் உண்மையாக உண்டாகும். கற்பக விருட்சத்தில் அடிமரமான (தண்டு) இக்காலம் சூரிய ஆட்சிக் காலம் என்று கூறப்படுகிறது. இங்கு ஒரு மதம், ஒரு ஆட்சி, ஒரு உலகக் குடும்பம், ஒரு ராஜ்யம், ஒரு மொழி தான் இருக்கிறது. அந்த ராஜ்யத்தில் எல்லோரும் எந்தத் தொழில் செய்து கொண்டிருந்தாலும், சந்தோஷமாக இருக்கிறார்கள். அமைதி, திருப்தி, நட்புறவு நிலவுகிறது. சூரிய ஆட்சியில் சூரியன் பிரகாசமாக இருக்கிறது. இது ஒரு கல்ப காலத்தின் பகல்போலாகும். மிகச் சிறந்த உள்ளுணர்வின் ஒளி வீசும் காலம், மனிதர்கள் தெய்வீகத் தன்மைகள் கொண்டிருப்பதால், தேவதைகள் ஆகிறார்கள். அவர்கள் முற்றிலும் சரியான நிலையை அடைந்திருக்கிறார்கள். தெய்வ வழிபாட்டை வெறும் சடங்குகள் போன்று செய்கின்ற தர்மம் இல்லை இது. உயர்ந்த தர்மத்தின் கோட்பாடுகளே தேவதைகளின் செயல்கள் ஆகின்றன. இவர்கள் யோகியைப் போல வாழ்வதால் நீண்ட ஆயுளுடன் ஆரோக்கியமாக வாழ்கின்றனர். இவ்வாறு இப்பூமியில் தேவதைகளின் தர்மம் உருவாகிறது. இந்த சத்யுகத்தின், பேரரசன் முதல், பிரஜைகள் வரை எல்லோரும் தெய்வீகமாக வாழ்கின்றனர்.

காலம் செல்லச் செல்ல, பிறப்பும் மறுபிறப்பும் நடைபெறும். ஆத்மா இப்பூத உடலைவிட்டு நீங்குவதை மரணம் என்று கூறுவதில்லை. பழைய ஆடையை விடுத்து, புதிய அழகிய ஆடை உடுத்துவது போலாகும். இறவாமை இருக்கும் இவ்வுலகில் மரணம் என்ற வார்த்தைக்கே இடம் இல்லை. துன்பம், பற்று, பயம் ஆகியவை இல்லாததால், மனித வாழ்க்கையை முற்றிலும் சந்தோஷமாக அனுபவிக்கலாம். இறைவன் துல்லியமாகக் கூறியபடி, சத்யுகத்தின் காலமான 1250 வருடங்களில், ஆத்மா 8 முறை வேறுபட்ட "ஆடைகளை" அணிகிறது. ஆத்மா பரிசுத்தமானதாகவும், சக்தி வாய்ந்ததாகவும் உள்ளதால், ஆயுட் காலம் நீடித்துள்ளது. சுமாராக ஒவ்வொரு மனிதனும் 150 வருடங்கள் வாழ்கிறான். பிறப்பும் மறு பிறப்பும் நடைபெறும் பொழுது, நாம் மெதுவாக சத்யுகத்தில் இருந்து திரேதாயுகம், சூரிய வம்ச ஆட்சில் இருந்து சந்திரவம்ச ஆட்சிக்குச் செல்லுகிறோம். இங்கு இன்னும் ஒளியுண்டு, ஆனால் சக்தி சிறிது குறைந்துள்ளது. இன்னும் பரிசுத்தம், ஒற்றுமை, அமைதி நிலவுவதால் இது இன்னும் சொர்க்கம் தான். இந்த மரத்தில் உள்ள ஒரே தண்டு இன்னும் வளர்ந்து வருகிறது. இங்கு இன்னும் ஒரே மதம், ஒரே ராஜ்ஜியம் தான் உண்டு. சத்யுகத்தில் ஆத்மா வரிசையாக 8 பிறப்புகள் எடுக்கும்போது அதன் சக்தி சிறிது குறைகிறது. அதனால் திரேதாயுகத்தில் அதாவது 1250 வருடங்களில், ஆத்மாவின் உடலின் ஆயுட்காலம் குறைவதால், ஆத்மா 12 பிறப்புகள் எடுக்க வேண்டியுள்ளது.

7.4 கிளைகள் ஆரம்பம் ஆகின்றன:

இப்பொழுது கல்ப காலத்தின் சரிபாதி முடிந்து விட்டது. ஆத்மாவின் புனிதத் தன்மையின் சக்தியின், சரிபாதி செலவாகி விட்டது. இச்சக்தியை மீண்டும் உற்பத்தி செய்யும் திறன் இல்லாததால், துவாபரயுகம் துவங்குகிறது. பல பயங்கர மாற்றங்கள் ஏற்படுகின்றன.

உள்ளுணர்வில் பெருத்த மாறுதல்கள் ஏற்படுகின்றன. ஆத்மா உடல் என்ற ஆடையை உணர்கின்றது. தனது உடலால் ஈர்க்கப்படுகிறது. ஆத்மாவின் உணர்வு மாறி, புலன்களால் வரும் இன்பத்தினைத் துய்க்க ஆரம்பிப்பதால், ஆத்மா தன் புலன்களைக் கட்டுப்படுத்தும் சக்தியை இழந்து விடுகிறது. அப்புலன்களுக்கு அடிமையாகி விடுகிறது. அது மட்டுமல்லாமல் மற்ற ஆத்மாக்களின் உடற்கவர்ச்சியால் ஈர்க்கப்படுகிறது. இந்நேரத்தில் பரிசுத்தம் என்ற பீடத்தில் இருந்து தேவதைகள் விழுந்து விடுகின்றனர். இச்சிற்றின்ப வேட்கையால் முதன் முதலில் இவ்வுலகில் வன்முறைச் செயல் நடைபெறுகிறது. நாட்டில் சிற்றின்ப வேட்டை நுழைந்தவுடன், கோபம், பற்று, பேராசை, அகந்தை ஆகிய துர்க்குணங்களும் பின் தொடர் கின்றன. இதுவரை ஒன்றாக இருந்த நாடு பல பாகங்களாகப் பிரிகின்றது. ஒன்றாக இருந்த அடி மரத்தில் பல கிளைகள் தோன்றுகின்றன. தெய்வீக வாழ்க்கை மறைந்து விட்டதால், தெய்வங்களும் இனி தேவதைகளாக அழைக்கப்படுவதில்லை. அழியாமை மறைந்து, மனிதர்கள் அழியும் பொருட்களாகின்றனர். அவர்களின் தீச் செயல்களால் துக்கத்தையும், துன்பத்தையும் அனுபவிப்பதால், இறையருளைத் தேடுகின்றனர். அவர்கள் அனுபவிக்கும் துன்பங்களால், என்றும் ஒன்றான சாசுவதமான, மிக உயர்ந்த இறைவனை நினைத்து வழிபட ஆரம்பிக்கின்றனர். முதன் முதலில் அசரீரி இறைவழிபாடு துவங்குகிறது. வைரம் சுற்றிலும் ஒளியை பிரதிபலி ப்பதால், இந்த வைரம் இறைவனின் பேரொளிக்கு உவமையாகக் கொள்ளப் பட்டது. இப்பொழுது உள்ள இங்கிலாந்து நாட்டின் அரச கிரீடத்தில் உள்ள கோஹினூர் வைரம், முதலில் சிவனுக்கு உவமையாக இருந்த வைரத்தின் ஒரு பகுதி தான் அது. இந்த பரிசுத்தமான இறை வழிபாடு மட்டுமல்லாமல், தங்கள் சந்தோஷமான முற்பிறவிகள் அதாவது தேவதைகள் ஞாபகத்தால், அத்தேவதைகளுக்கு உருவங்கள் கொடுக்கப் பட்டு, தெய்வங்களாக அவற்றை வணங்கத் துவங்கினர். இந்த பக்தியும் பரிசுத்தத்தை இழக்கிறது. எல்லாம் வல்ல ஒரே இறைவனை வணங்கும் முறையும் மறைந்து விடுகிறது. சொர்க்கத்தில் தேவதைகள் காலத்தில், நீதியின் தீர்ப்பு இயற்கையான முறையில் இருந்தால் நீதி மன்றங்கள், நீதிபதிகள் ஏன்? இன்னும் கேட்டால் சட்டமே அவசியமில்லாதிருந்தது. ஆனால் இன்று மனிதன் கீழ்நிலைக்கு வந்துவிட்டதால், ஆன்மீகக் கோட்பாடுகளும் சட்டமாக நிறைவேற்றப்பட்டு, இன்று நாம் காணும் மதம் தோன்றலாயிற்று. சமூக நடத்தைக்குச் சட்டங்கள், மனித உறவுகளுக்குச் சட்டங்கள், உலக பௌதீகக் கோட்பாடுகளுக்குச் சட்டங்கள் என்று பலசட்டங்கள் வரையறுக்கப்பட்டுத் தீட்டப்பட்டன. அதனால் பௌதீகப் பொருட்களால் ஆன இவ்வுலகம் துவங்குகிறது. இச்செயற்கையான உருவ வழிபாட்டினால் அவ்வப்பொழுது தெய்வீகத் தூதர்கள் அவதரித்து அறிவூட்டுவதால் மக்கள் உருவ வழிபாட்டினால் தெய்வத்தை அடைய முடியாது என்று உணர்கிறார்கள். இவ்வாறு உலக மேடையில் தோன்றும் ஒரு தெய்வீகத் தூதர் தான் ஆப்ரகாம். இதனால் மரத்தின் முதல் கிளையாக இஸ்லாமிய பாரம்பரியம் தோன்றுகிறது. இம்மதம், மனிதன் கடவுளிடம் நடந்து கொள்ள வேண்டிய முறைக்கு, தன் குடும்பத்தினரிடம் நடந்து கொள்ள வேண்டிய முறைக்கு, இல் வாழ்க்கைக்கு, பெற்றோருக்கு, குழந்தைகளுக்கு, குருவிற்கு, சிஷ்யனுக்கு என்று பல தரப்பட்ட சட்டங்களை இயற்றியது. இன்னும் ஒரு தெய்வீகத் தூதர் புத்தர் தோன்றி அஹிம்சா வழி, வாழ்வின் உயர்ந்த அம்சம் என்பதைப் பற்றி போதிக்கிறார். இவருடைய பாதையும் பரிசுத்தமும், புனிதத் தன்மையும் நிறைந்த ஒன்றாகும். ஆனால் இம்மதத்தில் இறைவனுக்கு முக்கியத்துவம் கொடுக்கப்படவில்லை. குழப்பம் மிகுந்த உலகில், உணர முடியாத இறைவனைப் பற்றி வேதாந்தங்கள் பேசாமல், மனிதன் நடத்தைக்கு

முக்கியத்துவம் கொடுத்தது புரிந்து கொள்ளத் தக்கதே. ஜைன மதத்தில் கர்மா, செயல், பிரதி செயல் ஆகியவற்றின் உணர்வு இருந்ததால், மறு பிறவியில் நம்பிக்கை இருந்தது. ஆத்மா ஒரு உடலில் இருந்து இறந்தவுடன் மறு உடலுக்குச் செல்வது ஏற்றுக் கொள்ளப்பட்டது.

கற்பக விருட்சத்தின் மேற்கு பகுதியில் ஆப்ரகாமின் வழியில் மற்றொரு கிளை தோன்றுகின்றது. ஆப்ரகாம் காலத்தில் கடுமையான சட்டம் மட்டும் இருந்தது. அடுத்து வரும் தேவதூதர் சட்டத்துடன் கருணையும் இணைய வேண்டிய அவசியத்தைக் குறிப்பிட்டார். இஸ்லாமிய மதத்தில் கடவுள் அஞ்சக் கூடியவராகக் கூறப்பட்டு, நேர்மையான, பாகுபாடற்ற நீதி பரிபாலனம் நடைபெற்றது. ஏசு கிறிஸ்து இறைவனின் அளவற்ற கருணையை மனத்தில் கொண்டு, சட்டத்தில் கருணைக்கும் இடமளிக்குமாறு செய்தார். முதலில் ஒவ்வொரு தேவ தூதரும் பல ஆத்மாக்களுக்கு இதுவரையில்லாத தன்னுணர்வை ஏற்படுத்தி நன்மைகள் செய்தாலும், காலக் கிரமத்தில் அப்பரிசுத்தத்தின் தன்மை குறைந்து விடுகிறது.

இவ்வாறு மேற்கு நாடுகளில் இறைவன் ஒருவனே என்ற உணர்வு இருக்கும் போது, கிழக்கு நாடுகளில் என்ன நடக்கிறது என்று பார்ப்போம். மரத்தின் தண்டில் இருந்து, ஹிந்து மதம் உருவ வழிபாட்டில் துவங்கி, தூய்மை இழக்கிறது. இந்து மதம் அழியும்போது, புத்த மதம் நன்கு வளர்கிறது. இந்து மதத்தில் ஒரு முக்கிய கிளை சங்கராச்சாரியாரால் ஏற்படுத்தப்பட்ட சந்நியாசி தர்மம். பொறுப்பில்லாமல் சிற்றின்பத்தில் தூய்க்கும் ஆத்மாக்களுக்கு இந்தத் துறவு என்ற உபதேசம் மிகப் பொருத்தம். சந்நியாசிகளின் வாழ்க்கையில் புனிதத்தின் சக்தி இருக்கிறது. அந்த சக்தி தான் உலகம் எவ்வளவு சீர்கேட டைந்தாலும் இந்த கல்ப விருட்சத்தை உயிர்வாழ வைத்துள்ளது. மேற்கு திசையில் மற்றொரு தேவதூதர் தோன்றுகிறார். அவர் தான் முகமது. அவரது போதனை சுலபமானதும் மிக முக்கியமானதும் ஆகும். யூத மதம் அருவமாகக் கடவுள் இருக்கும்போது உருவ வழிபாடு ஏற்றுக் கொள்ளக்கூடாத ஒன்று என வலியுறுத்தியது. ஏசுநாதர் அவதரித்தவுடன், அன்பும் கவனமும் ஓரளவு இறைவனைவிட்டு ஏசுநாதர் பக்கம் திரும்பியது. இறைவன் ஒருவர் தான், அவர் நினைவு எப்பொழுதும் வேண்டும் என்று முகமது போதித்தார். அந்த இறைவனின் பெயர் அல்லாஹ், மற்ற எல்லோரும் தேவ தூதர்கள், இதனால் மறுபடியும் ஒன்றே ஒன்றான தனித்தன்மை வாய்ந்த இறைவனைப் பற்றி நினைவூட்டப்பட்டது. முகம்மதுவின் போதனையை இஸ்லாமியர் மிக்க கவனத்துடன் பின்பற்றவே உருவங்கள் இந்த மதத்தில் உண்டாகவில்லை. அவரது தொழுகைத் தலங்கள் புனித எழுத்துக்களாலேயே அலங்கரிக்கப்பட்டன. ஆதலால் அங்கு உருவ ஆராதனைகள் கிடையாது.

7.5 கிளை நுனிகள்

துவாபர யுகத்தில் எல்லா சிறந்த மதங்களும் உலக மேடையில் தோன்றி வளர்கின்றன. இந்த யுகத்தின் இறுதியில், இவற்றிலும் பிளவுகள் ஏற்படுகின்றன. கொள்கைகளிலும் விரிசல் தோன்றுகிறது. ஒவ்வொரு தேவதூதரின் போதனைகளையும் பலவிதங்களில், மாறுபட்ட கருத்துக்களுடன் விவரித்தனர். இச்சமயம் விருட்சம் இன்னும் வளர்ந்து, கலியுகத்தை அடைகிறது. மேலும் சில கிளைகள் தோன்றுகின்றன. இவற்றை உலக மதம் என்பதை விட சிறிய கோட்பாடுகள் என்றே கூறலாம். கலியுகம் முடிவு காலத்தை நெருங்கும்போது தினம் ஒரு புதிய சித்திரங்கள் வெளியிடப் பட்டது. இந்த நேரத்தில் முதலில் தோன்றிய கிளைகள் பட்டுப்போகும் நிலையை அடைந்துவிட்டன. முதலில் மதம் தோன்றியபோது அறிவிக்கப்பட்ட

விளக்கங்கள் காலக் கிரமத்தில் திரிந்து, இன்று முற்றிலும் மாறுபட்ட விளக்கங்கள் தரப்படுகின்றன. பௌத்த மதத்தினர் புத்தர் வழியில் நடப்பதில்லை. கிறிஸ்தவர் கிறிஸ்து வழியில் நடப்பதில்லை. மேலும் அந்த போதனைகள், சித்தாந்தங்கள் பற்றியே சந்தேகங்களும், குழப்பங்களும் ஏற்படுகின்றன. இவ்வாறு விருட்சம் முழுவதும் பட்டுப்போகின்ற நிலை அடைகிறது. கிளைகளும் நலிவுற்றன. உலக மதங்களின் அஸ்திவாரம் பொடிப் பொடியாயின. இது தான் கலியுகத்தின் இறுதி, முதிர்ந்த மரத்தின் முடிவு. தேவதா உலகில் தோன்றிய ஆத்மாக்கள் 84 பிறப்புகளை முடிக்கின்றன. சத்யுகத்தில்8, திரேதாயுகத்தில் 12, துவாபரயுகத்தில் 21, கலியுகத்தில் 42, ஒவ்வொரு பிறவி எடுக்கும்போதும் ஆத்மா தன் சக்தியை சிறிது சிறிதாக இழந்து, கலியுக இறுதியில் தெய்வ மத ஆத்மாக்கள் உட்பட எல்லா ஆத்மாக்களும் மிக நலிவடைந்தன.

7.6 விதை

இந்த முதிய விருட்சம் இனி வளர இயலாது என்ற நிலையில், விதையாகிய எல்லாம் வல்ல இறைவன் எழுந்தருளுகிறார், விதை அல்லது இறைவன், இவ்வுலகில் அவதரித்து, அவரது போதனைகள் மூலம் புதிய மரத்திற்கு அடிக்கல் நாட்டுகிறார். பழைய மரத்தில் இருந்து, புதிய மரத்தின் அஸ்திவாரம் இடப்பட்டு புதிய உலகத்திற்கு நாற்றுகள் நடப்பட்டன. பழைய மரத்தில் இலைகளாக உள்ள கலியுக ஆத்மாக்கள், ஒரு மாற்றத்தை அனுபவித்து புதிய உலகின் அஸ்திவாரமாக ஆகின்றன. முதலில் உள்ளுணர்வில் மாற்றம், அதனால் சுய சம்ஸ்காரத்தில் மாற்றம் ஏற்படுவதால் புதிய உலகின் அஸ்திவாரமாகின்றனர். இதே நேரத்தில் பழைய மரம் அழிகின்றது. ஆகவே எல்லாம் வல்ல இறைவன் அளித்த ஞானத்தாலும், யோகத்தின் சக்தியாலும், புதிய மரத்திற்கு அஸ்திவாரம் ஒருபுறம் இடப்படும்போது, மறுபுறம், பழைய மரத்தின் அழிவு நடைபெறுகிறது. இயற்கையின் சீற்றத்தினால், பூகம்பங்கள், பெருவெள்ளம் போன்றவற்றால் இந்த அழிவு பலவாறு நிகழ்கிறது. இதனால் மனிதர்களிடையே குழப்பம் ஏற்பட்டு, அராஜகமும், உள்நாட்டுக் கலகங்களும் நிலவுகின்றன. இதற்கான அறிகுறிகள் இப்பொழுதே காணப்படுகின்றன. அணு ஆயுதங்களால், இறுதியில் இம்மரம் வீழ்ச்சி அடைகிறது. இம்மரம் வீழ்ந்தவுடன் முன்பு நடப்பட்ட நாற்று வளர ஆரம்பிக்கிறது. புதிய உலகம், புதிய விருட்சம் தோன்றி, புதிய உலகச் சக்கரம் மறுபடியும் ஆரம்பம் ஆகிறது.

7.7 வீடு திரும்புமுன்

முதலில் ஆத்மாவிற்கு வாழும் போதே விடுதலை நிலை (ஜீவன் முக்தி) சத்யுகததுல் கிடைக்கிறது. துவாபர், கலியுகத்தின் ஆத்மா புலன்களுக்கு அடிமையாக இருப்பதால், கலி யுகத்தில் அழிவு நேரத்தில், எல்லா ஆத்மாக்களுக்கும் முக்தி அல்லது விடுதலை கிடைப்பதால், பிறப்பில் இருந்து விடுபட்டு உண்மையான வீடான "ஆத்ம உலகை" அடைகின்றன. வீடு திரும்புமுன் எவ்வாறு என்னுடைய முன் கர்மாக்களின் கணக்குகளைத் தீர்ப்பது என்ற கேள்வி எழுகின்றது. யோகத்தின் சக்தியால், முன் கர்மாக்களைச் சரி செய்ய முடியும். அவ்வாறு செய்யாவிடில், முக்தி அடையுமுன்பு, இறைவனின் சந்நிதியில் சூட்சும உலகில் கணக்கு தீர்க்க வேண்டிவரும். ஆத்ம உலகில், எல்லா ஆத்மாக்களும் விதை போன்றுள்ளன. (அதனுடைய பிற்கால பங்குகள் வெளிப்படாமல் உள்ளே உறைந்து நிற்கும் நிலை) எல்லா ஆத்மாக்களும் சாசுவதம், அவற்றின் உடல்கள் தான் அழிகின்றன. ஒவ்வொரு கல்பத்தின் இறுதியில் பிறப்பு என்ற அடிமைத் தளையிலிருந்து விடுதலை அல்லது முக்தி அடைகின்றன. அறிவு துன்பத்திற்கு முடிவு கட்டுகிறது. ஆத்ம உலகில் அமைதி உலகில், இறைவன் இருக்கும் அவ்வுலகில்

சுதந்திரமாக உள்ளன. தினம், தியானம் செய்து இறைவனையே நினைத்து சங்கமயுகத்தில் நற்செயல்களையே செய்த ஆத்மாக்கள் தெய்வீகத் தன்மை நிறைந்துள்ளன. இத்தகைய தெய்வீக ஆத்மாக்களை சத்யுகத்தில் மீண்டும் தோன்றச் செய்து அந்த ஆத்மாக்கள் முன்பு செய்த தவத்தின் பலனாக எல்லையில்லா சந்தோஷத்தை அனுபவிக்கும்படி செய்யப்படுகின்றன.

7.8 தியானம் - திருப்தியின் அனுபவம்

மிதமான வெளிச்சத்தில், சௌகரியமாக அமரவும். தியானத்தின் சொற்களில் மனத்தை, நிறுத்தி, ஒவ்வொரு சொற்கோவையையும், நிதானித்து அனுபவிக்கும் போது, நீங்களே அதன் அனுபவ சொரூபமாகிறீர்கள்.

தியானத்திற்கு சில எண்ணங்கள்

இந்த உடல்....என்கிற ஆடையை....தாண்டி....பரிசுத்தமான....எண்ணங்களின் சக்தியில்....நான்....உயர்ந்த.....பரமாத்மாவான....என் தந்தையின் இல்லமாகிய....ஒளி உலகிற்குச் செல்கிறேன். என் தந்தை பாபாவின்....ஒளியில்....நான்...ஸ்நானம் செய்கிறேன்.....எல்லையில்லாத சந்தோஷம், சாந்தம் ஆகியவற்றால் நான் நிரம்புகிறேன்.

பாபா அன்பு சாகரம்....நான் அந்த அன்பில் மூழ்குகிறேன்....நான் அந்த அன்பாகிறேன்.... அந்த அன்பின் நெருப்பு.... என் ஆத்மாவில் உள்ள.... வேண்டாதவற்றை எரித்து ..... அகற்றுகின்றது. நான் இறைவனின் நற்குணங்களால் நிரம்புகின்றேன்...பாபா ஞான சாகரம்...கற்பக விருட்சத்தின் விதை ....நான் என் தந்தை.... என் குருவிடம் வர.... ஞானத்தால் நிரம்புகிறேன். ... இந்த நாடகமாகிய உலகில்.... நாடகத்தின் முக்கியத்துவத்தைப் புரிந்து கொள்கிறேன்.... எல்லா நடிகர்களின் பங்கையும் புரிந்து கொள்கிறேன்.

தினசரி நம் முன்னேற்றத்திற்கு உதவும் சில நடைமுறைகள்:

சோதித்தல்: இதைத் துவங்குமுன், உங்கள் உடலாகிய முகமூடியை சீக்கிரம் எடுத்து விடுங்கள். அந்த உடல் தான் புத்தியை தன் வயப்படுத்துகிறது. தன்னை உணர்வது மூலமும், அமைதி சாகரமான இறைவனை நினைவு செய்வதன் மூலமும் ஆத்மா அமைதியில் மூழ்குவது மூலமும் தன் உடலை மிகுந்த கட்டுப்பாட்டுடன் செயலாற்றச் செய்கிறது. தொடர்ந்து செய்யும் பயிற்சியினால் இது சுலபமாகிறது. இன்று இவ்வாறு இருக்குமாறு அடிக்கடி சுயசோதனை செய்யுங்கள்.

7.10 படிப்பு:

கேள்விகள் பதிலளிக்கப்படும்போது, ஒவ்வொரு ஆத்மாவும், இந்த மனித இனத்தின் மரத்தில் ஒரு பங்கேற்கிறது என்பதை நினைவு கூறலாம். இதனால் நீங்களும் உங்களுடைய உண்மையான செயலின் நிலையை அடைய முயற்சிக்க முடியும்.

கேள்விகள்:

(1) எவ்விதம் இறைவன் மரத்தின் விதையாகிறார்?

(2) மரத்தின் வெவ்வேறு பாகங்கள் எதற்கு உதாரணமாகி உள்ளன?

(3) நான்கு யுகத்திலும் தனித்தனியே என்ன நடக்கின்றன?

பாடம்: 8

மரத்தின் பழங்கள்

8.1 ஞானத்தின் உபயோகம்

ஓம் சாந்தி. என்னை நான் ஆத்மாவாக உணர்ந்து, விருட்சத்தின் தத்துவம் தான் படைப்பின் வரலாறு என்று புத்தியில் உணர்வதால் கிட்டும் பலன்களை உண்மையாக அனுபவிக்கிறேன். ராஜயோகம் வாழ்வில் ஒரு திருப்புமுனை, பரமாத்மாவினால் கற்பிக்கப்படும் ஞானம் ஒரு தத்துவம் மட்டுமின்றி, தினசரி பயிற்சி செய்யக்கூடியதும் ஆகும். உதாரணமாக விருட்சத்தையே எடுத்துக் கொண்டால் அது அளிக்கும் உள்ளுணர்வின் மாற்றத்தை உணரும்போது, பாபா வெறும் ஞானம் மட்டும் அளிப்பதோடல்லாமல் அவரது சக்தி சாதாரண ஆத்மாவை, தெய்வீக ஆத்மாவாக மாற்றுகிறது என்பதை நாம் நன்கு புரிந்து கொள்ளலாம். இச்சங்கமயுகம் தான் நம் பழைய கணக்கைத் தீர்த்துக் கொள்ளும் காலம்; வருங்காலத்திற்கு விதை விதைக்க வேண்டிய காலம். நாம் முயற்சிக்கும்போது, அதன் பலன்களை உடனே அனுபவிக்கத் தோன்றுவது இயற்கையே. அதன் பலன்கள் மேலும் நம் உன்னதமான குறிக்கோளை நாம் நெருங்கிக் கொண்டிருக்கிறோம் என்ற திருப்தியே நமது தற்சமய பலன் என்று உபதேசிக்கிறார். நாம் செய்யும் முயற்சிகளுக்கு உடனடியாக உடல் சார்ந்த பலன்களை எதிர்பார்த்தால், அது பழத்தைவிட்டு காயைப் சுவைப்பது போலாகும் என்று பரமாத்மா கூறுகிறார். இதில் இனிமை இல்லை; உடல் உபாதை தான் மிஞ்சும். எனவே இக்காலம் விதைக்க வேண்டிய காலமே தவிர அறுவடை நேரம் அல்ல.

8.2 மிக உயர்ந்த குணங்களைக் கூர்ந்து நோக்குதல்:

சத்யுகத்தின் முக்கியத்துவத்தை நான் அறியும்போது அதன் பெருமைகளை நான் நினைவு கூறுகின்றேன். இக்காலத்தில் மானும், சிங்கமும் ஒருங்கே ஓடையில் நீர் அருந்தின. இதை பல கீழை மேலை நாட்டு நூல்களும் உண்மை எனக் கூறுகின்றன. இத்தகைய ஒப்பற்ற சிறந்த உலகத்திற்குச் செல்ல நான் என்ன செய்ய வேண்டும்? பொதுவாக ஒவ்வொருவரும் தத்தம் தன்மையைப் பொறுத்து மான் அல்லது சிங்கத்தின் குணத்தை அடுத்து இயற்கையாக இருப்பார்கள். சிங்கத்தின் குணம் உடையோர், மான் குணத்தினரைப் பார்த்து எள்ளி நகையாடுவர்.ஆனால் இராஜயோகத்தில் பரமாத்மா இந்த மாறுபட்ட குணங்களையும் ஒரே கண்ணால் பார்க்குமாறு உபதேசிக்கிறார். சிங்கத்தை பார்க்கும்போது அதன் தைரியத்தையும் வீரத்தையும் கண்டு வியக்கிறேன். அதனிடம் ஒரு அரசனின் குணங்களையும் ஆட்சிபுரியும் சக்தியையும் காண்கிறேன். இத்தகைய குணங்களுடையவரைக் கண்டு நான் அஞ்சவில்லை. ஏனெனில் பரமாத்மாவின் சக்தியால் அவருடைய கெட்ட குணமான ஆணவம் களையப்பட்டுவிட்டது. ஆகவே சக்தியில் குணம் மேலோங்கி ஆணவம் அற்றவராக இருப்பதால் அவருடன் நான் இருப்பது இயற்கையாக அமைகிறது. அவ்வாறே மான் குணம் உள்ளவரிடம் பரிசுத்தம் கள்ளமின்மை, அமைதி, இனிமை குடிகொண்டுள்ளன. இவருடைய பயம் என்ற தாழ்ந்த குணம், பரமாத்மாவின் சக்தியால் அகற்றப்பட்டுவிட்டது. பரிசுத்தம், கள்ளங்கபடமற்ற தன்மை, மேம்பாடடைந்த தைரியம் மிகுந்திருப்பதால், சத்தியத்துடன் இணைந்து நிற்க முடிகிறது. மேலும் அவசியமானால் அந்த உண்மைகளை எதிர்த்துப் போராடும் சக்தியும் உண்டு. ஆகவே நான் இந்த இரு மாறுபட்ட தன்மைகள் உள்ளவரிடம் இருக்கும் நற்குணங்களைப் போற்றுகிறேன்.

அவர்களிடம் உள்ள தீயக்குணங்கள் பரமாத்மாவின் சக்தியால் அகன்றுவிட்டதால் நானும் அவர்களுடன் ஒத்துழைக்க முடிகிறது. ஆகவே எல்லோரும் ஒருங்கிணைந்து ஒரே ஓடையில் நீர் அருந்த இயலுகிறது.

8.3 பரிசுத்த அதிர்வுகளின் பலன் (சொர்க்கம்):

இந்த சொர்க்கத்தில் உள்ள மற்றும் ஒரு தனித்தன்மை என்னவென்றால் இங்குள்ள மனிதர்களால் பரப்பப்படும் அதிர்வுகள் மிருகங்களின் தன்மைகளையும் நிர்ணயிக்கின்றன. அதே அதிர்வுகள் இயற்கையின் நிலையையும் நிர்ணயிக்கின்றன. இங்குள்ள தேவதைகளின் எண்ணம், சொல், செயல்களில் உள்ள இனிமை மிகுந்த பரிசுத்தம் எங்கும் பரவி, வன்மையை அழித்து விடுவதால், எங்கும், மிருங்களிடம் கூட, நேசமும், அன்புமே மிகுந்து காணப் படுகிறது. இதை நாம் கலியுகத்திலும் காணலாம். உதாரணமாக ஒரு நாய் அமைதியாக இருந்தால் கூட நாம் அதனைக் கண்டு அஞ்சும்போது எழும் அதிர்வுகள் அதனை அடைந்து நாயின் அமைதியைக் குலைத்து, நம்மைக் கண்டு வெறிகொள்ளும்படி செய்துவிடுகிறது. மாறாக நாம் அமைதியாக இருந்தால் நாய் கோபத்துடன் இருந்தாலும், நமது அமைதியான எண்ண அலைகள் அந்த நாயை அமைதியடையும்படிச் செய்துவிடும். ஆகவே இந்த உதாரணம் சத்யுகத்தில் எப்பொழுதும் கூறப்படுகிறது. எனவே நான் சத்யுகம் அடைய எத்தகைய குணங்களை அடைய வேண்டும் என்பதை நான் அறிகின்றேன். என் குணங்கள் தான் சத்யுகத்திற்குள் செல்லத் தேவையான அனுமதிச் சீட்டு. அவை தெய்வீக குணங்களாக இருந்தால் தான் நான் சத்யுகத்தை அடைய முடியும். ஆகவே, சத்யுகத்தை ஆனந்தமாக அனுபவிக்க இப்பொழுதே நான் என்னை ஆயத்தம் செய்யத் தலைப்படுகிறேன்.

8.4 விருப்பங்களைக் கடந்து செல்ல உணர்வு:

சொர்க்கத்தில் பாலும், தேனும் ஆறாக ஓடின என்று கிழக்கு, மேற்கு நாடுகள் கூறுகின்றன. இயற்கை மனிதனுக்கு சேவகனாக இருப்பதால் எல்லாப் பொருட்களும் குறையில்லாமல் மிகுந்து இருக்கின்ற உலகம் என்பதே அதன் பொருள். இது எவ்வாறு சாத்தியம் ஆகும்? இன்று நான் உடல் உணர்வுகளுக்கு அடிமையாகி, உடற்கவர்ச்சிக்கு ஆளாகி இயற்கையினால் கட்டுண்டு, வெறும் பொருட்கள் மீது பேராசை கொண்டு அலையும்போது, இது எவ்வாறு இங்கு சாத்தியமாகும்? ஆனால் நான் என்னை உணர்ந்து, இந்தத் தளைகளைத் தகர்த்தால், இயற்கை எனக்கு அடிமையாக மாறிவிடும். அப்போது தான் செல்வம், செழிப்பு மிகுந்த பாலும் தேனும் ஆறுகளாக ஓடும் உலகை உண்டாக்க இயலும். நாம் ஆசை என்ற சொல்லை மறந்து விட்டால், நம் ஆசைகள் நிறைவேற்றப்படும்; இது ஒரு முரணான கூற்றாக தெரிகிறது அல்லவா? ஆனால் இதுவே உண்மை! இது எவ்வாறு உண்மையாகும்? பொருள் ஆசையினால் மனம் பல திசைகளில் இழுக்கப்படுவதால், மனதின் சக்தி பல திசைகளில் வீணாக செலவிடப்படுகிறது. மேலும் இந்த ஆசைகளை அற்ப காலத்திற்கே பூர்த்தி செய்ய இயலும். ஆனால் இந்த கல்பத்திலேயே இதுவரை நான் அனுபவித்தறியாதவற்றை அனுபவம் செய்யும்போது, மிகுந்த திருப்தி அடைகிறேன். இறைவனுடன் எல்லா வசதிகளும் மிகுந்துள்ள சத்யுகத்திற்கு இவ்வுணர்வுகள் என்னை அழைத்து செல்கின்றன. நான் சுய நலத்தினால் வசதிகள், பொருட்கள் எனக்கு மட்டுமே சொந்தம் என்றிருந்தால், எனக்கு அந்த சத்யுகத்தில் இடம் கிடையாது. இந்த உணர்வு என் ஆசைகளை வெற்றிகொள்வது மட்டுமல்லாமல், ஆசை என்ற வார்த்தையே இல்லாமல் செய்துவிடுகிறது. திருப்தி மிகுந்திருப்பதால் ஆசைக்கு இப்பொழுது இடமில்லை.

8.5 மிக உயர்ந்த நீதியின் மதிப்பு:

சத்யுக இராஜ்ஜியத்தை இன்னும் ஆழ்ந்து கவனிப்போம். இது இறைவனால் படைக்கப்பட்ட சொர்க்கம். ஆனால் இந்த இராஜ்ஜியத்தின் நற்பலன்களை தான் அனுபவிக்க அந்த இறைவன் பூமியில் இருப்பதில்லை. இறைவனால் அளிக்கப்பட்ட விதிமுறைகளின் படி நடைபெறும் இராஜ்ஜியம் இது. அங்கு நான் இருக்க வேண்டுமானால், இப்பொழுதே இறைவனின் ஆணைப்படி நடந்து, அந்த தகுதிகளை அடைய வேண்டும். அங்கு ஆட்சிபுரிபவர்கள் தேர்தல் மூலம் பதவி அடைந்தவர்கள் இல்லை. தற்சமயம் நான் இறைவன் பால் கொண்டிருக்கும் அன்பும் அவரது ஆணைப்படி நடக்கும் தன்மையும் ஆன்மீக சேவையுமே சொர்க்கத்தில் என் பதவிப் பொறுப்புகளை நிர்ணயிக்கும். அங்கு ஆட்சிபுரிபவர் ஒரு நாள் பதவியில் அமர்த்தப்பட்டு மற்றொரு நாள் திடீரென்று ஆட்சியில் இருந்து அகற்றப் படுவதில்லை. மக்கள் அவரை நேசித்து, அவரால் நேசிக்கப்பட்டு, அம்மக்களே அவரது வழிமுறைகளைப் பின்பற்ற அன்புடன் அவரை ஆட்சி பீடத்தில் அமர்த்துகின்றனர். ஆட்சிபுரிபவரின் அறிவுத்திறனால் மக்கள் பயனடைவதால், அவரது உதவியை மக்கள் நாடுகின்றனர். ஆகவே இப்பொழுது நான் அந்த இறைவனின் விதிப்படி நடந்தால், நாளை நான் ஆட்சி புரிவதற்கான அந்தஸ்தை அடைய முடியும். இது தான் என் நாளைய பதவியை நிர்ணயிக்கும்.

சத்யுகத்தில் மனவேற்றுமை கிடையாது. மிக உயர்ந்த இறைவன் நமக்கு அங்கு வழிகாட்டுகிறார். என் மனம் சாதாரண ஆசைகளிலிருந்து விடுபட்டு, கடந்துவரும் போது, நான் இறைவனை நெருங்குகிறேன். அமைதி, இன்பம், இனிமை, பரிசுத்தம் தான் அங்குள்ள மொழி. பேசும் சொற்களும் இவற்றையே பிரதி பலிக்கின்றன. அங்கு மன வருத்தம் இல்லை. என்னுடைய தேவதை நிலைமையை மனதில் கொள்ளும் போது, தேவதையின் குணங்களான பரிசுத்தம், அன்பு, இனிமை ஆகியவை என்னுடைய மொழியின் இயற்கையான தன்மை ஆகின்றன. என்னுடைய மொழியும் மாறுகிறது. அத்தேவதை ஆத்மாக்கள் போன்று நான் பேசும்போது, அவ்வுலகம் என் அருகில் கொண்டுவரப்பட்டு நாளை என்றில்லாமல், இன்றே இப்பொழுதே அதைத்தான் அனுபவிக்கிறேன்.

8.6 என் யோகத்தின் குறிக்கோள், உண்மையில் விதையைக் காணுதல்:

இந்த உலக விருட்சத்தின் அடிமரம், கிளைகள் ஆகியவற்றைப் பார்க்கும்போது, தேவதூத ஆத்மாக்களின் பங்கைப் புரிந்து கொள்கிறேன். தூதர்கள் இறைவனின் நற்செய்தியை மக்களுக்கு அளித்து உதவினாலும், விருட்சம் சீர்கேடடைவது தொடர்வதால் அவர்களால் இந்த விருட்சத்துக்கு புத்துணர்வு அளிக்க இயலவில்லை.

மிக உயர்ந்த விதையான இறைவன் தான் புத்துணர்வு ஊட்டுபவர். அவ்விருட்சத்தின் சிருஷ்டி கர்த்தா. ஆகவே கிளைகள் வலிமையளித்தாலும் உலகம் சத்யுகத்தை அடையவில்லை. தேவ தூதர்களின் செய்திகள் உண்மையாக இருந்தாலும், அவை உண்மையின் முழு உருவத்தை வெளிப்படுத்தவில்லை. உண்மையின் முழு உருவம் இறைவனிடமே உண்டு. ஆகவே, நான் இப்பொழுது கிளைகளின் மீதுள்ள உள் கவனத்தை அந்த விதையான இறைவனிடம் செலுத்தினால் நான் சத்யுகத்தை அடைய இயலும். விருட்சத்தின் ஒரு பகுதி எனக்கு இறையுணர்வு அளித்தாலும், பிறப்பு, மறுபிறப்பு, கர்மா ஆகியவற்றின் ஞானம் அளிக்கப்படவில்லை. விருட்சத்தின் மறுபக்கத்தில் பிறப்பு, மறுபிறப்பு, கர்மா ஆகியவற்றின்

ஞானம் இருந்தாலும், இறையுணர்வு தெரியவில்லை. இது புத்த மதம், சந்நியாச மார்க்கத்தின் உண்மை நிலை. துவாபர்யுகத்தில் தோன்றிட்ட ஒவ்வொரு மதமும் வைரத்தின் ஒரு பக்கம்போல இறைவனைப் பற்றிய ஒரு உண்மையையே ஓரளவு எடுத்துரைத்தன. வைரத்தின் ஒரு பக்கம் முழு வைரம் ஆகாதல்லவா? ஆகவே அம்மதங்கள் பல வேற்றுமைகளைத் தோற்றுவித்தது, பல போர்களுக்குக் காரணம் ஆயின. இப்பொழுது நான், கிளைகளை மட்டும் பாராக்காமல், முழு மரத்தையும், அதன் விதையையும், காண்கிறேன். நான் வைரத்தின் ஒவ்வொரு பக்கத்தையும் பார்த்து வியக்கிறேன். உண்மையின் ஓர் பகுதியை மட்டும் பார்க்காமல், அவ்வுண்மை தோன்றும் இடத்திலேயே நான் கவனம் செலுத்த வேண்டும். தேவ தூதர்கள் எவ்வளவு சிறப்புடன் இருந்தாலும், என் புத்தி, எல்லா மதங்களுக்கும் மேற்பட்ட விதையான இறைவனிடமே செலுத்தப்பட வேண்டும். ஒரு கிளை எவ்வளவு பழம் தர இயலும். அதே நேரத்தில் அம்மரத்தின் விதையே என்னிடம் இருந்தால் அளவில்லாத பழங்களை நான் சுவைக்க இயலும். இறைவனின் சிருஷ்டியான பல மதங்கள் சில நன்மைகளையே எனக்கு அளித்தன. ஆனால் விதையான இறைவனிடம் நான் தொடர்பு கொண்டால், எண்ணற்ற நன்மைகள் அளிக்கும் மிக உன்னத நிலையை நான் அடைய முடியும்.

8.7 வேற்றுமையிலும் திருப்தியை அனுபவித்தல்:

விருட்சத்தின் கிளைகளைப் பார்த்த நான் அதன் இலைகளைப் பார்க்கிறேன். ஒரு செடியின் இரு இலைகள் தொலைவில் இருந்து பார்க்கும்போது ஒரே மாதிரி இருந்தாலும் மிக உன்னிப்பாக ஆராய்ந்து பார்த்தால் எந்த இரு இலைகளுமே ஒரே மாதிரி அமையாதது பற்றி உணரலாம். முற்றிலும் வேறுபட்ட இலைகளைக் கொண்டுள்ள விருட்சம் மிக அழகாக இருக்கும் அல்லவா? அவ்விதமே மனித சிருஷ்டி விருட்சத்தைப் பார்க்கும்போது, அதன் இலைகளான மனிதர்கள், பொதுவாக மனித உருவுடன் இருப்பினும், அவர்களின் உருவம், தன்மைகள் ஆகியவற்றில் பல வேறுபாடுகள் காணப்படுகின்றன. இரட்டையர்களிடம் கூட சிறுசிறு வித்தியாசங்கள் புலப்படும். இவ்வழகைக் கண்டு நாம் வியக்கிறோம். இவ்வாறு பல வேறுபாடுகள் உள்ள மக்கள் ஒரு வழியில் எவ்வாறு செல்ல இயலும்? ஒரு ஆத்மாவின் உருவம், குணம், பழக்க வழக்கங்கள், புத்தி, எண்ணம் ஆகியவற்றின் வேறுபாடுகளை நான் கண்டு கவலையடையாமல், வியந்து சந்தோஷமே அடைவதின் காரணம் அவற்றின் சிருஷ்டி கர்த்தா இறைவனே என்று நான் உணர்ந்துள்ள உண்மை தான்.

8.8 சத்தின் ஆதாரம்:

மரத்திற்கு வேண்டிய ஊட்டச் சத்து ஒரு இலையிலிருந்தோ அல்லது கிளையிலிருந்தோ கிடைக்காது என்பது உண்மை. அந்த விதையில் இருந்து தான் எனக்கு ஊட்டச் சத்து கிடைக்கிறது. நான் எல்லா இலைகளுக்குமிடையில் ஒற்றுமையை எதிர்பார்த்தால், காலம் தான் விரயமாகும். வெற்றியும் நிச்சயம் இல்லை. ஆகவே நான் விதையுடன் தொடர்பு கொண்டால், மரத்தின் மற்ற பகுதிகளின் உதவியும் கிடைக்கும்.

8.9 இன்றும் நாளையும் - ஒரு ஒப்புவமை:

இன்று அம்மரத்தின் நிலை பட்டுப்போகும் நிலையில் உள்ளது என்பதை நன்கு நாம் உணரலாம். ஆத்மாக்களும் பற்றினால் மிகவும் சீர்கேடு அடைந்துள்ளனர். பற்றற்ற நிலையை

நான் அனுபவிக்க விரும்புகிறேன். பற்று, முக்தி, ஜீவன் முக்தி என்று 3 நிலைகள் உள்ளன. ஜீவன் முக்தி என்பது வருங்காலத்திற்கு மட்டும் பொருந்துவதில்லை. ஜீவன் முக்தியின் தன்மைகளை நான் இப்பொழுதே கொண்டிருந்தால் தான், ஜீவன் முக்தியை நான் அடைய இயலும். பற்று, தளைகளால் நான் இப்பொழுது சிறைப்பட்டுள்ளேன். பிற மனிதர்கள் மட்டுமல்லாமல் எனது தீய பழக்கவழக்கங்களும் எனக்குத் தளைகள் ஆகின்றன. இத்தளைகள் பலவகைப்பட்டன. இதில் ஒன்று இவ்வுடலாகும். இதன், ஆண் அல்லது பெண்பால், வயது, உருவ அளவு, அதன் சக்தி அல்லது பலவீனம் ஆகியவை இருப்பதால் நான் விரும்பும் எல்லா செயல்களையும் செய்ய இயலவில்லை. மேலும் மற்ற மனிதர்களுக்கும் நான் அடிமையாகிறேன். என் கர்மவினையின் காரணமாக என்னிடம் மிக நெருக்கமாக உள்ளவர்களும் கூட எனக்கு சந்தோஷம் அளிக்காமல், ஒரு பாரமாகவே இருந்து என் ஆத்மாவிற்குத் தளையாகின்றனர். என் தீய குணங்களால், சுற்றுப்புறமும், ஒரு தளையாயிற்று, நான் விரும்புவது என்ன என்பதை நன்கு உணர்ந்தபோதும், என் சம்ஸ்காரம் அதைத் தடுத்து, அதை அடையவிடாமல் செய்கின்றன. இத்தளைகளால், துன்பமும், துக்கமுமே உண்டாகின்றன. வேண்டாத பற்றில் இருந்து விடுதலை பெறுவது தான் ஜீவன் முக்தி என்பது. பரிசுத்தம், துன்பத்தில் இருந்து விடுதலை, உண்மையான சந்தோஷம் ஆகியவற்றின் அனுபவம் ஜீவன் முக்தியில் உண்டு. ஸ்திரத்தன்மையற்ற எல்லாவற்றிலிருந்தும் விடுபட்டு, முழு ஆத்ம அமைதி பெறுவதுதான் ஜீவன் முக்தியின் குறிக்கோள். மிக உயர்ந்த கடவுளான பரமாத்மா கற்பிக்கும் ராஜயோகத்தின் மூலம், ஆத்மா எல்லாத் தளைகளிலிருந்தும் விடுதலை அடைந்து, முக்தி ஜீவன் முக்தியை அடைகிறது. விருட்சத்தின் தத்துவத்தை நாம் புரிந்துகொள்ளும் பொழுது, ஜீவன் முக்தியின் பலனை உணர்கிறோம். ஆகவே, கல்ப விருட்சத்தின் அடியில், புத்தியில் ஞானத்துடன், ஆழ்ந்து தவம் புரியும் போது பழங்களின் அருஞ்சுவையை நாம் அனுபவிக்கிறோம்.

<u>8.10 தியானம் சுயமாற்றம், உலக மாற்றத்திற்கான விதை; தியானத்திற்கு சில எண்ணங்கள்:</u>

ஆத்மாவில் நம் உணர்வுகளை ஒருமுகப்படுத்துவோம்.

என் புத்தி...என் உடல் அங்கங்களை விட்டு...மரத்தின்....கிளைகளை விட்டு.... அகன்று...ஆத்மாவான....விதையில்....செலுத்தப்படுகிறது.

நான்....இந்த உணர்வில்.....இந்த முழு விருட்சத்திற்கும்....அவசியமான....புள்ளி வடிவான ஒளியாக....அசரீரியாக....ஒளிக் கடலாக....சக்திக் கடலாக....பரிசுத்தக் கடலாக அமைதியின் கடலாக ..மிக உயர்ந்த விதையாக உள்ள பரமாத்மாவுடன்....விதையான.... (ஆத்மாவான) நான்....தொடர்பு கொள்கிறேன்.

பரமாத்மாவிடம் உள்ள....எல்லாம்....என்னை...வந்தடைகின்றன. விதையான நான்....அவரது...சிறந்த குணங்களால்....நிரப்பப்படுகிறேன். என்னுடைய.....உண்மையான...விதை சொரூபத்தில் ....தந்தையினைப்போல்....நானும்....அடைகிறேன்....நான்....அந்த ஒளியாகவே.... .பரிசுத்தமாகவே....அமைதியாகவே.... மாறுகின்றேன்.

என்னை....நான்....அந்த ஒளி உலகில்....காண்கிறேன்...என் சொந்த வீடான...அமைதி உலகில்.....பரிசுத்த உலகில்.... ஆத்மலோகத்தில் தந்தையுடன்.....நான்.... இருக்கிறேன்.

தந்தையுடன் இருப்பதால்....என் உணர்வுக்கு எல்லையில்லை....என் வீட்டில் இருந்து.....கீழே....முழு உலகத்தையும் காண்கிறேன்.

விருட்சத்தின் விதையான பரமாத்மாவுடன் நான் இருப்பதால்.... பிணைக்கப்பட வில்லை. பாபாவுடன்....இருக்கிறேன்....இவருடைய...திவ்ய குணங்களால்.....நிரம்புகின்றேன்... ஆகவே.... விதையான....நான்....என்.....வருங்காலத்திற்கான....சக்தி... அடைகிறேன்.

8.11 தினசரி நம் முன்னேற்றத்திற்கு உதவும் சில நடைமுறைகள்:

பார்வை: உங்களை மாற்றிக் கொண்டு, இவ்வுலகையும் மாற்றுங்கள், அதாவது இவ்வுலகைப் பற்றிய உங்கள் நோக்கம், பார்வை மாறும்போது, நீங்களே மாற்றம் அடைகிறீர்கள். சிறிய ஆத்மாவான நீங்கள் ஒரு ராக்கெட்டைப்போல இந்த உலகை விட்டுச் செல்லும்போது, காலத்தில் சுழலும் உலகைப் பார்க்கிறீர்கள். கவலை மிக்க கலிகாலம் முடிவடைந்து, ஆனந்தம் மிக்க "சத்யுகம்" ஆரம்பம் ஆவதைப் பார்க்கிறீர்கள். ஆத்மா உலக மாற்றத்தை அனுபவிக்கும்போது, நீங்களும் சத்யுகத்தில் உள்ள தெய்வீகக் குணங்கள் பொருந்தியவராக மாறுகின்றீர்கள்.

8.12 பாடம்

ஆத்மா தனிமையிலா பதிலளிக்கப்போகிறது? இந்த நேரத்தில் ஆத்மா தன் தோழனை உணர்ந்திருக்க வேண்டும். முதல் பாடத்தில் உள்ள வண்ணச் சித்திரம் ஞாபகத்தில் உள்ளதா? அச்சித்திரம் உங்களுடையது என்பதை உணர்ந்திருக்க வேண்டும். நீங்கள் ஒரு ஒளிப்புள்ளி, நீங்கள் அணிந்திருக்கும் உடல், சாதாரணமான மனித உடலல்ல. அது ஒளியான சூட்சும சரீரம்.... அது ஒரு தேவதை உடல், இது தான் உங்கள் எண்ணமாக இருக்க வேண்டும். இந்த அமைதியான எண்ணங்கள் உங்கள் மனதில் எழுகின்றனவா?

இந்த 8 பாடங்களின் ஞானம் உங்கள் புத்தியில் பதிந்துள்ளது. ஆகவே உங்கள் ஆத்மா உண்மையான தன்னை உணர்கிறது. இப்பொழுது என் தோழன் யார் என்று வினா எழுப்புகிறீர்களா அல்லது ஏற்கனவே அறிந்துள்ளதால் அக்கேள்விக்கே இடமில்லையா? மூன்றாம் பாடத்தில் உள்ள சித்திரத்தைப் பாருங்கள். சூட்சும ஒளி சரீர ஆடை நீங்கள் அணிந்திருக்கும் ஒரு, சிறிய ஒளிப்புள்ளியான ஆத்மாவாக உணரும்போது, ஆத்மாவின் நடு உலகமான சூட்சும உலகில் உள்ளது போன்று உணரும். இங்கு ஒலி இல்லை. ஆனால் அசைவு உண்டு. வார்த்தைகள் கேட்கத் தேவைப்படாமல் உணரப்படுகின்றன.

பிரம்ம பாபா சிறிது காலமாக இந்த சூட்சும உலகில் இருக்கிறார். நம் மூன்றாவது கண்ணான ஞானக் கண்ணால் ஒரு ஒளிபரப்பும் உடலைப் பார்க்கிறோம். அவரது நெற்றியில் பரிசுத்தமான அன்பும், சந்தோஷமும் இருப்பதைக் காண்கிறோம். இந்த ஆத்மா சம்பூர்ண நிலையை அடைந்துள்ளது. அவர் தனிமையில் இல்லை. அவருடன் கூட அவரது நெற்றியில் பரமாத்மாவான உலகில் உள்ள ஆத்மாக்களுக்கும் சத்கதி அளிக்கும் பரமாத்மா இருப்பதை நம் ஞானக்கண்ணால் உணர முடிகிறது. அது நம்மை அவரது குழந்தைகளாக ஆக்குகின்றன.

குழந்தை தன் மனதைத் தந்தையிடம் செலுத்துகிறது. தந்தை அமைதிக் கடலாக உள்ளதால், ஆத்மா அமைதியால் நிரப்பப்படுகிறது. அந்த அமைதியை உணர்கின்றீர்களா? நீங்கள் அந்த பரமானந்தத்தில் திளைக்கின்றீர்களா? ஆத்மா அந்த அமைதியை உணர்ந்து அந்த அமைதியின் மூலத்தைக் கண்டு வியந்து, பரமாத்மாவை புரிந்து அவரின் மதிப்பை உணருகிறது. அந்த

அறிமுகத்தால், அன்பு பிறந்து, அந்த பரமாத்மாவுடன் சக்திவாய்ந்த அன்பினால் பிணைக்கப்படுகிறது. அன்பு இருக்குமானால் தந்தையின் பேரானந்தம் குழந்தையின் மனதினுள் பாய்ந்து, மாசு குறைகளற்ற ஒரு பரிபூர்ண நிலையை அனுபவம் செய்கிறது. குழப்பம் நிறைந்த இவ்வுலகில் இன்னும் உண்மையை தேடி கொண்டு இருக்கும் சகோதர ஆத்மாக்களின் மனதிலும் சொர்க்கத்தில் உள்ள குணங்களை பரவச் செய்கிறது.

பரமாத்மா ஒரு மனித உடலின் மூலம் அந்த சம்பூர்ண நிலையை எவ்வாறு அடைவது என்பதை உபதேசிக்கிறார். இது சங்கமயுகமாதலால் பலநூறு ஆயிரம் ஆத்மாக்கள் இதை இப்பொழுது செய்கின்றன.

பாடம் 5ன் சித்திரம் நினைவுக்கு வருகின்றதா? இப்பாடத்தில் நாம் எங்கிருக்கிறோம்? 6ம் பாடம் நமக்கு என்ன கற்பிக்கிறது? 5ம் பாடம் இந்த வட்டத்தில்நம் பயணத்தைக் காட்டுகிறது. 6ம் பாடம் கல்ப முடிவில் இப்பூலோகத்திற்கு வரும் கடவுளின் பயணத்திற்கான காரணத்தைக் காட்டுகிறது.

கற்பக விருட்சத்தின் சித்திரம் நினைவுக்கு வருகிறதா? நீங்கள் ஒரு மத ஸ்தாபகரின் குழந்தையா, அல்லது கற்பக விருட்சத்தின் வித்தான, சொர்க்க ஸ்தாபகரின் குழந்தையா?

நீங்கள் அசுத்த ஆடையைக் களைந்துவிட்டு, ஒளியை ஆடையாகத் தரித்து உங்கள் தோழனுடன் அமர்ந்தால் இக்கேள்விகளுக்கு சந்தோஷமாகப் பதிலளிப்பீர்கள்.

கேள்விகள்:

1) சத்யுகத்திற்குச் செல்ல நாம் எவ்வாறு ஆயத்தமாக வேண்டும்?

2) சத்யுகத்தின் தனிச் சிறப்புகளை விவரியுங்கள்?


3) விதையை அறிவதால் விருட்சத்தையே அறிய முடியும் என்பது பற்றி விவரமாகக் கூறவும்?

84 பிறவிகளின் ஏணிப்படி

மனிதனின் பிறவிகளை சமபடிகொண்ட ஏணியுடன் ஒப்பிடலாம். ஆத்மா ஆத்ம லோகத்தில் இருந்து சத்யுகத்தில் முதன் முறையாக வந்தடையும்போது மிகச் சிறந்த குணங்களோடு பரிசுத்தமாக இருக்கிறது. ஸ்ரீலட்சுமி, ஸ்ரீ நாராயணன் அரசாட்சிபுரியும் சூரிய வம்சமான சத்யுகத்தில் எல்லாமே மிகச் சிறப்பாக உள்ளன.

ஆத்மாக்கள் இந்த ஏணிப்படிகளில் இறங்கி, சத்யுகம் போலவே 1250 வருடங்கள் கொண்ட திரேதா யுகத்தை அடைகின்றன. ஆத்மாக்களின் பரிசுத்தம், அமைதி ஆகியவை சிறிது குறைவாகக் காணப்படுகின்றன. ஸ்ரீ சீதா, ஸ்ரீ ராமன் ஆட்சிபுரியும் இந்த சந்திர வம்சத்தில், ஆத்மாக்கள் 12 பிறவிகள் எடுக்கின்றன. சத்யுகத்தில் ஒரு உடலின் ஆயுட்காலம் 150 வருடங்களாகவும், திரேதா யுகத்தில் 125 வருடங்களாகவும் உள்ளன. இருப்பினும் இந்த இரு யுகங்களிலும் சதோகுணமே உள்ளது.

அடுத்து ரஜோ குணம் மிகுந்த யுகம் தோன்றுகிறது. இக்காலத்தில் சிவன், விஷ்ணு, சங்கர் மற்றும் பிற தேவதைகளுக்காகவும் பல கோயில்கள் கட்டப்பட்டு அவர்கள் வணங்கப்பட்டனர். 1250 வருடங்கள் கொண்ட துவாபரயுகத்தில் ஆத்மா 21 பிறவிகள் எடுக்கிறது. சத்யுகம், திரேதாயுகத்தில் அரசர்களும், மக்களும் வணக்கத்திற்குரிய குணங்களுடன் திகழ்ந்தனர். ஆனால் துவாபர் யுகத்தில் குணங்கள் மறையத்துவங்கியதால், அதே ஆத்மாக்கள், தம் முன்பிறவி உருவங்களையும், தம் முன்னோர்களையும் வணங்கத் தலைப்பட்டனர்.



இதற்கு அடுத்துவருவது கலியுகம். இங்கு உலகில் தமோ குணமே மிகுந்து காணப்படுகிறது. இப்பொழுது நீர், நெருப்பு போன்ற பஞ்ச தத்துவங்களையும் மரம், கல் ஆகியவற்றையும் வணங்குகின்றனர். மக்கள் உடல் உணர்வின் காரணமாக பல தீச் செயல்களைச் செய்கின்றனர். சமய மகாநாடுகளாலும் எவ்வித பலனும் ஏற்படவில்லை. இந்த நேரத்தில் ஞானம், அமைதி மிகுந்த மகா சக்தி வாய்ந்த முக்தி அளிப்பவரான இறைவன் தோன்றி ஆத்மாக்களைத் தடுத்தாட்கொண்டு கருணைபுரிகிறார். யோகத்தின் மூலம் தம் கர்மச் சுமையை எரித்து பூர்ண விடுதலை பெற்ற ஆத்மாக்களையும், நீதி தேவனின் தண்டனை மூலம் கர்மச் சுமையை அழிக்கும் மற்ற ஆத்மாக்களையும் ஆக எல்லா ஆத்மாக்களையும் ஆத்ம


லோகத்திற்கு அழைத்துச் செல்கிறார். அந்த நல்ல நேரம் இப்பொழுது வந்துள்ளது. இவ்வுலகில் அன்புத் தந்தையான இறைவனால் சகஜ ராஜயோகம் கற்பிக்கப்படுகிறது. இந்த ராஜயோகத்தின் மூலம் ஆத்மாக்கள் பரிசுத்தம் அடைந்து அமைதி பெறுகின்றனர். அணு ஆயுதப் போரினால் நடைபெற இருக்கும் உலக அழிவு வெகு தூரத்தில் இல்லை.

யோகத்தின் மூலம் அடையும் சக்திகள்

இராஜயோகப் பயிற்சி மூலம் ஆத்மா பல ஆத்மீக சக்திகளை அடைகிறது. அவற்றில் அஷ்ட சக்திகள் மிக முக்கியமானவை.

1. புலனடக்கும் சக்தி:- ஒரு ஆமை தன்னைக் காத்துக் கொள்ள, தன் கால்களை ஓட்டிற்குள் இழுத்துக் கொள்வதுபோல இராஜயோகி தன் கர்மேந்திரியங்களை தேவைப்படும்போது உள்ளடக்கிக் கொள்ளும் சக்தி பெறுகிறார்.

2. பிரயாணத்திற்கு தயாராகும் சக்தி:-சாதாரண மனிதன் இந்த உலகிலுள்ள உறவினர், பொருட்கள் மீதுள்ள பற்றினால் மரணத்தைக் கண்டு அஞ்சுகிறான். ஆத்மா அழியாத ஒன்று, உடலைவிட்டு நீங்கும் ஆத்மா மற்றொரு புதிய உடலை எடுக்க வேண்டியது அவசியம் என்ற ஞானம் இருப்பதால் அவர் என்றும் மரணத்திற்கு தயாராக இருக்கும் சக்தி பெறுகிறார்.



3. சகிப்புத் தன்மை:- எவ்வாறு பழம் சொரியும் மரம் கல்லடியைத் தாங்கிக் கொள்கிறதோ, அவ்வாறே இராஜயோகி எத்தகைய சூழ்நிலையையும் சகித்துக் கொள்ளும் சக்தி அடைகிறார்.

4. ஒத்துழைக்கும் சக்தி:- பரந்த மனப்பான்மை தோன்றுவதால் மறறவர் களுடன் ஒத்துழைத்து எச்செயலையும் சிறப்பாக நிறைவேற்ற முடியும்.

5. முடிவெடுக்கும் சக்தி:- எந்த சந்தர்ப்ப சூழ்நிலையிலும், எளிதாகவும் உடனுக்குடனேயே முடிவெடுக்கும் ஆற்றல் பெறலாம்.

6. பகுத்தறியும் சக்தி:- நகை வியாபாரி வைரங்களின் மதிப்பை அளவிடுவதுபோல், ஓர் காரியத்தின் நல்லது கெட்டது பற்றி பகுத்தறியும் சக்தி கிட்டுகிறது.

7. தாங்கிக் கொள்ளும் சக்தி:- துன்பங்கள், உறவினரின் மரணம், மெய் வருத்தம் போன்றவற்றை தாங்கிக் கொள்ளும் ஆற்றல் கிடைக்கிறது.

8. அனுசரித்துப்போகும் சக்தி: மற்றவர்களின் குண வேறுபாடுகள், மனோநிலை வித்தியாசங்கள் இருந்தாலும், அவர்களின் குணங்களை மனதில் கொள்ளாமல், அவர்களுடன்

அனுசரித்துப் போகும் சக்தியும் பிறக்கிறது.

இவ்வாறு நாம் பெறும் சக்திகள் நமக்கு பலன் அளிப்பதோடல்லாமல், நல்ல சமுதாயத்தையும் உருவாக்குகிறது. இச்சக்திகள் மற்றவர்களுடன் நல்லுறவை வளர்த்துக் கொள்ளவும், நம் தினசரி கடமைகளை சரியாக ஆற்றவும் உதவுகின்றன. மனிதன் தனக்குள் அமைதியை அனுபவித்து, வீட்டிலும், நாட்டிலும் அமைதியை நிலைபெறச் செய்கிறான்.

பிரம்மா - ஆதி மனிதன்

பிரம்மா குமாரி ஈஸ்வரிய விஷ்வவித்தியாலயத்தின் ஸ்தாபகரான பிரஜா பிதா பிரம்மா 2001–ஆம் ஆண்டு 125 வருடங்களை பூர்த்தி செய்கிறார். பிரஜாபிதா என்றால் பிரஜைகளின் தந்தை என்று பொருள். சிருஷ்டி கர்த்தாவிற்கு பிரம்மா என்று பெயர் உண்டு. 1937ல் இவர் தன்னை பரிபூரணமாக இறைவனிடம் அர்ப்பணித்துக் கொண்டு, புதிய உலகம் படைக்கும் இறைவனின் கருவியாகும்போது, இப்பட்டம் அவருக்கு அளிக்கப்பட்டது.

அதுவரை அவர் ஒரு புகழ்பெற்ற நகை வியாபாரியாக இருந்தார். அவருடைய நன்னடத்தையும், வியாபார அறிவும் பெரிதும் போற்றப்பட்டு வந்தது. அவர் தம் 60–வது வயதில் பல திவ்ய காட்சிகளை மனக் கண்ணால் கண்டார். இறைவன் அசரீரியான ஒளியாக அவருக்குக் காட்சி தந்தார். இப்பொழுது உள்ள துன்பம் மிகுந்த உலகின் அழிவையும், பரிசுத்தம், அமைதி மிகுந்த புதிய உலகின் தோற்றத்தையும் கண்டார். இக்காட்சியைக் கண்டதும், தன் உடல், பொருள், ஆவி அனைத்தையும் மனித சமுதாய முன்னேற்றத்திற்கு அர்ப்பணித்து விட்டார்.

ஒரு சாதாரண மனிதனால் இம்மகத்தான காரியத்தைச் செய்ய இயலாது. பரம பிதா பரமாத்மா, எல்லா ஆத்மாக்களுக்கும் தந்தையான இறைவன் இவரைத் தன் கருவியாக பிரம்மாவின் மூலம் மனிதனுக்குத் தேவையான அரசியல், சமூக நலம், மனநலம், சரித்திரம், பூகோளம், இறை அறிவு, ஆதி ஞானம் என்ற பல பாடங்களை நமக்கு போதிக்கிறார். பிரம்மா எப்பொழுதும் தான் மிகச் சிறந்த ஆசிரியரான இறைவனின் மாணவன் தான் என்று தன்னை கூறிக் கொள்வார். அவருடைய எண்ணம், வாக்கு, செயல் ஆகியவை நமக்கு மிகச் சிறந்த அறிவூட்டின. அமைதியின்மை, குழப்பம் ஆகியவை மிகுந்து காணப்படும் உலகில் அவர் அமைதியையும், பரிசுத்தத்தையும் கைக்கொண்டு, தன் தினசரி வாழ்க்கையில் வாழ்ந்து காட்டினார். ஜாதி, மத பேதமில்லாமல் எல்லோருக்கும் அவர் அன்பை வழங்கவே அவர் தந்தையாகப் போற்றப்பட்டு பாபா என்று அன்புடன் எல்லோராலும் அழைக்கப்படுகிறார். இளைஞர்களின் சக்தியை ஆக்கப்பாதையில் செலுத்துகிறார். பெண்களுக்கு தாழ்வான சமூக அந்தஸ்து இருந்த நிலையை மாற்ற அவர்களுக்கு ஆசிரியர், ஆன்மீக வழிகாட்டிகள் என்ற புதிய அந்தஸ்து கொடுக்கப்பட்டது. இன்னும் கூறினால் இந்த ஸ்தாபனம் தொடங்கிய நாளில் இருந்து, உலகில் உள்ள 6000க்கும் மேற்பட்ட அனைத்து கிளை நிலையங்களிலும் பெண்களே நிர்வாகிகளாக உள்ளனர்.

பரமாத்மாவினால் கற்பிக்கப்படும் இராஜயோகம் ஆத்மாவைப் பரமாத்மாவுடன் இணைத்து, பல ஆயிரக்கணக்கான மக்களுக்கு புது வாழ்வு அளித்து, மனித ஒற்றுமை நடைமுறையில் சாத்தியம் ஆகும் என்பதை நிரூபித்துள்ளது.

1969ம் ஆண்டு ஜனவரி மாதம் 18ம் நாள் பிரம்மா பாபா இராஜயோகப் பாதையில் முயற்சியினை சிறப்பாகச் செய்து இந்த ஸ்தூல சரீரத்தை விட்டு உலக சேவை விரைவாக பரவுவதற்காக சூட்சும சரீரத்தை (ஒளிஉடம்பு) எடுத்துள்ளார். மனிதன் தேவனாக மாறும் உன்னத பரிமாணத்தில் கர்மாதீத் நிலை என்று கூறப்படும் இம் மகா நிலையே கடைசி பாடம். ஓம் சாந்தி!!

ஒன்றே குலம் ! ஒருவனே இறைவன் !!

ONE GOD ! ONE RELIGION !!

நிராகார பரமாத்மா ஜீவாத்மாக்களுக்காக பிரம்மா மூலம் படைத்திருக்கும் ஞான வேள்வியை அன்பு பரிசாக ஏற்போமாக.



உலக அமைதி மண்டபம்
ஓம்சாந்தி பவன், மவுண்ட் அபு, இராஜஸ்தான்
UNIVERSAL PEACE HALL,
OMSHANTI BHAWAN, MOUNT ABU, RAJASTHAN